
www.padippakam.com

# கவிக்கோ

காலாண்டுக் கவிதை இதழ்



ஏப்ரல் - ஜூன் 2000

படிப்பகம்

விலை ரூ.15/-

www.padippakam.com



**கலைஞருக்குக் கவிக்கோ விருது**

2000 ஆண்டுக்கான 'கவிக்கோ விருது' மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞருக்கு வழங்கப்பட்டது வாணியம்பாடியில் 29.1.2000 அன்று முத்தமிழ் மன்ற விழாவில், இந்திரா காந்தி பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வா.செ.குழந்தைசாமி விருதை வழங்கிப் பாராட்டிப் பேசினார்.



ரூபாய் முப்பதாயிரத்துக்கான காசோலை வழங்கப்படுகிறது.



நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

# கவிக்கோ

காலாண்டுக் கவிதை இதழ்




**கவிதை**

அபி
இன்குலாப்
பழமலய்
சூரியதீபன்
ஹெச்.ஜி.ரசூல்
இலக்குமிகுமாரன் ஞானதிரவியம்

ஆல்பர்ட்டோ கேயிரே
அதர்வவேதக் கவிதைகள்
எமிலி டிக்கின்ஸன்

**நேர்முகம்**

கவிஞர் சிற்பி

**கருத்தரங்கம்**

நோயென்ன? மருந்தென்ன?
கனல் மைந்தன்
என்.டி.ராஜ்குமார்
நெ.செல்வம்

**கட்டுரை**

கவிஞர் கம்பதாசன் ஓர் எரி நட்சத்திரம்
கவிஞர் முருகுசுந்தரம்

சிலுவையில் தொங்கும் சாத்தான்
கூகி

கானாப்பாடல்கள்
கபிலன்


படிப்பகம்

www.padippakam.com

கவிக்கோ
காலாண்டுக் கவிதை இதழ்

ஏப்ரல் 2000 இதழ்:3

முதன்மை ஆசிரியர்
**அப்துல் ரகுமான்**

ஆசிரியர் குழு
**மீரா**
**புவியரசு**
**பா.செயப்பிரகாசம்**
**இந்திரன்**
**பாலா**
**தமிழ்நாடன்**
**நா.மு.இக்பால்**
**பொன்.செல்வகணபதி**
**அறிவுமதி**

ஓவியர்
**புகழேந்தி**

வடிவமைப்பு
**கவிதா**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | ரூ. | 15 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 60 |
| வெளிநாடு | ரூ. | 160 |
| ஆயுள் கட்டணம் | ரூ. | 1000 |

**கவிக்கோ**
20, முதல் கடல்வழிச் சாலை
வால்மீகி நகர்
சென்னை – 600 041.
தொலைபேசி: 4417737

# தமிழ்க் கவிதையைத் தரணிக்குத் தருவோம்.

இந்தியாவின் பிற மொழிக் கவிஞர்கள் ஒருவரைப் பற்றி மற்றவர் அறிந்து வைத்திருக்கின்றனர்.

தமிழ்க் கவிஞர்களைப் பற்றி மட்டும்தான் அவர்கள் அறியாதிருக்கின்றனர்.

இது அவர்கள் குற்றமில்லை. நம் குற்றம்.

பிற மொழியில் வெளிவரும் கவிதைகள், இந்தியிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்படுகின்றன. இதனால் அந்தக் கவிதைகளைப் பற்றியும் கவிஞர்களைப் பற்றியும் இந்தியா முழுவதும் தெரிந்து கொள்கிறது.

தமிழ்க் கவிதைகள் மட்டும் அப்படி மொழி பெயர்க்கப்படுவதில்லை.

இதனால் தமிழில் கவிஞர்கள் இல்லையோ என்ற அவப்பெயர் ஏற்பட்டிருக்கிறது. இந்திய அரங்கில் தமிழ் தலை குனிந்து நிற்க நேரிடுகிறது. தமிழுக்குக் கிடைக்க வேண்டிய அங்கீகாரமும், விருதுகளும் கிடைக்காமல் போய்விடுகின்றன.

நம்மைப் போல் மொழிப் பற்று உடையவர்கள் யாருமில்லை என்கிறோம். ஆனால், தமிழுக்குச் செய்ய வேண்டிய இத்தகைய இன்றியமையாத பணிகளில் நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம்.

பிற மொழி மாநிலங்களில் இருக்கும் சாகித்திய அகாதெமிகள் இந்த மொழிபெயர்ப்புப் பணியைச் செய்கின்றன. மாநில அரசுகளும் [illegible]வுகின்றன.

[illegible]டில் இப்போது சாகித்திய [illegible]தமி போன்று ‘தமிழ் இ[illegible]யச் சங்கப் பலகையின் குறள் பீடம்’ ஒன்றைத் தமிழக அரசு அமைத்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

தமிழின் மிகச் சிறந்த கவிஞர்களின் கவிதைகளை இந்தியிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து இந்திய அளவிலும், உலக அளவிலும் அறிமுகப்படுத்த வேண்டிய இன்றியமையாத பணியைக் குறள் பீடம் செய்யும் என்று நம்புகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

# கருவிலும், மண்ணிலும் கூட்டிலும் முளைத்த சிறகுகள்

இன்குலாப்



தாயின் கருவில்
சிவந்த முளையாய்,
பாத்திகள் எல்லாம்
பச்சைச் சிசுவாய்...

கொப்புள் கொடி விதைக்கப்பட்ட
கொல்லை முற்றத்தில்...
பிறப்பின் மிச்சங்களாய்
நூறு
பசு முடிகள்.

எல்லா இலைகளும்
உதிர்ந்த கிளையில்
இறுதியாய்ப் பூத்தது
வானவில்.

வண்ணச் சருகுகளாய்
மண்ணில் உதிருமுன்
ஏன் வரவில்லை
வண்ணத்துப் பூச்சி?

பூவிலிருந்து திரும்பும்
தேனீயின் ரீங்கரிப்பில் இருந்தது
உன் பெயரின்
இனிமை!

கரையிலிருந்து மீளும்
அலையின் ஓலத்தில் இருந்தது
உன் பெயரின்
உப்பு!

இருளின் அடர்த்தியில்
அடங்க மறுக்கும்
பெருமூச்சில் இருந்தது
உன் பெயரின்
சூடு!

இத்தனைக்கும் பிறகு
தன்னியல்பில் பூக்கிறது
காட்டுமல்லி!
தன்னியல்பில் கரைகிறது
காக்கை;
தன்னியல்பில் இல்லை
கவிதை!

மேற்கிலிருந்து வந்த பறவை
வீழ்ந்தது எம் கிளையில்
ஒரு
காகிதப் பட்டமாய்...

முளைத்த சிறகுகளுடன்
கிழக்குக் கூட்டில்
முட்டி மோதும்
நடவுப் பாட்டு!



படிப்பகம்

www.padippakam.com

## திருமுகம்

■ கவிக்கோ இதழ் இரண்டில் ஹெச்.ஜி.ரசூல் அவர்கள் 'மாற்றுப் புராண மரபுகளும் தலித் கவிதையும்' என்ற தம் விவாத மேடைக் கட்டுரையில் சொன்ன சில கருத்துக்கள் தொடர்பாக நான் சில செய்திகளைச் சொல்ல விரும்புகிறேன். 'இந்தியச் சூழலில் அறிவு உற்பத்தி என்பது சாதிப்படி நிலைகளை உருவாக்கி, உறுதிப்படுத்தி வர்ணாசிரமமாகவும் செயல்பட்டிருக்கிறது... சமச்சீரற்ற வளர்ச்சிக்கும்... உறுதுணை புரிவதாகவும் நிகழ்ந்துள்ளது' என்கிற இவர் கருத்தில் அறிவு உற்பத்தி என்பது மேட்டுக்குடியில் மட்டுமே உருவாகும் என்ற கருத்து தொனிக்கிறது. ரசூல் சொல்கிறபடி இந்தியாவில் அறிவு வளர்ச்சிக்கும் சமச்சீரற்ற வளர்ச்சிக்கும், சாதி, வர்ணாசிரமம் மட்டும் காரணமாக அமையவில்லை. ஒவ்வொரு காலகட்டத்திற்குமான பொதுக்கருத்தியல் (Epi-Phenomenon) சுற்றுச்சூழல் (Environment) உள்ளூர் தட்பவெப்பம் (Eco-type) பருவகாலம், இயற்கை வளம் அனைத்தையும் தொழில்நுட்பப் பின்புலத்தின் கண்ணோட்டத்தில் கணக்கில் எடுத்துக் கொண்டு அறிவு வளர்ச்சியைப் பார்க்க வேண்டும். இவர் பார்வையில் அறிவு வளர்ச்சி என்பது மேட்டுக்குடியினருக்கு மட்டும் சொந்தமான ஒன்றாகத் தெரிகிறது. ஆனால், வரலாற்றுக் காலத்தில் அறிவு வளர்ந்த விதமோ வேறுவிதமாய் உள்ளது. சாதியம், வர்ணாசிரமம் என்பதெல்லாம் அறிவாகக் கருதப்பட மாட்டாது. சூன்யமாகவே கொள்ளப்படும். இடைக்கால வரலாற்றின் மத்திய ஆசியப் பகுதியை ஆட்டிப்படைத்த செங்கிஸ்கானின் பரம்பரையினர் அப்போதைய காலகட்டத்தின் ஆளும் வர்க்கத்தார் கணிப்பில் ஒரு நாடோடிக் கும்பல். ஆனால், அந்தத் தொல்குடி மக்களின் கொரில்லாப் போர்த்தொழில் நுட்பத்தையும், வெடிமருந்தினைப் பயன்படுத்திய அறிவுத்திறனையும், போருக்கான குதிரை வளர்ப்பு முறையையும் வேறு எந்த மேல்குடி கொம்பனாலும் வெல்ல முடியவில்லை. புத்தகங்களில் பதிவு செய்யப்பட்ட கருத்துக்களை மட்டும் அறிவாகப் பார்ப்பதை தவிர்த்து அன்றாட வாழ்க்கை முறையில் மக்களிடம் பயன்பாட்டில் இருக்கும் தொழில்நுட்ப அறிவினையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மிகச் சிறந்த சங்கீத மேதைகளாக அறியப்பட்ட பண்டிட் ரவிசங்கராலோ, வீணை பாலச்சந்தராலோ, டி.என்.இராஜ ரத்தினம் பிள்ளையாலோ அவரவர் வாசிப்பதற்கான இசைக்கருவியினை செய்திருக்க முடியாது. ஏனென்றால், அக்கருவிகளைச் செய்யும் தொழில்நுட்பம் அவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. அவற்றை 'சுதியும் லயமும்' அறிந்த இசைவினைஞர்களால் மட்டுமே செய்ய முடியும். ஆனால், அவர்கள் சமூகத்தின் மேல்குடி நிலையில் இருந்ததில்லை. ஏனென்றால், அவர்கள் படிப்பாளிகள் இல்லை; தொழில்நுட்ப அறிவாளிகள்.



இன்றைக்கு இசையின் தொப்புழ்க் கொடியாகக் கருதப்பட்டு, ஐந்து நதிகள் பாயும் திருவையாற்றில் ஆண்டுதோறும் இசைவிழா எடுக்கப்படுகிறது. ஆனால், பல்லவர் கால இசைக் கல்வெட்டு வறண்ட பூமியான புதுக்கோட்டை வட்டாரத்தின் குடுமியான் மலையில் வெட்டப்பட்டுள்ளது. நீர்ப்பாசனமோ சமவெளிப் பகுதியை விடவும் வறண்ட பகுதியில் மிகவும் சிக்கலாகவும் தொழில்நுட்பம் பொதிந்ததாகவும் உள்ளது. கோயில்கள் வேண்டுமானால் மேட்டுக்குடி மக்களுக்காக கட்டப்பட்டிருக்கலாம். ஆனால், அவற்றைக் கட்டிய அறிவியல் தொழில்நுட்பம் உழைக்கும் சமூகத்தினுடையது. எல்லாக் காலத்திலும் அறிவும் தொழில்நுட்பமும் அவர்களிடம் இருந்தே பிறக்கிறது. அவற்றை லாவகமாகப் பயன்படுத்துபவர்கள் வேண்டுமானால் படிக்கும் வர்க்கத்தாராக இருக்கலாம்; அறிவு அவர்களுக்குச் சொந்தமில்லை. குந்திக் கொண்டு தின்றால் அறிவு வராது; சமூக ஈடுபாட்டில்தான் வரும்.

**- முனைவர் கி.இரா.சங்கரன்,**
**கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.**

■ அப்துல் ரகுமான் பக்கங்கள் - பகுதியில் இடம்பெற்ற 99 நோபல் பரிசு பெற்ற ஜெர்மானியக் கவிஞர் குண்ட்டர் க்ராஸின் அறிமுகமும், அவர்தம் படைப்பாக்க இயல்குறித்த அணுகுமுறையும் நுட்பமாக வெளிப்பட்டது. இதனை ஒரு துவக்கமாகக் கொண்டு இதற்கு முந்தைய ஆண்டுகளில் இத்தகைய பரிசு பெற்ற மற்றும் முக்கிய கவிஞர்களை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தலாம்.

ஜோசப் ப்ராட்ஸ்கி, பிரைமாலெவி, அக்டோவியாபாஸ், மிராஸ்நெல் ஹோலூப், விஸ்லாவா சிம் போர்ஸ்கா - என இது தொடரலாம். இத்துடன் கவிதை பற்றிய பின் நவீனத்துவ கோட்பாடுகளையும் பரிசீலனைக்காக முன்வைக்கலாம். ரூட்லெஜ்ஜின், New Accents - தொடர் வெளியீட்டில் இடம்பெற்ற ஆன் டெனி ஈஸ்தாப்பின், "Poetry as Discourse" என்ற நூலிலிருந்து கூட இதற்கான விவாதத்தைத் துவக்கலாம்.

'இணையக் கவிதை'ப் பக்கம் கவிதைகளோடு, வாழ்வுக் குறிப்பும் இடம் பெறுவது (யஹூதா அமிச்சாய்) இதழின் உள்ளடக்கத்திற்கு வலிமை சேர்க்கிறது.

**- ஹெச்.ஜி.ரசூல், தக்கலை.**

■ இதழ் சிறப்பாகத் தயாரிக்கப் பட்டிருக்கிறது. வெளிப்படையான விமரிசனங்கள் தேவையாக இருக்கின்றன. குழாயடிச் சண்டையாக இல்லாமல் நடுநிலையுடன் திறனாய்வுகள் வெளிவரக் கவிக்கோ உதவத்தான் வேண்டும்.

**- பேராசிரியர் த.பழமலை, விழுப்புரம்.**

■ 'கவிக்கோ' - ஜனவரி 2000 இதழ் சிறப்பாக வந்திருக்கிறது; கனமும் கூடியிருக்கிறது. இதழின் 19 ஆம் பக்கத்தில், 'கவிதையாக்கப் பயிலரங்கம்' பற்றிய செய்தியில், புதுக் கல்லூரி மாணவர் அ.உபயதுல்லா எழுதியுள்ளதாக வெளியாகியிருக்கும்,

'ஒன்றாக்கும் மழை
குடைக்குள்
இருவர்'

என்னும் ஐக்கூவைக் கண்டு அதிர்ந்தேன். அந்தக் கவிதை எனது 'ஐக்கூ அருவிகள்' எனும் நூலில் 94 ஆவது கவிதையாக அச்சாகியுள்ளது.

**- அமுதபாரதி, சென்னை.**



படிப்பகம்

www.padippakam.com

■ கவிதைப் புத்தகங்களுக்காக மட்டும் ஒரு நூலகம், அதற்குள் அமர்ந்து படிக்கின்றது போல் ஒரு உணர்வை ஏற்படுத்துகிறது, கவிக்கோ இதழ். உலகக் கவிதைகளை இவ்வளவு சிறப்பாய் வேறு எவராலும் தொகுக்க முடியாது.

கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் கவிதைகளில் இருக்கும் எளிமை படிப்பவர்களை பயமுறுத்தாத தன்மை, கவிக்கோ இதழின் ஒவ்வொரு பக்கமும் இருக்கிறது.

- குவைரச்சந்திரன், திருச்சி.

■ தமிழிலக்கியமும், கவிதையும் குழு வடிவம் கொண்டு சிறையில் தள்ளப்பட்டிருக்கும் காலக்கட்டத்தில் கவிக்கோவின் வருகை புதிய வடியலைத் தரவேண்டும். ஒவ்வொரு பத்திரிகையும் ஒரு குறிப்பிட்ட வடிவத்தை மட்டுமே கவிதையாக ஏற்கும் மனோபாவம் விடுத்து கவிதையின் அத்தனை முகங்களையும் கவிதையாக ஏற்கும் தனித்தன்மையை ''கவிக்கோ' ஏற்க வேண்டும்.

நவீனத்திற்கும் சங்க காலத்திற்கும் இடையில் 'கவிக்கோ' எழுப்பும் பாலமும், பிறமொழிக் கவிதைகளின் அறிமுகமும் தமிழ்க் கவிதையுலகுக்குக் 'கவிக்கோ' ஏதோ ஒரு புதிய பாதையை வகுக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. கவிக்கோ வெற்றிபெற்றே ஆக வேண்டும், தமிழின் தேவைவ்ய, கவிதையின் தேவையை கவிக்கோவாவது நிறைவேற்ற வேண்டும்.

- இந்தியன் சமஸ், மன்னார்குடி.

■ அப்துல் ரகுமானின் 'காலநதி மீன்களை' அடுத்த நூற்றாண்டு வரை அசை போட்டுக் கொண்டிருக்கலாம்.

- இளந்தமிழ்த் தொண்டன்,
அதிராம்பட்டினம்.

■ "கவிக்கோ" சாளரத்தின் வழியே உலகக் கவிதைகளை உச்சரிக்க வைத்து விட்டீர்கள்! மூடியே வைத்த "பரம்பரைச் சொத்தை"ப் பந்தி வைத்துள்ளீர்கள். உண்டபின்னும் பசி எடுக்கிறதே. உவமைக் கவிஞர் சுரதாவின் மின்னல் வசனத்தில் மிதந்து கிடக்கும் நெருப்புக் கவிதைகள், அந்தக்கால நிழற்படங்களைக் கூட நேசிக்க வைத்துவிட்டது. 'கவிக்கோ' படிப்பதற்கு மட்டும் அல்ல. பாதுகாக்க வேண்டிய கருவூலமாய் உருப்பெற்று நிற்கிறது.

- சோழபுரம் தாஹா, சென்னை.

■ மாற்றுப் புராண மரபுகளும் - தலித் கவிதையும் என்கிற ரசூல் அவர்களின் கட்டுரையைப் படித்தேன். தலித் கவிதை ஒற்றை அர்த்தத்திற்குள் மட்டுமே இயங்குகிறது. அது உணர்ச்சிப் பிரவாகங்களாகவும், பிரகடனங்களாகவும், மட்டுமே இயங்குகிறது - என்று மொத்த தலித் கவிதைகளையும் கவிஞர்களையும் கிண்டல் செய்கின்றனர், தலித் எதிர்ப்பாளர்கள். இதுபோன்ற கவிதைகளை கோஷக் கவிதையென்றும், வார்த்தைகளின் கூட்டமென்றும் கேலி செய்வதுண்டு. இதே விஷயத்தை ரசூல் சூசகமாகக் கேலி செய்கிறார். வானம்பாடி கவிஞர்களுக்கும் இதுபோன்ற விமர்சனத்தை இவர்கள் முன் வைத்தார்கள் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

ஆதி மக்களின் நம்பிக்கைகள், ஆவி பற்றிய நம்பிக்கைகள், பேய் பற்றிய பதிவுகள் என்றெல்லாம் சொல்கிறாரே இதுபோன்ற பதிவுகளை முதலில் கவிதைகளில் பதிவு செய்தது என்.டி.ராஜ்குமார்தான். வரிசையாகச் சொல்லப் போனால், "தெறி" கவிதைத் தொகுப்பு, தலித் இதழில் வந்த என்.டி.ராஜ்குமாரின் பன்னிரு கவிதைகள், "ஒடக்கு" கவிதைத் தொகுப்பு, இவற்றை மிக லாவகமாக இருட்டடிப்புச் செய்கிறார். இவற்றைத்தான் ஃபூக்கோ அவர்கள் அறிவின் அராஜகம் என்றும், எழுத்து அராஜகம் என்றும் குறிப்பிடுவார். நிலவியல் மொழித் தொன்மங்களிலிருந்து படைப்பாக்க நுட்பத்தோடு பல தளங்களில் இயங்குவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று சொல்கிறாரே. நாங்கள் நம்பிக்கையற்றவர்களா அல்லது இது போன்ற கவிதைகள் இன்றும் வரவில்லையா?

- மலையரசன், குலசேகரம்.

■ தமிழ்க் கவிதை உலகில் விடிவெள்ளி உதித்திருக்கின்றது. தமிழுலகத்தில் நிலவும் தரித்திரத்தைப் போக்க எளிமையோடு இனிமை சேர்ந்து தமிழணங்கின் அழகு முகத்தைக் கவிதைச் சரமாய்க் காவியம் புனையக் கவிக்கோ பிறந்தது கற்கண்டாய் இனிக்கிறது. தமிழ் இனிச் சிரிக்கும். தரணியெல்லாம் சிறக்கும்.

- தா.மு.ஜக்கரியா, எலந்தங்குடி.

■ தமிழ்க் கவிதைக்கென்று ஓர் இலக்கிய இதழ் "இணைய"யுகத்திலும் தோன்றிடவில்லையே என்று வேதனைப்பட்டுக் கொண்டிருந்த எம்போன்றோர்க்குக் "கவிக்கோ" - இதழ் பெரும் ஆலமர நிழலாக இளைப்பாறுதல் தந்தது. வாழ்க பல்லாண்டு.

தமிழ் இனம், தமிழ் மொழி இரண்டுமே புறக்கணிக்கப்படுகின்ற நிலை வேகமாக நடைபெற்று வரும் அவலச் சூழலில் கவிக்கோ போன்ற இதழ்கள் ஓரளவாவது அந்நிலை நீக்கிட உதவும் என்பது உறுதி. 'கவிக்கோ' இதழில் எதிர்வரும் காலங்களில் "புலம் பெயர்ந்த தமிழர்களின்" கவிதை ஆக்கங்களுக்கென்று ஒரு பக்கம் "இட ஒதுக்கீடு" செய்திட அன்புடன் கோரிக்கை வைக்கின்றேன்.

- கி.முருகன், மாப்பிள்ளைக்குப்பம்.

■ அன்னம்விடு தூது, சுபமங்களாவுக்குப் பின் புதியதாக ஒரு பசுஞ்சோலையாகக் கிடைத்த இதழே கவிக்கோ. பிறநாட்டு நல்லறிஞர் படைப்புகளைத் தமிழுக்குக் கொண்டுவரும் பணி தொடர்க.

- சோ.முத்துமாணிக்கம், பழனி.

■ "கவிக்கோ" இதழ் இரண்டாம் இதழ் என்றே சொல்ல முடியாது. முன்னணி இதழாக, கவித்துவத்திற்கு முக்கியத்துவம் தரும் முதன்மை இதழாக, கவிக்கோவை முதன்மை ஆசிரியராகக் கொண்டு வரும் தரமான இதழாக, வளரும் கவிஞர்களின் கையேடாகக் 'கவிக்கோ' திகழ்வது பாராட்டுக்குரியது.

- இரா.இரவி, மதுரை.

■ 'புரட்சிக்கவி' பாரதிதாசன், உவமைக் கவிஞர் சுரதா, கவியரசு கண்ணதாசன் வழியில் இல்லாமல் சற்றே வித்தியாசமான இதழ் கவிக்கோ என்பதில் உள்ளபடியே அகம் மகிழ்கிறேன்.

- செல்லம்மாள் கண்ணன், சென்னை.


படிப்பகம்

www.padippakam.com

### போர்ச்சுகீசிய கவிதை

# ஒரு மந்தைக்காரனிடமிருந்து

### ஆல்பர்டோ கேயீரே

நேற்று மதியம் நகரத்தான் ஒருவன்
சத்திரத்து வாசலில் பேசிக் கொண்டிருந்தான்
என்னிடமும் பேசினான்.

நியாயத்தைப் பற்றியும், நியாயத்திற்கான போராட்டம்
பற்றியும், அல்லலுறும் தொழிலாளர் பற்றியும்,
குறையாத உழைப்புப் பற்றியும், ஏழ்மை பற்றியும்
முகத்தைத் திருப்பிக் கொள்ளும் பணக்காரர் பற்றியும்
பேசினான்.

அவன் என்னைப் பார்த்தபோது எனது
கண்களில் கண்ணீர் வழிந்தோடியது.



ஏற்றுக் கொள்வது போல் சிரித்தான்.
அவனுடைய வெறுப்பை நான் உணர்வதாகவும்
அவன் உணர்வதாகச் சொல்லும் கருணையை
நான் உணர்வதாகவும் நினைத்துக் கொண்டு.

(ஆனால், அவன் பேசியது என் காதுகளில் விழவேயில்லை. மனிதர்கள் பற்றி என் கவலை எனக்கு. அவர்கள் துன்பமும் துன்பப்படுவதாகச் சொல்வதும்? என்னை மாதிரி இருக்கச் சொல்லுங்கள். அவர்களைத் துன்பம் அணுகாது. உலகின் எல்லாப் பிரச்சினைகளும் நாம் ஒருவருக்கொருவர் எப்படி இருக்கிறோம் என்பதைப் பொறுத்ததே. நல்லது செய்தாலும், தீயது செய்தாலும் நம்முடைய ஆன்மாவும், வானமும், பூமியும் நமக்குப் போதும். இதைத் தவிர வேறு என்ன இருக்கிறது? மகிழ்ச்சியில்லாமலிருக்க.)

மனிதர்களின் நண்பன் பேசிக் கொண்டிருந்தபோது
எதைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன் நான்.
(கண்களில் கண்ணீர் வரும்படியாக.)

மாலை நெருங்கும்போது தூரத்தில் கேட்கும்
பசுக்களின் கிண்கிணி மணியோசை, சிறிய
மாதா கோயில் மணியோசை போலில்லாமல்,
தொழுவதற்குக் கூப்பிடுகிறது, மலர்களையும்,
நீரோடைகளையும் என்னைப் போன்ற
எளிமையான ஆன்மாக்களையும்.

(கடவுளுக்கு வாழ்த்து நான் நல்லவனாக இல்லாததற்கு) சுயநலமான பூக்களைப் போலவும், ஆறுகளைப் போலவும் அதனதன் வழிகளிலே, வேறெதுவும் தெரியாமல், பூக்கவும், பாயவும் மட்டுமே எனக்குத் தெரிவதற்கு. உலகத்தில் செய்யக்கூடிய ஒரே காரியம் இதுதான், தெளிவாக உயிர்வாழ்வது. அதைப் பற்றி நினைக்காமலே அதை எப்படிச் செய்வது எனத் தெரிந்து கொள்வது.)

அந்த மனிதன் மௌனமாகி விட்டான், சூரிய
மறைவைப் பார்த்துக் கொண்டு. ஆனால், சூரிய மறைவு
என்ன அர்த்தத்தைக் கொடுக்க முடியும். வெறுக்கவும்
விரும்பவும் செய்யும் ஒருவனுக்கு.

**ஆங்கிலம் வழித் தமிழில்: ஆர்.ராஜகோபாலன்**



படிப்பகம்

www.padippakam.com

# மாலை

**அபி**



இலியா போஜ்னிடஸ்கோ

## அற்று

பாலைப் பொழுதைப்
போர்த்துக் கொண்டு கிடக்கிறோம்

செம்மண் பரப்பை
குத்துச்செடி விரிவை
பாறைக் கும்பலை
மேலிட்டு
மூடிப் பரப்பிக்கொண்டு கிடக்கிறோம்

எட்டித் தொடும் எளிமையுடன்
கடல்நடுத் தனிமையை
இணைத்துக் கிடத்தியிருக்கிறோம்

சாவு சொன்னதை
ஸ்வரப் படுத்தி
படுக்கை வசமாக
அசைவு தந்திருக்கிறோம்

வலித்தது என்று
மாலையைக் கீழே இறக்கிவிட்டிருக்கிறோம்

அடிவான உராய்வில்
முகம் பதிய
அவிதலில் திளைத்து
அற்று
இருக்கிறோம்

## திரும்புதல்

புரண்டு படுக்க இடமின்றி
ஒற்றையடிப்பாதை
சலிக்கிறது

திரும்புதலின் குற்றோசைகள்
படிந்து இறங்கி
அடிமண்ணின் உளைச்சலில்
புதைகின்றன

வாசனைகள் இருண்டு
அதனாலேயே
வடிவம் பெறுகின்றன

ஆடுகள் மலையிறங்கி வருகின்றன.



நிகொலாய் கிரியிலோவ்

பேச்சுக்கு முந்திய திருப்பம்
தயக்கங்களால் நிரம்பிக் கிடக்கிறது

வானம்
சுற்றிலும்
வழிந்து இறங்குகிறது

தொலைவில்
விளக்குப் புள்ளிகளைத்
தன்மீது தரிக்கும்
ஊரின் மாலை

இங்கே
என்னருகே
எனது மாலை
பிரபஞ்ச சோகம் திளைத்து

## என் மலை

வாசலில்
சிறுசிறு சந்தடிகளுடன் இசைந்து
வெளிச்சம் குறைந்துகொண்டு வரும்

தொடுதல்களைக்
கணக்கிட்டுக் கொண்டிருக்கும் இருப்பு
கலையும்

வெளியேறத் துடிப்பேன்

ஆனால்,
கதவு சுவர் கூரை
வெளியேறி மறையும்.

வெளியேறுதல் இல்லை என்றானபின்
எனக்காகக் காத்திருந்த என்மலை
சற்று அசைந்து குவடுகளால்
எனதொரு எல்லையை வருடும்

இங்கே படரும் இருளைச்
சிறிது சுண்டினால் கூட
என்மலை எனக்குப் பதில் சைகை தரும்

என்னைச் சுற்றி நிரம்பும்
காட்டுத் தனிமை

நிதானமாய்ப் பிறந்து கொண்டிருப்பேன்
எனது மலைவேரின்
ஒரு சிறு நுனியிலிருந்து



படிப்பகம்

www.padippakam.com



# கவிஞர் சிற்பி



**நேர்கண்டவர்: கவிஞர் தேனரசன்**

■ தங்கள் பள்ளிக்கல்வி கேரளத்தில் மலையாள மொழியில் நிகழ்ந்திருக்கிறது. அப்படியானால், தமிழ் இலக்கிய ஆர்வம் எப்போது, எப்படி மலர்ந்தது?

கேரளத்தில் பள்ளிக் கல்வியில் தமிழ் மொழிப் பாடம் தவிர மற்றவை மலையாளத்தில் நடைபெற்றன. தமிழ்நாட்டில் கல்லூரிப் படிப்புக்கு வந்த பிறகுதான் தமிழ் இலக்கியம் என்னைத் தழுவிக் கொண்டது. எனினும் என் இலக்கிய உணர்வை மலையாள மொழி தொட்டுத் தடவித் தூண்டி விட்டு விட்டது.

■ உங்கள் கவிதை உணர்வை வளர்த்த உந்து சக்திகளாக யாரை அல்லது எவற்றைக் குறிப்பிடலாம்?

எனக்கு அகரம் முதல் னகரம் வரை எல்லாமே பாரதிதான். நான் ஒரு கவிதையில் குறிப்பிட்டிருப்பதைப் போல, 'எனக்கவனே குரு, அவன் எழுத்தே வேதம், வார்த்தை சட்டம், கவிதை சத்தியம்.'

பதினைந்து வயதில் கல்லூரியில் சேர்ந்து விட்டேன். பாடப் புத்தகம் வாங்கப் போனபோது புதிதாகப் பாரதி பிரசுராலயம் வெளியிட்ட 'பாரதியார் கவிதைகள்' நூலை வாங்கினேன். அந்த ஆனந்த வெள்ளத்திலிருந்து அப்புறம் நான் கரையேறவில்லை.

எனினும் பாவேந்தர் கவிதைகளும் எனக்கு எழுதும் துணிவைத் தந்தன. ஜமால் முகமது கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் கா.அப்துல் கபூர், அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் மு.அண்ணாமலை இருவரும் கவிஞர்கள், என் ஆசிரியர்கள். அவர்கள் தந்த ஊக்கம் என் கவிதைப் பயிருக்கு உரமாயிற்று.

■ உங்கள் கவிதைப் பயணம் அறுபதுகளில் தொடங்கி விடுகிறது. 'நிலவுப் பூ', 'சிரித்த முத்துக்க'ளைத் தொடர்ந்து 'ஒளிப்பறவை'யில் ஊற்றெடுக்கும் முற்போக்குச் சிந்தனை 'சர்ப்பயாக'த்தில் அக்கினிப் பிரவாகமாகப் பெருக்கெடுத்து விடுகிறதே. அது மார்க்சியத் தத்துவத்தின் தாக்கத்தால் என்று கொள்ளலாமா?

என் முதல் தொகுதி 'நிலவுப் பூ'க் காலத்திலேயே நான் மார்க்சியச் சிந்தனைகளில் ஈடுபாடு கொண்ட



படிப்பகம்

www.padippakam.com

வன். அதன் சாயலையும், சாரலையும் பின்வந்த தொகுதிகளிலும் பார்க்கலாம்.

ஆனால், வெளிப்படைப் பிரசாரமாக இல்லாமல் வாழ்வியல் சிக்கல்களினூடே - குறியீடுகளினூடே - கதை நிகழ்வுகளினூடே எதையும் சொல்ல வேண்டும் என்பதில் எனக்கு அக்கறை உண்டு.

மார்க்சியம் இலக்கியத்தைப் பொறுத்தவரை அழகியலோடு பின்னி வரும் ஒரு வாழ்வியல் பார்வை, அந்தப் பார்வை ஒரு தனி மனிதன் என்ற முறையில் என்னையும், என் சமூகப் பிரதிபலிப்பு என்ற வகையில் என் எழுத்தையும் மிகவும் செழுமைப்படுத்தி இருப்பதாகவே உணர்கிறேன்.

■ வானம்பாடி இயக்கத்தில் உங்கள் பங்கு, பணிகள் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லுங்களேன்.

புவி, ஞானி, இளமுருகு, அக்னி புத்திரன், மேத்தா, கங்கை, ஜன.சுந்தரம். சி.ஆர்.ரவீந்திரன், தேனரசன், பாலா எனப் பல தோழர்களோடு இந்த இயக்கத்தை வார்த்தெடுப்பதில் நான் தீவிரமாகப் பங்கு கொண்டேன். இவர்களும் இன்னும் பலரும் கவிதையோடும் இலக்கியத்தோடும் முன்னமே நெருக்கம் கொண்டவர்கள். ஒரு பூப்புப் பருவத்தில் ஒன்றாகி, உடனாகி இருந்தோம். எனினும் இன்று சிலர் தான்தோன்றித்தனமாகப் பேசுவதுபோல இந்த இயக்கம் வெறும் சிவப்புப் போர்வை போர்த்துக் கொண்ட துணி மூட்டை அல்ல. ஒவ்வொருவருக்கும் தங்களுக்கே உரிய தனித்தன்மைகளோடு அடையாளப்படுத்திக் கொண்டவர்கள் - அந்தச் சுதந்திரம் வானம்பாடியில் இருந்தது.

இந்த இயக்கத்தின் மையத்தில் இருந்தவர்களில் நானும் ஒருவன். இதழை ஆசிரியராக இருந்தும் நடத்தி இருக்கிறேன். மற்றவர்கள் நடத்தும் போது கனத்த பங்காளியாகவும் இருந்திருக்கிறேன். அது குறித்து கர்வத்தோடு பெருமைப்பட்டுக் கொள்ள எனக்கு உரிமை உண்டு.

தமிழ்க் கவிதை வரலாற்றில் வானம்பாடி ஒரு சுந்தரகாண்டம்.

■ இதிகாச புராணக் கூறுகளை உத்திகளாகப் பயன்படுத்தி இருக்கிறீர்கள். எனினும் பக்தியுணர்வு உங்களைப் பற்றாமல் போனது எப்படி?

'படி கொண்ட கீர்த்தி இராமாயணம், பாரதம் என்னும் பக்தி வெள்ளம் குடி கொண்ட' நெஞ்சம் என் தந்தையாருடையது. நானும் இளம் வயதில் கடும் முருக பக்தன். என் மார்க்சியத் தொடர்பு என் பிரமைகளை உடைத்தெறிந்து விட்டது. ஆயினும் கம்பனும், வில்லியும், சேக்கிழாரும் என் மரபின் மூலவர்கள், அவர்கள் தமிழின்றி, இலக்கியக் கலையின்றி நான் ஏது?

■ உங்கள் நெஞ்சில் கனத்த ஒரு சோகச் சுமையாக இருந்து, புதுக்கவிதைக் காவியமான 'மௌன மயக்கங்கள்' நூலுக்குப் பின்புலமான ரகசிய மூலம் என்ன?

'அந்தரங்கங்கள் புனிதமானவை' அல்லவா? என் 'தன் வரலாறு' வரும்போது இந்தப் புதிர் விடுபடக் கூடும்.

■ 'சூரிய நிழல்' தொடங்கி, 'பூஜ்யங்களின் சங்கிலி' வரையிலும், முன்னர் வந்த தொகுதிகளில் கொழுந்து விட்டெறிந்த சமூக உணர்வு மெல்ல மெல்லக் குளிர்ந்து தணிந்து போனது போல் தோன்றுவது உண்மைதானா?

இல்லை. ஆத்திரம் ஆதங்கமாகிறது. கோபம் நிதானத்துக்கு வருகிறது. கோடை காலம் போய் மழைக்காலம் வருகிறது. அப்படித்தான் என் கவிதைகளும் உருமாறி இருக்கின்றன. சமூகத்தையும், மனிதனையும் மறந்து படைப்பாவது எழுத்தாவது! சூரிய நிழலில் இருப்பின் தவிப்பு கவிதையாகி இருக்கிறது. ஒரு கிராமத்து நதியில் மனித அலைகள் விம்முகின்றன. பூஜ்யங்களின் சங்கிலியில் வயலில் வேர்கள் நோக்கிய ஒரு தேடல் வடம் பிடிக்கிறது.

■ மலையாள இலக்கியப் படைப்புகளை, நாவல்களை கவிதைகளை அழகாகத் தமிழில் தந்திருக்கிறீர்கள். உங்கள் சிந்தனைகளை மலையாள இலக்கியம் வளப்படுத்தி இருக்கிறதா?

நிச்சயமாக. ஒவ்வொரு நாளும் புதிய படைப்புகளால் தன்னைச் செழுமைப்படுத்திக் கொள்ளும் மலையாளக் கவிதைகளோடும், நாவல்களோடும் நான் உயிர்த் தொடர்பு கொண்டிருக்கிறேன். என் சொல்லாக்கங்களும், மொழி நடையும் கூட மலையாளத் தொடர்பால் மாறுதல் பெற்றிருக்கின்றன. பிற மொழிப் படைப்புகளை உடனுக்குடன் மொழி பெயர்த்துக் கொள்ளும் மலையாள எழுத்தாளர்களின் திறன் என்னை ஆச்சரியப்பட வைக்கிறது. பல உலக எழுத்தாளர்களை மலையாள வழியாக நான் உணர்ந்து கொண்டிருக்கிறேன்.

■ க.நா.சு. கருதுவது போல் இலக்கியத்துக்கு ஒரு இயக்கம் தேவை என்று எண்ணுகிறீர்களா?

இலக்கிய வளர்ச்சி தேய்மானம் காண்கிறபோதெல்லாம் அதனைப் புதுப்பிக்க இயக்கம் தேவைதான். இயக்கம் என்றால் பாரதிபோல ஆளுமை மிக்க ஒருவரின் செயலாற்றல் கூட இயக்கம்தான். சுற்றிலும் காணப்பட்ட அந்நியமாதலை எதிர்த்து



படிப்பகம்

www.padippakam.com

உருவான வானம்பாடி இயக்கம் பல படைப்பாளிகளின் ஒருங்கிணைந்த இயக்கமாகச் செயல்பட்டது. மேலைநாட்டு இலக்கிய வளர்ச்சி அவ்வப்போது பீறிடும் புதுமை இயக்கங்களால் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. இவ்வாறே வட்டார இலக்கிய இயக்கம் தமிழில் தனிச் சாதனைகளையே செய்திருக்கிறதைப் பார்க்கிறோம்.

ஒரு மையம் இயக்கத்தைச் சுழல வைத்தாலும் படைப்பின் தீவிர வெளிப்பாடு இன்றி எந்த இயக்கமும், நிலைபெற முடியாது.

■ சமகாலத் தமிழ்க் கவிஞர்களை அயல் மொழியினருக்கு அறிமுகம் பண்ணவில்லை என்ற பொதுக்குறை தீரத் தாங்கள் கூறும் யோசனை என்ன?

தமிழ்ச் சூழல் நச்சு மயமானதாக எனக்குப்படுகிறது. குழு மனப்பான்மை காரணமாக இங்கு தேசிய, சர்வ தேசியத் தொடர்பு கொண்டவர்கள். 'அவரவர் கை மணலை'ப் பட்டியலாக்கிக் கொள்கிறார்கள். இந்த அருவருப்பு முகம்தான் 'பேராசிரியர்கள் எழுதுவது கவிதை அல்ல' என்கிற பேச்சாக வெளிப்படுகிறது. இந்திய மொழிகள் அனைத்திலும் பேராசிரியர்களின் பங்களிப்பு மகத்தானது. தமிழில் மட்டும் அவர்கள் படைப்பாளிகள் ஆக முடியாதாம். புரோகிதன் மந்திரத்தைக் கைப்பற்றிக் கொண்ட கதையாக இவர்கள் எழுதுவது தான் கவிதையாம். மற்றவர்கள் எழுவதெல்லாம் கிவிதையாம். இந்தச் சநாதனம் போரிட்டு மாய்க்கப்பட வேண்டும்.

ஆங்கிலத்தில் மட்டுமல்ல அனைத்திந்திய மொழிகளிலும் பயிற்சி உடையவர்கள் ஒரு கவிதைத் தொகுப்பையேனும் பிறமொழிகளில் மொழி பெயர்த்துக் கொண்டு வர வேண்டும். பாலாவின் தொகுப்பு மலையாளத்தில் வந்திருக்கிறது. பாரதி புத்திரன் இன்னொரு தொகுப்பு கொண்டுவர இருப்பதாக அறிகிறேன். இது போதாது, துளிகள் வெள்ளமாக வேண்டும்.

■ சாகித்திய அகாதெமி, ஞானபீடம் பரிசுகள் பற்றி உங்கள் கருத்து என்ன?

மதிப்புக்குரிய பரிசுகள் அவை. தேர்வு செய்யும் முறையிலும் கோளாறு இல்லை. கோளாறு எங்கே இருக்கிறதென்றால், முன்னதாகவே பரிந்துரைக் குழுக்களின் பட்டியலை மோப்பம் பிடிப்பதையே தொழிலாய்க் கொண்டவர்களிடம்தான். அண்மைக் காலங்களில் இந்த மோப்ப சக்திகள் அநாகரிகமான செயல்களில் ஈடுபட்டதைக் கேள்விப்பட்டபோது மனம் வெதும்பிப் போனேன். இதையெல்லாம் தாண்டி அப்துல்ரகுமான் பரிசு பெற நேர்ந்திருக்கிறது. இன்னமும், வரிசை அறிந்து பரிசுகள் நல்குவோர் சிலரேனும் இருப்பது தான் பாராட்டுக்கு உரியதாக இருக்கிறது.

■ மேலை இலக்கியத் திறனாய்வு அளவுகோல்களால் தமிழ் இலக்கியங்களை அளத்தல் சாத்தியம் தானா?

அளவு கோல்கள் பொதுவானவை. பெருமளவு பொருந்தவே செய்யும். எனினும் மேலை நாட்டார் தங்களுக்குப் பழக்கமுள்ள இலக்கியங்களை வைத்து அளவுகோல்களை உருவாக்கியுள்ளனர். எடுத்துக் காட்டாக கிரேக்கக் காப்பியங்களை மாதிரியாக வைத்துக் கொண்டு செயல்பட்ட மேலைநாட்டுக் காப்பிய இலக்கணம், தனக்கெனத் தனி மரபு கொண்ட இந்தியக் காப்பியங்களுக்குப் பொருந்தாது. நிச்சயமாகச் சிலப்பதிகாரத்துக்கு அது பொருந்தவே பொருந்தாது.

ஆயினும் பொது மனித அனுபவங்களைப் பிரதிபலிக்கும் இலக்கியங்களில் மேலை அளவு கோல்கள் பயன்படும். சங்க இலக்கியங்களில் வாய்மொழிக் கூறுகள் பற்றிய கைலாசபதியின் ஆய்வில் இதனைக் காணலாம்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, தமிழ் மரபு சார்ந்த அழகியலையும், இலக்கியக் கோட்பாடுகளையும் வளர்த்தெடுப்பது நம் கடமை. அய்யப்பப் பணிக்கர் தொல்காப்பியக் கோட்பாடுகளை ஆய்வுக் களங்களில் பயன்படுத்த வழி காட்டியுள்ளார். நம் உள்ளுறை, இறைச்சி, நோக்கு முதலியவை எல்லாம் நவீன கவிதைக் கோட்பாடுகளாகப் பயன் காண வேண்டும்.

■ இசங்களின் ஞானம் இல்லாத படைப்பாளி படைப்புத் திறனில் பூரணத்துவம் பெற முடியாதா?

மேதைகள் எந்த எல்லையையும் எளிதாகத் தாண்டி விடுவார்கள். ஆனால், சராசரிப் படைப்பாளி தனக்கு முன்னும் பின்னும் வளர்ந்த, வளர்ந்து வரும் இலக்கிய இயக்கங்களோடு பரிச்சயம் கொள்ள வேண்டியது அவசியம்.

வாழ்க்கை பற்றிய கண்ணோட்டங்களே இசங்கள். இவற்றில் சிலவற்றை நாம் ஏற்றுக் கொள்ளாமல் கூட இருக்கலாம். ஆனால், அறியாமல் போவது படைப்பாளியின் பலவீனம்.

அவ்வளவு தூரம் போவானேன். தமிழ்க் கவிதை மரபின் அகர னகரம் தெரியாதவர்கள் தமிழ்க் கவிஞர்களாக முடிசூடிக் கொள்கிற அவலத்துக்கு நிகராக எந்த மொழிக் கவிதையிலும் ஒரு



படிப்பகம்

www.padippakam.com

சோகத்தைப் பார்க்க முடியாது.

■ உலகின் பல நாடுகளுக்கு இலக்கியப் பயணம் சென்று வந்திருக்கிறீர்கள். அது பற்றி?

பண்டைய சோவியத் யூனியன், பல்கேரியா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன். அந்த நாடுகள் அனைத்திலுமே நான் கண்டது பொதுத் தூய்மை. அடுத்தபடியாகக் கலைச் சின்னங்களைப் போற்றிப் பாதுகாக்கும் நேர்த்தி. இங்கிலாந்தின் பிரிட்டிஷ் மியூசியமும், பாரிசின் லூவர் அருங் காட்சியகமும் தெவிட்டாத இன்பக் களஞ்சியங்கள். எல்லா நாடுகளிலும் நூலகங்கள் விவரிக்க முடியாத அருமையுடன் பேணப்படுகின்றன.

தமிழ் இலக்கியத்தைப் பற்றி மேம்போக்கான அறிவுள்ள இந்தியத் தமிழர்களையும், நவீனப் பார்வை மிக்க மிகச் சில தமிழ் அன்பர்களையும், அமெரிக்காவில் கண்டேன். எங்கும் ஆழ்ந்த மொழி யறியும், புதியவை படைக்கும் தீவிரமும் யாழ்த் தமிழர்களிடம் பார்த்தேன். தமிழ் இலக்கியத்தில் தங்கள் அடையாளங்களைப் பொறிக்க ஆர்வம் கொண்ட மலேசிய, சிங்கப்பூர் எழுத்தாளர்களையும் கண்டேன்.

கட்டடங்கள், வாகனங்கள், வளங்கள் என அதி சயிக்க வைத்த உலக நாடுகளின் செல்வம் என்னைக் கவரவில்லை. உழைப்பு என்னை ஏங்கவைத்தது.

■ தமிழ்ப் பேராசிரியர், பேச்சாளர், கட்டுரையாளர், மொழி பெயர்ப்பாளர், கவிஞர் எனப் பல தளங்களில் இயங்குகிற உங்கள் ஈடுபாடு எத்துறையில்?

பேராசிரியரானது என் தொழில். பேச்சாள ரானது அதன் தொடர்ச்சி. கட்டுரை எழுதுவதும், மொழி பெயர்ப்பதும் தமிழ் மக்களோடு சில உண்மைகளைப் பகிர்ந்து கொள்ளும் முயற்சி, ஆனால், கவிதை மூச்சு விடுவது போல் இயல் பானது. எனக்கு இன்றியமையாதது.

■ சமகாலக் கவிஞர்கள், இளம் படைப்பாளிகள் பற்றி உங்கள் மதிப்பீடு என்ன?

வளர்ந்த கவிஞர்கள் எந்த முகாமில் இருந்தாலும் அவர்களை நான் போற்றத் தவறியதில்லை. ரகுமா னின் பன்முக ஆளுமை, மீராவின் மனித நேயம், இன்குலாபின் வீறு, ஞானக்கூத்தனின் சோதனை கள், அபியின் ஆழம், தமிழன்பனின் சொல்லாட்சி, சுரதாவின் உவமை லாவகம், கே.சி.எஸ்.அருணா சலத்தின் தெம்மாங்கு, பசுவய்யாவின் இறுக்கம் என ஒவ்வொருவருடைய தனித்தன்மையிலும் எனக்கு ஈடுபாடு உண்டு. ஆனால், அடடே என பழமலையை யும், அறிவுமதியையும், வியந்து கொண்டே யுவனையும், மகுடேசுவரனையும், வே.கபிலனையும், புதிய படைப்பாளிகளையும் என்னால், அர வணைக்க முடிகிறது. இங்கே நான் பட்டியல் இடவில்லை. அப்படியானால், எங்கே தேவதேவன் என்று நீங்கள் கேட்க நேர்ந்து விடும். தமிழ்க் கவிதை பற்றி எனக்குப் பூரணமான நம்பிக்கை இருக்கிறது.

■ அறுபது கடந்த நீங்கள் உங்கள் வாழ்க்கையின் பேறுகள் என்றும் இழப்புகள் என்றும் எவற்றைக் கூறுவீர்கள்?

பாவேந்தர் முதல் தமிழண்ணல் வரை, ஆர்.கே. கண்ணன் முதல் எஸ்.ஆர்.கே., ஜெயகாந்தன் வரை என்னிடம் அன்பு பாராட்டும்படி என் எழுத்தும் பணியும் அமைந்தது என் பேறு.

Institute of Excellence என்று கூறும்படி கலைக் களஞ்சியங்களையும், பேரகராதிகளையும், அறிவு சால் கருத்தரங்குகளையும், அறிஞர் ஒலிப்பதிவு களையும் செய்து வைக்க ஓர் ஆய்வு மன்றம் அமைக்க ஆசைப்பட்டுக் கொண்டே இருக்கிறேன். இது என்னால் இன்னும் உருவாக்க முடியாத இழப்பு.

■ 1999-ஆம் ஆண்டில் மட்டும் 'பூஜ்யங்களின் சங்கிலி', 'ஒரு சங்கீதம் போல', 'ம.ப.பெரியசாமித்தூரன்', 'இராமாநுசர் வரலாறு', 'சி.எஸ்.வாழ்க்கை வரலாறு' எனப் பல்துறை நூல்கள் படைத்த உங்களுடைய புத்தாயிரத் தொடக்கம்?

புத்தாயிரத்தின் முதலாண்டில் இராமாநுச காவியம் வெளிவருகிறது. இப்பெரு நூலன்றி ஒன் றிரண்டு கவிதைத் தொகுப்புக்கள், கட்டுரை நூல்கள் வெளிவர உள்ளன.

■ மிகவும் நன்றி. உங்கள் கவிதைக் கோட்பாடு என்னவென்று சொல்லி நேர்முகத்தை நிறைவு செய்யலாமே.

'மனித ஆன்மாவின் சாரம் கவிதை. உயிர்ச்சாறு வற்றிக் கொண்டிருக்கும் இயந்திர உலகத்தின் இன்னும் வறண்டு போகாத மனத்தின் ஈரம் கவிதை. மரமும் செடியும் கொடியும் அடர்ந்தது வனம் என் றாலும், அந்த வனத்தின் ஆனந்தம் அந்த இருட்டுக் குள் பாடி நகர்ந்து வரும் ஓடை. வாழ்வின் ஆனந்த ஓடை கவிதை. என் ஒளிவாய்ந்த நிமிடங்கள் கவிதை யாக உருமாறிய நேரங்கள், மற்றைப் பொழுதுகள் பற்றி என்ன சொல்லட்டும், அவை ஒளிக்கிரணங் களுக்காகக் காத்திருந்த தருணங்கள்.

ஏனென்றால், ஒவ்வொரு கவிதையையும், மனிதனுக்குள் மனிதனையும், தெய்வத்தையும் தேடிய அனுபவமாகவே கருதுகின்றேன். ■



படிப்பகம்

www.padippakam.com



# 'நோயென்ன? மருந்தென்ன?'

தமிழ்க் கவிதையைப் பீடித்திருக்கும் நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி வந்திருக்கும் கட்டுரை. தமிழ்க் கவிதைகளில் 'தமிழ் மனம்' தொழிற்படுகிறதா என்றொரு வினாவை முன்வைத்தே நாம் நோய் முதற் காரணத்தைக் காண வேண்டியுள்ளது. தமிழ்க் கவிதை காலச் சக்கரத்தின் பற்களாக இயங்காமல் நிற்கிறது. கவிதையை சதுரப்படுத்துவதை சந்தேகிக்க வேண்டியிருக்கிறது என்கிறார் பாலா. உண்மைதான். அண்மையில் பெரியவர் ரகுநாதன் 'பு.பி. விமர்சனங்களும் விஷமத் தனங்களும்' - என்றொரு நூலில் இந்த சதுரச் சக்கரங்களைக் குறித்து வெளிப்படையாகக் குற்றம் சாட்டியுள்ளார். இந்தச் சன்னதி வீதிச் சதுரர்கள் தாம் ந.பிச்சமூர்த்தியை ஆலை இல்லாத ஊரில் இலுப்பைப் பூவை சர்க்கரையாக்கி அதை ஒரு சரித்திரமாக்கி விட்டு விட்டனர். உண்மையில், முப்பதுகளில் தொடர்ந்து நாற்பதுகளில் 'தமிழ் மனம்' தமிழ்க் கவிதைகளில் செயல்பட்டது - பாரதிதாசன், புதுமைப்பித்தன் கவிதைகளில்தாம். 'புதுமையை வரவேற்கும் போக்கில் கண்மூடித் தனமாகப் பழைய மரபுகளின் ஆரோக்கியமான அம்சங்களைப் பார்க்க மறுப்பதும், பழைமையை முற்றாக நிராகரிப்பதும் தவறானது என்று தலையங் கத்தில் எழுதியதை புதுக்கவிதை வரலாற்றோடு பொருத்திப் பார்த்தால் - 'எழுத்து' கால கட்டம் தமிழ் மனச் செயல்பாட்டுக்கு எதிரான திரிபு வினைப்போக்கு என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

'புதுக்குரல்'களில் மனப்புழுக்கமே வெளிப் பட்டது. சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் என்ற புதிய காற்றின் மூலம் தமிழ் மக்கள் வர்ணப் புழுக்கத்தைப் போக்கிக் கொண்டிருந்தபோது - நூற்றாண்டுகளாகக் கொடிகட்டிப் பறந்த அக்கிரகார அதிகாரம் - தன் அடையாளம் இழந்து, அடையாளச் சிக்கலில் சிக்குண்டது. மூன்றாம் உலகக் கவிதைகளில் அரசியல் முதன்மையான உள்ளடக்கமாக (அவ்வத் தேசிய இனங்களில்) வெளிப்பட்டபோது, தமிழில் பாரதிதாசனின் குயில் கூவத் தொடங்கியது. இதற்கு எதிரான கர்ப்பக்கிரக வௌவால்களின் சத்தமே 'புதுக்குரல்களக வெளிப் பட்டது. இந்த வரலாற்றுண்மையை நாம் ஒரு பண்பாடு - மரியாதை - கருதி மறைத்தோம். ஆனால், சாதியமும், தேசியமும் முக்கியமாக முரண்படும் வரலாற்றுச் சூழலில் நாம் உண்மையைச் சொல்ல கட்டாயப்படுத்தப் படுகிறோம். பின் நவீனத்துவச் சூழலில் இம்மாதிரியான சொல்லாடல்கள் தவிர்க்க முடியாதவை. குழுமனப்பான்மை பற்றி எச்சரிக்கை செய்துள்ளீர்கள். நாம் விரும்பினாலும், விரும்பா விட்டாலும் 'கவிக்கோ'-வின் ஆசிரியர் குழு - ஒரு பொதுவான ஆரோக்கியமான குழு மனப் பான்மையோடுதான் செயலாற்ற முடியும்.

பாலா - ஹைகூ முயற்சிகள் கவிஞரை முடமாக்கி விடும் என்று எச்சரிக்கிறார். இன்றைய வரலாற்றின் வாழ்வின் அகண்டத்திற்குப் பொருந்துவதாக இல்லை என்பதால், ஹைகூ-வைத் தவிர்ப்போம் என்கிறார்.

ஹைகூ - கவிதைத் தொகுப்புகள் நிறைய வந்துள்ளன. இளம் கவிஞர்களின் பயிற்சிக்களமாக இப்படைப்பு முயற்சிகள் பயன்படுவதால், நாம் ஹைகூ - முயற்சிகளை மறுக்க வேண்டியதில்லை என்றே எண்ணுகிறேன். ஒரு காலத்தில் அறிவுமதி ஹைகூ-தான் எழுதிக் கொண்டிருந்தார். அதன் விளைவாக 'அவைத் திமிர் அடக்கு' என்ற புதிய ஆத்திசூடி கிடைத்தது. சிறுகதைகள் எழுதிக் கொண்டிருந்தவர்கள் புதின இலக்கியம் படைப் பதில்லையா? எனவே எந்தப் படைப்பு முயற்சிகளை யும் நாம் தடை உத்திரவு போட்டு, தடுத்திட முடியாது. அதற்கு ஒரு தேவை இருப்பதால் அது தொடர்ந்து இடம் பெறுவதை நாம் வரவேற்கவே வேண்டும். அரசியலும் அழகியலும் இரண்டறக் கலந்த வெளிப்பாடே ஹைகூ. நகைச்சுவை உணர்வு பட்டுப்போகாமல் காப்பவை ஹைகூக்கள். அண்மையில் ஒரு ஹைகூ படித்தேன்.

> **ரேசன் கடைக்காரருக்கு**
> **குழந்தை பிறந்தது**
> **எடை குறைவாக.**

ஹைகூ - எழுதும் காலம் - களவியல் - போன்றது என்பதை ஏற்கலாம்.

நாம் மக்களாட்சி மரபுகளை மதித்த காரணத் தினால்தான், உரைப்பா (வசன கவிதை)வையும் உதறாமல் ஏற்றோம். தமிழனின் கவிதை அதன் அடி நாட்களிலிருந்தே சமயச் சார்பற்ற கவிதையாக இருந்திருக்கிறது. ஆனால், அவை சமூகச் சார்பு இழையோடும் பாக்களாகப் பூத்தவை. இன்னொரு



படிப்பகம்

www.padippakam.com

விளம்பரத்தைப் பார்த்தேன். தமிழிலும் ஐம்பெருங் காப்பியங்களில் உட்பொதிந்துள்ள இந்துத்துவ அடையாளங்களை விளக்கி எழுதும் கட்டுரைகளுக்குப் பரிசுகள் நல்கப் போவதாக ஒரு நிறுவனம் அறிவித்துள்ளது. சமண பவுத்த நெறிகளைப் பின்பற்றி வேத நெறிகளுக்கு மாற்றாக, எதிர்ப்பாக, விளங்கிய படைப்புகளில் வேத அடையாளங்களைத் தேடும் முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. சமயங்களிடையே சகிப்புணர்வைப் பேணிய தமிழ் மனத்தில் சமூக நல்லிணக்கத்தை ஒரு நாகரிகமாக, ஏற்ற தமிழர் பண்பாட்டு மரபில் - பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தத்தக்க செய்திகள் நாள்தோறும் வந்த வண்ணமிருக்கும் சூழலில் சிறுபான்மை இனங்களும், மதத்தினரும், பெண்களும், பண்பாட்டு அரசியலின் பேரால் - அடையாளங்களை இழக்கும் ஆபத்து எழும் நோக்கிலுள்ள சூழலை எதிர்கொள்ளும் விதத்தில் 'கவிக்கோ' - இதழ் பணிபுரியும் என்று எதிர் பார்க்கிறேன்

**- கனல் மைந்தன், கோவை.**

பாலா அவர்கள் எழுதியிருப்பது மிகவும் பிற்போக்குத்தனமான காலம் கடந்துபோன "வாதமாகவே" உள்ளது.

எழுத்து, சகடதபற, வானம்பாடிக்குப் பிறகு தமிழ்க் கவிதை உலகில் சிறப்பாக எதுவும் நிகழ்ந்துவிட வில்லை என்று சொல்வதின் மூலம் தற்போதைய நவீன இலக்கியம் பற்றிய எந்த ஞானமும் இல்லையோ என்று அவரைச் சந்தேகப் பட வேண்டி உள்ளது.

தமிழ்ச்சூழலில் தலித் இலக்கியம் ஏற்படுத்திய அசுரத்தனமான தாக்கத்தில் அதிர்ச்சியடைந்தவர்கள் தற்போதைய தமிழ்க் கவிதைகள் பின்தங்கிக் கிடக்கிறதென்றும் சாதனைகள் எதுவும் செய்ய வில்லையென்றும் வதந்திகளைப் பரப்பி விட்டார்கள், வேறு சிலர் இவற்றின் நுண் அரசியலைப் புரிந்து கொள்ளாளமல் ஆமாச்சாமி போட்டார்கள். இதில் பாலா அவர்கள் எந்த இடத்தில் நின்று கொண்டு பேசுகிறார் என்பது தெரிந்தால் கொஞ்சம் தெளிவாகயிருக்கும்.

அப்துல் ரகுமான் தொடங்கி இளங்கவிஞர்கள் என்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் வந்து நின்று கொண்டு பட்டியல் போட்ட பாலா அவர்கள் அதன் அடுத்தகட்ட போக்கில் ஆத்மார்த்தமாக நின்று கொண்டு கவிதை படைக்கும் கவிஞர்களைக் குறிப்பிடாமல் போனதன் காரணம் அறியாமையா, தந்திரமா என்று கேள்வி கேட்க வைக்கிறது. அவருக்குத் தெரியாத ஒரு உலகம் அவரையும் தாண்டி விரைந்து கொண்டிருக்கிறது.

எழுத்து, கசடதபற, வானம்பாடி என்பதே ஒரு செங்குத்தான வளர்ச்சிப் போக்குத்தானே. அதன் அடுத்தகட்ட வளர்ச்சியில் தலித் கவிதைகளும் வலுவான சாதனைகளைப் படைத்துள்ளன படைத்து வருகின்றன. இவற்றை ஏன் ஒத்துக் கொள்ள மறுக்கிறீர்கள்.

பழமலை, கரிகாலன், ரத்தினப் புகழேந்தி, நட.சிவகுமார், என்.டி.ராஜ்குமார் இப்படி நீண்டு போகிற ஒரு குழு இருக்கிறதே இவர்களை ஏன், ஒத்துக் கொள்ள, படிக்க, பட்டியலிட மறுக்கிறீர்கள். அவையெல்லாம் அழகியலின் மேல் விழுந்த பேரிடி என்பதாலா, அல்லது பிரம்மனின் நெற்றியிலிருந்து பொத்து விழாமல் மண்ணிலிருந்து எமது கவிதைகள் பிறப்பதாலா?

**- என்.டி.ராஜ்குமார், நாகர்கோவில்.**

புதுக்கவிதை குறித்து விவாதிப்பவர்கள் முதலில் கவிதை குறித்த முன் முடிவுகள் அற்ற தெளிவை கைக்கொள்ளுதல் நலம். புதுக்கவிதை இயக்கம் சாரா, கொள்கை சாரா வாழ்வும் ஆழ்மனச் செயல்பாடும் சங்கமிக்கிற கலை.

இதை நவீன இலக்கணப் புட்டிகளில் அடைக்கும் முயற்சி புதுக்கவிதைக்கு, கவிதை மனோ பாவத்திற்கு எதிரான செயல்பாடன்றி வேறில்லை, கவிதைச் செயல்பாடுகள் குறித்த சிறந்த நூல்களை மொழிபெயர்த்துத் தந்திருக்கிற திரு. பாலா சமகாலத்தில் தமிழில் புதுக்கவிதை எழுதிவரும் கவிஞர்களை அடையாளம் காணாமல் இருப்பது துரதிர்ஷ்டமானதே. குறிப்பாகத் தமிழின் நவீன இலக்கியத்திற்காக எந்தவித வரவுகளையும் எதிர் பாராது செயல்பட்டுவரும் சிற்றிதழ்களில் சிறப்பாக இயங்கிவரும் புதுக்கவிஞர்களை, கவிதைகளை பாலா போன்றவர்கள் அறியவில்லையா? அறிந்தும் இதுபோன்ற இலக்கணச் செயல்பாட்டு உத்திகளைத் தமிழின் மீது புகுத்துவதில் ஏன் ஆர்வம் காட்டுகிறார்கள் என்பது அறிதலுக்கு அப்பாற் பட்டதாக இருக்கிறது. தயவு செய்து பாலா போன்றவர்கள் தமிழின் கவிதை இயக்கம் குறித்த சீரிய மதிப்பீட்டிற்குப் பிறகு கவிஞர்களை வரிசைப் படுத்துதல் சிறப்பாக இருக்கும்.

**- நெ.செல்வம், சென்னை.**


படிப்பகம்

www.padippakam.com

# ரஞ்சன்குடி மலைக்கோட்டை

**பழமலய்**

சென்னை - திருச்சி நெடுஞ்சாலையில்
மங்கலமேடு, தேவையூர் கடக்கும்போது
இறங்கத் திட்டமிடுவேன்.

இன்வுந்தில் நண்பர்களோடு
இன்று திரும்ப நேர்ந்தது.
பேராசிரியர்கள் சிவக்குமார், திருமாவளவன்,
தோழர்கள் கோவிந்தசாமி, சந்திரசேகரன்,
ஓட்டுநர் சென்னை பாபு.

நெடுஞ்சாலையிலிருந்து
மேலைத்திசைக்குப் பிரியும்
மண்பாதையின் தொடக்கத்தில் -
சிறுகுளம், கிணறு, தொட்டி, '
கட்டிடம் - எனத் 'தண்ணீர்ப்பந்தல்'.
ஒரு காலத்துத் தர்மம்!

மழைவரும் போல் இருந்தது.
என்றாலும் வழி கேட்டுக் கொண்டு போய்க்
கோட்டையில் நுழைந்தோம்.
எதிர் பார்த்ததை விடவும்
எடுப்பான தோற்றம்!

ஆங்கிலத்தில் வெட்டியிருக்கிறார்கள் குறிப்பை.
ஆராய்ச்சியாளர்களுக்குத்தானே வரலாறெல்லாம்!
'வாலிகண்டர் புரம் போர்' அது.
கி.பி. 1751.
யாருடையதோ மண்.
யார் யாரோ அடித்துக் கொண்டிருக்கிறார்கள்.
மகமதியர் - ஆங்கிலேயர் - பிரஞ்சியர்.

மேலே ஏறினோம்;
மலைமேல் கோயில்கள் ஒரு காலம்,
மலைமேல் கோட்டைகள் ஒரு காலம்
கொடிபறந்த கோட்டை இது.

சஞ்சீவிராயன் - அனுமார் -
நாயக்கர் காலமாக இருக்கலாம்.
விநாயகர், சிவலிங்கம் இருக்கின்றன.

மண்டபங்களைக் கடந்தேறிக்
கொடிமேடையில் நின்று பார்த்தபோது -
அருகில், அடியில்,
வட்டமான செயற்கைக் கிணறு.
குடியோ? குளியலோ?
ஏழோ எட்டோ படிகள் இருக்கின்றன.

மேலே, கீழே, கோட்டைக்கு வெளியே
பள்ளி வாசல்கள்.
அழைப்பாய், தொழுகையாய்த்
திருக்குரான் ஒலித்த பூமி.

மறைந்துகொள்ள, மறைத்து வைக்க நிலவறைகள்.
தப்பித்து வெளியேறிவிட
மூடப்படாத சுரங்கப்பாதை.

அகழி, திடல் - என
அளவான கோட்டை! அழகான கோட்டை!
நிலவில் பார்க்க வேண்டும்.
நெருக்கி அணைத்துக் கொண்டு பார்க்க வேண்டும்.
கொறிக்க, குடிக்கக்
கொண்டுதான் போகனும்.

ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன.
நண்பர் ஈசானுல்லா சொல்லியிருக்கிறார்.
விழாக் காலங்களில் மீந்து போகாமல் உண்ண
லப்பைக் குடிக்காட்டிலிருந்து கோட்டைக்கு
வருவார்களாம்.
இப்படித்தான் ஏமாந்திருக்கிறார்கள்.
கோட்டை வலை.
மாளிகை பொறி.
இப்படி விருந்துகள் மக்களைச் சிக்க வைப்பது.

ஊரை 'ரஞ்சன்குடி' என்கிறார்கள்.
ரஞ்சன், நாயக்கனாக இருக்கலாம்.
'சனரஞ்சகன்' போலும்!
படிக்கட்டுகளின் திருப்பத்தில் காணும்
கோட்டைச் சுவரின் சிகரத்துக் கல்லொன்றைப்
பார்க்கத்தான் வேண்டும் அண்ணாந்து,
தவற விட்டவர்கள், பிறகே கேள்விப்பட்டால்,
வருத்தப்படுவார்கள் ஏமாந்ததற்காய்.
குறிப்பாக... யாவருந்தான்!

ஈசானுல்லா சொன்னதை மறக்காததால்தான்
ஏறிட்டுப் பார்த்துச் சிரித்தோம் நாங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# கவிஞர் கம்பதாசன் ஓர் எரி நட்சத்திரம்

முருகு சுந்தரம்

*1962* சனவரித் திங்கள். ஒருநாள் மாலை கல்லூரி முடிந்ததும் பாவேந்தர் பாரதிதாசனைக் காண அவர் குடியிருந்த தி.நகர் இராமன் தெரு இல்லம் சென்றேன். வீட்டு முற்றத்தில் அறுபது வயது மதிக்கத்தக்க ஒரு முதியவர் அழுக்குச் சட்டை, கலைந்த சிகை, மெலிந்த உடலோடு சுருண்டு படுத்திருந்தார். வீட்டில் பாவேந்தரின் மனைவி பழனியம்மாள் இருந்தார். 'யார் இந்தப் பெரியவர்?' என்று கேட்டேன்.

"தெரியலையா? கம்பதாசந்தா. குடிச்சுப்புட்டா இங்கேதா வந்து படுத்துக்குவான். இது அவனுக்குப் பாதுகாப்பான இடமில்லியா?" என்று பதிலிறுத்தார். நான் திகைத்துப் போனேன்.

'ஐந்தடி எட்டங்குல நெடிய உருவம்; பொன் மேனி, கதர்வேட்டி; கதர்ச்சட்டை; தோளில் பட்டுச் சால்வை; வெண்மை கலந்த கம்பீர ஆண்மை. இது கம்பதாசனின் பொற்காலத் தோற்றம். மங்கையர்க்கரசி படத்தில் கவிஞன் வித்தியாபதி வேடத்தில் தோன்றிய கம்பதாசனைப் பலரும் பார்த்திருக்கலாம். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களுள் கம்பதாசனே மிக்க அழகானவர்.

புதுவை வில்லியனூரைச் சேர்ந்த இவருக்குப் பெற்றோர் சூட்டிய நாமகரணம் அப்பாவு. நாடகத்தில் நடித்த காலத்தில் இவர் சூடிக்கொண்ட பெயர் சி.எஸ். ராஜப்பா. திரை உலகில் நுழைந்த பிறகு கம்பதாசன். புகழ் பெற்ற சாகித்திய கர்த்தாவும், பக்திப் பாடகருமான மதுரை மாரியப்ப சுவாமிகள் கம்பதாசனுடைய மாமன்.

குயப்பேட்டை நகராட்சிப் பள்ளியில் எட்டாம் வகுப்புவரை படித்த கம்பதாசன், இளமையில் நாடக நடிகராக வாழ்க்கையைத் தொடங்கினார். சிறிது காலம் ஜெமினி, பட்சிராஜா ஸ்டுடியோக்களில் மண்ணுருக் கலைஞராகவும் (Moulder) பணி செய்திருக்கிறார். இது அவர் குலத்தொழில். இவருக்கு ஓவியம், நாட்டியம் போன்ற கலைகளில் பயிற்சியுண்டு. இனிமையாகப் பாடுவார்.

கம்பதாசன் முதன்முதலில் நடித்த திரைப்படம் 'திரௌபதி வஸ்திராபரணம்'; முதன் முதலில் பாடல் எழுதிய படம் 'சீனிவாச கல்யாணம்'.

பாவேந்தர் பாரதிதாசன், உருதுக் கவிஞர் இக்பால், வங்கக் கவிஞர் ஹரீந்திரநாத், ச.து.சு.யோகி, சிறுதைச் சிற்பி கு.ப.ரா., நாரணதுரைக் கண்ணன் ஆகியோர் இவர் பழகிய இலக்கிய வட்டம்.



ஜெயப்பிரகாஷ் நாராயண், லோகியா, அசோக் மேத்தா ஆகியோர் இவர் பழகிய அரசியல் வட்டம். இவர்கள் கம்பதாசனைக் 'கவி! கவி!' என்று ஆர்வத்தோடு அழைத்து அன்பைச் சொரிந்தனர். கம்பதாசன் தம்மை ஒரு சோஷலிஸ்ட் என்று கூறிக்கொண்டார். ஜேபி.யின் கூட்டங்களில் தாம் எழுதிய பாடல்களை இவரே பாடுவார். இரங்கூனில் நடைபெற்ற சோஷலிஸ்ட் மாநாட்டிலும் இவர் கலந்து கொண்டார்.

*1946*-இல் சென்னையில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டில் காந்தியடிகள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார். அம்மாநாட்டின் பிரார்த்தனைப் பாடலைத் தாமே எழுதி இனிய குரலில் பாடி காந்தியடிகளின் பாராட்டைப் பெற்றார்.

திரைப்படப் பாடல்களுக்குப் பெருந்தொகை வாங்கிய முதல் கவிஞர் கம்பதாசன்தான். கண்ணதாசன் திரைப்படத் துறையில் நுழைந்தபோது, 'நான் கம்பதாசனைப் போல் புகழ் பெறவேண்டும்; அதுதான் என் லட்சியம்' என்று கூறியது குறிப்பிடத்தக்கது. அன்றைய வெற்றிப் படங்களான மகாமாயா, ஞானசௌந்தரி, மங்கையர்க்கரசி, லைலாமஜ்னு, அமரகீதம், மர்ம வீரன் உட்பட ஐம்பது படங்களுக்கு மேல் பாடல்கள் எழுதியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

பழம் பெரும் இசையமைப்பாளரான நௌஷாத் இசையமைத்த ஆன், வானரதம், அக்பர், அவன், ஓ.பி.நய்யார் இசையமைத்த பாட்டாளியின் சபதம் (நயா தௌர்) ஆகிய திரைப்படங்களுக்குத் தமிழில் பாட்டெழுதியவர் கம்பதாசன் தான். நௌஷாத்தின் நட்பு இவருக்கு நீண்டநாள் இருந்தது.

ஆன் படம் வெளியான போது, கம்பதாசன் புகழேணியின் உச்சியில் இருந்தார். ஒருநாள் தம் இயக்கத் தோழரான சங்கரன் இருப்பிடத்துக்கு வந்து, பத்தாயிரம் ரூபாய் அடங்கிய நோட்டுக் கட்டை மேசை மீது போட்டார். வழக்கம்போல் வீண்செலவு செய்யாமல் வங்கியில் போட்டு வைக்கும்படி சங்கரன் கவிஞருக்கு அறிவுரை கூறினார்.

"பணத்தைப் பாதுகாக்கச் சொல்கிறாயே! நீயொரு சோஷலிஸ்டா?" என்று அவரைக் கடிந்து விட்டுப் பணத்தோடு கவிஞர் சென்று விட்டார். சில நாட்களுக்குப் பிறகு யாரோ ஒரு டாக்சிக்காரன் கம்பதாசனைக் கைத்தாங்கலாக அழைத்து வந்து சங்கரனிடம் விட்டுச் சென்றார். சங்கரன் அவர் பையைத் துழாவிப் பார்த்தார். அதில் மூன்று ரூபாய்கள் மட்டுமே இருந்தன. டாக்சிக் காரர்களுக்குக் கட்டணத்தைப் பலமடங்கு கூட்டிக் கொடுக்கும் வழக்கம் கவிஞருக்கு உண்டு.

பேராசிரியர் அன்பழகன் தாம் பாவேந்தரைப் பற்றி எழுதிய கட்டுரையொன்றில், கம்பதாசனின் ஆடம்பர வாழ்க்கையைப் பற்றிக் கீழ்க்கண்ட குறிப்பை வழங்கியுள்ளார்:

*அந்நாட்களில் கலையுலகில் செல்வாக்குப் பெற்றிருந்த கவிஞர் கம்பதாசனோடு பாவேந்தர் என் இல்லத்துக்கு வருவார். சிறிது நேரம் உரையாடி விட்டு விடை பெறுவார்.*

*ஒருமுறை கம்பதாசன் அவர்கள், பாவேந்தரிடம் கொண்டிருந்த பேரன்பு (பக்தி என்று கூடக் கூறலாம்) காரணமாக ஒரு பெரிய உணவு விடுதிக்கு அழைத்துச் சென்று உயர்ந்த மது வகைகளை யெல்லாம் அவரைப் பருகுமாறு செய்தார்.*

*கவிஞருடன் நானும் - மற்றொரு தேசிய வார ஏட்டின் ஆசிரியரும் - உடன் சென்றிருந்தோம். கவிஞர் போதும் என்றாலும் விடாது வற்புறுத்தி நிரம்பப் பருகுமாறு செய்து விட்டார். அப்போது கம்பதாசன் நூறுரூபாய் நோட்டுகளாகச் செலவிடும் வாய்ப்புப் பெற்றிருந்த காலம். 'என் வருமானமெல்லாம் கவிஞருக்கே! என் குருநாதருக்கே!' என்று அவ்வப்போது முழங்கியபடி ஆர்வத்தோடு செலவிட்டார். விடுதியிலிருந்து ஒரு பெரிய காரில் வீடு வந்தோம்!"*

1946 ஆம் ஆண்டு பாவேந்தருக்கு அண்ணா ரூ.25,000/- நிதிவழங்கினார். அந்நிதிக்கு ரூ.501/- வழங்கினார் கம்பதாசன். அந்நாளில் அது மிகப்பெரிய தொகை.

கம்பதாசன் பாவேந்தரிடம் மோதிக் கொண்ட நிகழ்ச்சிகளும் உண்டு. 'காளமேகம்' படத்திற்குப் பாவேந்தர் எழுதிய பாடலொன்றில் திருத்தம் கூறினாராம் கம்பதாசன். உடனே பாவேந்தருக்குச் சினம் வந்துவிட்டது. 'நீ எனக்கு ஆசானுமல்ல! என்னுடைய மாணவனுமல்ல! உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ!' என்று கடிந்து கொண்டாராம். இதை முல்லை முத்தையா தம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

கம்பதாசனின் குடும்ப வாழ்க்கை ஒரு சோகக் கதை. ஆராய்ச்சிமணி என்ற படத்திற்கு நடனமாட வந்த 'சித்ரா' என்ற கேரளப் பெண் இவர் முதல் மனைவி. அப்பெண் வள்ளத்தோல் மகாகவியின் பேத்தி என்பது குறிப்பிடத்தக்கது. சித்ரா சில காலமே இவருடன் வாழ்ந்தார். அவளது பிரிவு கவிஞர் உள்ளத்தில் ஆறாத புண்ணாகவே இருந்தது. சித்ராவின் பிரிவுத் துயரத்தைக் 'காதலும் கண்ணீரும்' என்ற கவிதையில்,

**வீங்கு வெயில் தனில் பழனம்**
**உழுவோன் நெற்றி**
**வேர்வையென என்கண்ணீர்**
**விரையு தேடி!**
**கண்சமைத்த வெண்பருக்கை**
**அனைய என்றன்**
**கண்ணீரில் கொடுங்காலப்**
**பசி மாறாதோ? -**

என்று உருக்கமாகப் பாடுகிறார் கம்பதாசன்.

சித்ராவின் பிரிவிற்குப் பின் 'சுசன்' என்ற கிறித்தவப் பள்ளியாசிரியையோடு சிலகாலம் குடும்பம் நடத்தினார். சித்ரா மூலம் இவருக்கு ஓர் ஆண்மகவும், சுசன் மூலம் இரண்டு பெண்மகவும் பிறந்தன.

கம்பதாசன் குறுகிய காலத்தில் நிறைய எழுதியிருக்கிறார். இவர் படைப்புக்கள், கம்பதாசன் கவிதைகள், கம்பதாசன் கதைகள், கம்பதாசன் நாடகங்கள் என்று மூன்று தொகுதிகளாகப் புலியூர்க் கேசிகனால் தொகுக்கப்பட்டுள்ளன. வேளை வந்தது, புத்தர் புனர்ஜென்மம், கனவு, காணிக்கை, இரத்த ஓவியம் என்று நயம்மிக்க ஐந்து சிறுகாப்பியங்கள் கம்பதாசனால் எழுதப்பட்டுள்ளன.

காப்பியத்திற்குரிய கருப்பொருள்களைத் தேர்வு செய்வதில் இவர் வல்லவர். மகதத்தின் நாட்டியப்



படிப்பகம்

www.padippakam.com

பேரொளி வாசவதத்தை, உபகுப்தன் என்ற புத்த பிட்சுவின் மேல் கொண்ட ஒருதலைக் காதலை வேளைவந்தது என்ற காப்பியம் எடுத்துரைக்கிறது. புத்தர் புனர் ஜென்மம், கௌதம புத்தரையும் காந்தியடிகளையும் தொடர்பு படுத்திப் பாடப்பட்ட கற்பனைக் காப்பியம். காணிக்கை ஆதிசங்கரரின் பிறப்பு ரகசியம் பற்றியது. ஆதிசங்கரர் ஒரு கொல்லருக்கும் பார்ப்பன நங்கைக்கும் பிறந்தவர் என்பதை இக்காப்பியம் வெளிப்படுத்துகிறது.

'கற்கனி' என்ற தலைப்பில் அகலிகை பற்றி எழுதப்பட்ட சந்தப்பாடல் மிகச்சுவையானது. அகலிகை கூற்றாக அதில் சொல்லப்பட்ட கருத்துக் களும் புரட்சிகரமானவை

**முதிய கிழவரும் சிறுமிதனை - மணம்**
**முடித்தது முதலில் குற்றமன்றோ?**
**புதிய பருவ மனைவிதனைக் - கூடிப்**
**புணரா திருந்தது குற்றமன்றோ?**

**வந்த விருந்தினன் வேந்தெனினும் - மது**
**வார்த்துக் கொடுத்தால் மதிமயங்கி**
**எந்தக் குலத்துள பெண்தனையும் - கண்**
**இருளவே தொட்டிட எண்ணானோ?**

**முந்தைய ஆரியர் விருந்தினர்க்கு - மன**
**மொப்பி மனைவி தனையீந்து**
**விந்தை புரிந்திட்ட செய்தியெலாம் - பழ**
**வேத முணர்ந்தோர் அறியாரோ?**

கௌதமக் கிழவன் தன்னைக் கைப்பிடித்தது பொருந்தா மணம் என்றும், வந்த விருந்தினர்க்குச் சோமபானம் வழங்கி, மான்கறியோடு மனைவியை யும் விருந்தாகக் கொடுத்து மகிழ்விப்பது ஆரிய மரபு என்றும் அகலிகை வாயிலாகச் சில துணிச்சலான செய்திகளைக் கவிஞர் வெளியிடுகிறார். மற்ற கதைகளில் அகலிகை கல்லாகச் சபிக்கப்பட்ட தாகத்தான் படித்திருக்கிறோம். ஆனால் இப்பாட லில் கௌதமன் அகலிகையைக் கல்லோடு கட்டிச் சுனையில் தள்ளியிருப்பதாகக் கூறப்படுவது புதிய செய்தி.

சிலப்பதிகாரத்தைப் பாரதிதாசன் விருத்தப் பாக்களின் மறுபடைப்புச் செய்திருக்கிறார். கம்பதாசன் சிலம்பைப் பாரதிதாசனுக்கு முன்பே நவீனத் தமிழில் யாத்திருக்கிறார். அது இன்னும் அச்சேறாமல் கையெழுத்துப் படியாகவே உள்ளது.

சமதருமக் கருத்துக்களை மையமாகக் கொண்டு நிறையப் பாடல்களைக் கம்பதாசன் எழுதியிருக் கிறார் அவற்றுள் கண்ணீர்ப் பொங்கல், செம்பட வன், மேதினம், நீங்கள் சிலபேர் என்பவை குறிப்பிடத்தக்கவை.

மாலையில் தோன்றும் செக்கரிலும், காலைச் சூரியனிலும், வீரமிகு சிங்கத்தின் பிடரியிலும், சேவலின் கொண்டையிலும் காணப்படும் செந் நிறத்தைச் செங்கொடியோடு உவமித்துப் பாடு கிறார். செங்கொடி 'செத்தவர்க்கு உயிரளிக்கும்' என உணர்ச்சி பொங்கக் கூறுகிறார்.

உழைப்பவர்க்கும் நல்லவர்க்கும் நீதி வழங்காத விதியைக் குருடன் என்று இகழ்ந்துரைத்து,

**குருடனைப் பார்ப்பது அபசகுனம்**
**குடல்பசி கொண்டது போய்வருவேன்**

என்று பாடும் திறன் போற்றற் குரியது.

கம்பதாசனுக்கு ஷெல்லியின் மீதும், பைரனின் மீதும் பற்றுண்டு. "அவன்" என்னும் படத்திற்குப் பாடல் பதிவு செய்யப் பம்பாய் சென்றபோது, புத்தகக் கடையைத் தேடிச்சென்று கலீல் ஜிப்ரான் நூல்களைக் கம்பதாசன் வாங்கினார்" என்று உடன் சென்ற ஆந்திர மாகாகவி ஆருத்ரா குறிப் பிட்டுள்ளார்.

'கவிதா' என்ற பெயரில் கவிதை இதழ் ஒன்றும் நடத்தியிருக்கிறார் கம்பதாசன். அதன் அலுவலகம் புரசைவாக்கம் டேங்க் அருகில் இருந்தது. தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கம் 'கலைச்சிகாமணி' (இன்றைய கலைமாமணி) என்ற பட்டம் வழங்கி இவரைச் சிறப்பித்தது.

'ஒரு கிண்ணம் மது' கவிதை நூல், மற்றும் நீ' - என்ற உமர்கயாமின் புகழ்பெற்ற வரி. உலகில் பல கவிஞர்களைக் கெடுத்து விட்டது. அப்பாடலில் மதுவும் மங்கையும் குறியீடுகள். அதை உணராமல் அவ்விரண்டையும் கவிஞனுக்குரிய அடையாளங் களாகவே பலர் கருதி விட்டனர். அவ்வாறு நினைத்துக் கெட்டழிந்த தமிழ்க் கவிஞர்களுள் கம்பதாசனும், கண்ணதாசனும் தலையாயவர்கள்.

**திவ்யமது! திராட்சைமது!**
**ஊற்றடி பெண்ணே!**
**செக்கரென ரத்தஒளி**
**சேர்த்திடக் கண்ணே!**

என்று கம்பதாசனும்,

**ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு**
**ஒரு கோலமயில் என் துணையிருப்பு**

என்று கண்ணதாசனும் பாடி மதுவையும் மங்கையையும் ஆராதித்தனர்.


படிப்பகம்

www.padippakam.com

நகைச்சுவை நடிகர் வி.கே. ராமசாமி கம்பதாசனோடு நெருங்கிப் பழகியவர். கவிஞரைப் பற்றி நினைவு கூர்ந்த அவர் "கம்பதாசன்" எப்போதும் 'ஜின்'னே விரும்பி அருந்துவார். அவரைப் போன்ற மதுபக்தரை என் வாழ்நாளில் இதுவரை சந்திக்கவே இல்லை. அவரிடம் கவிதை எழுதக் கற்றுக் கொள்ள முயன்றேன். ஆனால் குடிப்பழக்கத்தைத்தான் என்னால் கற்றுக்கொள்ள முடிந்தது" என்று குறிப்பிட்டுள்ளார்.

குடியினாலும், கட்டுப்பாடற்ற வாழ்க்கையினாலும் குறுகிய காலத்தில் கம்பதாசன் வாழ்க்கைக் கனவுகள் கலையத் தொடங்கின. குடும்பவாழ்க்கை சிதறியது. ஒரு முறை குடித்து விட்டு வீதியில் தகராறு செய்தார் என்பதற்காக அவரைக் கைது செய்து சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் அடைத்துவிட்டனர். இதை அறிந்த பாரதிதாசன் சைதாப்பேட்டை சென்று பிணை கொடுத்துக் கம்பதாசனை மீட்டு வந்தார்.

இளமைக்காலத்தில் கலைச் செருக்கோடும், மிடுக்கோடும் தலைநிமிர்ந்து வாழ்ந்த கம்பதாசன் முதுமையில் உதவி கோரித் தண்டுன்றித் தம் நண்பர்களைத் தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. என்புருக்கி நோய் அவரை அரித்துத் தின்றது. குடி, அவர் குடலையும் கல்லீரலையும் செயலாற்றதாக்கிவிட்டது. இராயப்பேட்டை மருத்துவமனையில் கேட்பாரற்றுத் தரையில் கிடத்தியிருந்தனர். சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யின் பரிந்துரையின் பேரில் அவருக்கு சி பிரிவில் இடமும் மருத்துவ வசதியும் வழங்கப்பட்டன. 23.5.1973 இல் பிற்பகல் ஒரு மணியளவில் அவர் ஆவி பிரிந்தது.

பாரதியின் பிண ஊர்வலத்தில் ஐந்தாறு பேர் கலந்து கொண்டனர். கம்பதாசன் இறந்தபோது, அவர் பிணத்தை ஒரு குதிரை வண்டியில் ஏற்றிக் கொண்டு அவருடைய உறவினர் மூவர் மட்டுமே சென்றனர். பாரதிபுதைக்கப்பட்ட கிருஷ்ணாம் பேட்டை சுடுகாட்டில் இவரும் புதைக்கப்பட்டார்.

கம்பதாசன் பிறப்பால் ஒரு கவிஞர்; கலைஞர். முறையான இலக்கண இலக்கிய அடிப்படை அவருக்கு இல்லை என்பது அவர் கவிதையில் சில இடங்களில் தென்பட்டாலும், உணர்ச்சிமிக்க கவிதை ஆவேசமும், கருத்துப் புதுமையும் அவர் பாட்டில் நிறைந்திருப்பதைக் காணலாம்.

"கவிஞர் என்றே அழைக்கத் தகுதி போதாத பல சாதாரண மனிதர்களைச் சாதிப்பற்று காரணமாகவும், அரசியல் சார்பு காரணமாகவும் போற்றிப் புகழ்ந்து, அவர்களுக்கு வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுக்கப்பலர் இருந்தார்கள்; இப்போதும் இருக்கின்றார்கள். ஆனால் இலக்கியத்தில் சாதனைகள் செய்த பெருங்கவி கம்பதாசனுக்குத் தான் யாருமே இல்லாமல் போய்விட்டார்கள்! இது எவ்வளவு பெரிய கொடுமை?" என்று குறைபட்டுக் கொள்கிறார் கம்பதாசனின் இலக்கியச் சுவைஞரான சோமசுந்தரம் என்பவர். கம்பதாசன் திரைவானிலும் இலக்கிய வானிலும் திடீரென்று தோன்றிக் குறுகிய காலத்தில் தன்னைத்தானே எரித்துக் கொண்டு அணைந்து போன எரிநட்சத்திரம்?

1. 'பாவேந்தர் நினைவுபோற்றுவோம்' கட்டுரை: பக்கம்281 நூல்பாவேந்தர் ஒரு பல்கலைக்கழகம்.
2. சுரதாவின் குறிப்பு.

## நன்றி

இந்த இதழ் தயாரிப்புச் செலவு

முழுமையும் நன்கொடையாக

அளித்தவர்

மலேசிய எழுத்தாளர் சங்கத் தலைவர்,

'மலேசிய நண்பன்' நாளேட்டு ஆசிரியர்

**திரு. ஆதிகுமணன்.**

அவருக்குக்

**'கவிக்கோ'வின் நன்றி.**

## கவிதையே பரிசு

என்னுடைய எழுத்துகளிலிருந்து நான்
இலாபத்தையோ, புகழையோ,
எதிர்பார்ப்பதில்லை. கவிதையே எனக்கு
ஒரு பெரும் பரிசாய்த் திகழ்கிறது. அது
என் துன்பங்களைத் துடைக்கிறது.
இன்பங்களைப் பெருக்குகின்றது. என்
ஏகாந்தத்தை இன்பமாக்குகிறது. என்னைச்
சுற்றியிருக்கும் எல்லாவற்றிலும்
நன்மையையும் அழகையும் காணும்
பார்வையைத் தருகிறது.

**- கோலிரிஜ்**



படிப்பகம்

www.padippakam.com

# குதிரைகளின் வீர மரணம் குறித்து

ஹெச்.ஜி.ரசூல்



குதிரைகள் பதித்த தடங்கள் பல.
குளம்படிகளினூடே
அழியாது தெரிந்த வேகம்.

பாலின அடையாளம்
எதுவெனத் தெரியாத குதிரைகள்

நேற்றைய சவாரிகளில்
ராஜகுமாரன்
ராஜகுமாரிகள் வலம் வந்தார்கள்

வெற்றிப் பெருமிதங்கள்
அடிக்கடி பேசப்பட்டன

வரலாற்றுக் குறிப்புகள்
ஒற்றை அடையாளங்களோடு
முடிந்து போயின

படைவீரனுக்காகக் காத்து நின்று
வாள்கள் கேடயங்களோடு
களங்களில் வெட்டுப்பட்டன குதிரைகள்

கடிவாளங்களோடும்
நெருப்புச் சாட்டையடிகளோடும்
அடிமைகளாய் வாழ்ந்தவை

அவற்றின் வீரமரணம் குறித்து
எந்த மகாகவியும் எழுதவில்லை



# அழகின் சிரிப்பு

சூரிய தீபன்

நூல் பிடித்தது போல்
நேர் நேராய் வீதிகள்
நிரை நிரையாய் வீடு.

இடை வளைவற்று
இயற்கையைச் செதுக்கி
கடற்கரைச் சாலை.

யானை முதுகென
குனிந்த குற்றால மலைமேல்
குரங்குகள் நடக்கையில்
நேர்கோட்டுத் திசை;
குளியல் அருவி
கொட்டும் நீர்
நேர்கோடு.

ஒற்றைக் கொக்கில்
இல்லை அழகு.
வெண்துப்பட்டா வீசி,
வரிசை வரிசையாய்
ஆகாய வீதியில்
சுடர் ஏற்றி
நகரும் கொக்குகள்.

பாத்தி பாத்தியாய்ச் சீருடையில்
வட்டமிடும் எழில்
பள்ளிகளின் நந்தவனத்தில்.

குடிசைகளும் எழில்
கொள்ள வேண்டும்
அளவெடுத்து அமைந்து;

கண்பறித்து
கனத்தில் பதிந்து
கள்வெறியில் துள்ள
ஒழுங்காக வேண்டும் எல்லாம் -
ஒழுங்கற்ற மனதுக்கு.




படிப்பகம்

www.padippakam.com

## வசனத்தில் கவிதை

கென்யா நாட்டு விடுதலைப் போராட்டம் பெற்றெடுத்த எழுத்தாளர் கூகி. 'சிலுவையில் தொங்கும் சாத்தான்' என்ற அவருடைய புதினத்தை அமரந்தாவும் சிங்கராயரும் தமிழுக்குத் தந்திருக்கின்றனர். 'இன்றைய கால கட்டத்தில் எழுத்தாளன் பண்டைய கால ஞானியைப் போல் இருக்க வேண்டும்' என்று சொல்லும் கூகியின் வசனம் அங்கங்கே கவிதையாகி மின்னலடிக்கிறது.



வீர சந்தானம்

■ இன்றிலிருக்கிறது நாளையின் களஞ்சியம். நாளை என்பதோ இன்று நாம் விதைப்பதன் அறுவடையே.

■ மழையின் சிறுதுளியை சாமானியமாக மதிப்பிட்டு விடாதீர்கள். மனிதனால் அதை சமாளிக்கவே முடியாது என்று சொன்னால் குழப்பமடைவதற்கு ஏதும் இல்லை.

■ என் சொந்த நாட்டுக்கு முன் வாசல் வழியாக அனுப்பி வைக்கப்பட்டால், இந்த நாட்டின் பின் வாசல் வழியாக மறுபடியும் நுழைவேன். முன்னைக் காட்டிலும் ஆழமாக வேரூன்றக் கூடிய விதைகளை விதைப்பேன்.

■ இன்றோடு என் முகத்தை மறைத்துக் கொள்வேன்; நடக்கும் கூத்துக்குள் எல்லாவற்றின் திரைமறைவிலும் நான் இருந்து கொள்வேன். கதவுகளிலும் சன்னல்களிலும் நீதான் நிற்பாய். உன் முகம்தான் எப்போதும் வெளியே தெரியும்.

■ நான் உண்ண உணவையும், குடிக்க நீரையும், ஒதுங்க நிழலையும் என்னுடைய சொந்த வியர்வை தான் கொடுக்கிறது. அவரவர் வியர்வைக்கு அவரவரே முதலாளியாக இருங்கள்.

■ எந்த வீட்டின் வாசலில் உரைகல் இருக்கிறதோ அந்த வீட்டில் ஒரு போதும் மொண்ணைக் கத்தி இருப்பதில்லை.

■ அரங்கத்தில் ஆடத் தயாரான நடனக்காரனுக்கு, எப்படி ஆட வேண்டும் என்பது தெரியும். தந்தம் எத்தனை பெரியதானாலும் யானையால் அதைச் சுமக்க முடியும்.

■ ஒரு வீரனின் திறமை அவனுடைய ஆடு சதையை வைத்து அளக்கப்படுவதில்லை. பல சமயங்களில், புகழுக்குரியவனை விட அவனது புகழ் பெரியதாக இருக்கும்.

■ சக்கரவர்த்தி உட்பட, சூரியன், யாருக்காகவும் காத்திருப்பதில்லை.

■ சமைக்கும் உணவின் சுவையை முதல் கொதி வரும் போதே சொல்லிவிட முடியும்.

■ ஒரு ஏழை தன் கண்ணுக்கும், பல்லுக்கும் பிரதி கேட்கும்போது, அது வன்முறையாகி விடுகிறது.

■ அவளுடைய வீரம்தான், அவள் உடம்பிலிருந்து பல ஆண்டுகளை உருவியெடுத்துவிட்டு, வயதைக் குறைத்து இளமையைக் கொடுத்திருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# ஊன்று

## இலக்குமி குமாரன் ஞானதிரவியம்

குழந்தைகள்
பிஞ்சுக்கரம் எடுத்துக்
கும்பிடுவார்கள்...

ஆடுமேய்க்கும் சிறுவனும் சிறுமியும்
புணர்ந்துவந்து
'அம்மாவுக்குத் தெரியக்கூடா'தென
வேண்டிக் கொள்வர்...

சந்நிதியில் அமர்ந்து
நாத்திகம் பேசியவனின் மனைவி
வெளிநாட்டிலிருக்கும் கணவனுக்காய்
தோப்புக்கரணமிடுவாள்...

சோறுபோடாத மகனை
மண்ணள்ளித் தூற்றுவாள்
பொக்கைவாய்க் கிழவி...

திரிசூலத்தில் செருகியிருந்த
எலுமிச்சைப் பழமெடுத்து
நண்பர்களின் சவால் வெல்ல -
தலை குளித்தவன்;

பக்கவாதம் நீக்கக்கேட்டுத்
தலைகுனிவான்...

செருப்புடன் கடந்துபோகும்
சினிமா பேசி இளைஞர் குழாம்...

முப்பதாண்டுக் கால உழைப்பில்
நிமிர்ந்து கிடந்தவர்...
செழித்துக் கொழித்தவர்...
சிந்தையில் மறந்தவர்...
காலம் கழிந்து
வெளிநாட்டிலிருந்து
சாவதற்காய் வந்திருப்போர்...
என சந்நிதி காக்கின்றனர் பலர்
தினம் தினம்...!

எப்போதும்போல
கிழக்குப் பார்த்த முகமாக
இருப்பதாகச் சொல்லப்படும் வைரவர்
அருள்பாலிக்கிறார்,
தன் இடிவிழுந்த
பனைமரத்தில்
இருந்து கொண்டு...!





படிப்பகம்

www.padippakam.com



# காதலும் கனவும்

தமிழ் உரைநடையில் வி.ஆர்.எம். செட்டியாருக்குத் தனி இடம் உண்டு. அவர் நடை உணர்ச்சிப் பிரவாக உல்லாச நடை. கவித்துவ மின்னல்கள் பளீரிடும் நடை. கண்ணதாசன் உரைநடைக்கே இவர் தூண்டுதல் உண்டு என்பார்கள். 'கவிஞன் குரல்' என்ற நூலில் ஷெல்லியின் 'Epipsychidion' என்ற கவிதை பற்றி அவர் எழுதிய கட்டுரை இது.

## ஷெல்லி

காதல் என்றால் என்ன, சாதாரண விஷயமா?

அதை எல்லோரும் ஆழ உணர்ந்து அனுபவிக்கும் ஆற்றல் படைத்தவர்களா? பெண்மை என்றால் என்ன? அழகியின் அழகு என்றால் என்ன? பெண்களின் கண்கள் என்றால் என்ன? ஒரு கன்னிப் பெண் புன்முறுவல் பூத்து நிற்பதற்கும், உணர்ச்சியின் விபரீதமான ஆழத்தில் விசாலமாய்ச் சிரிப்பதற்கும் என்ன வேற்றுமை? உண்மைக் கவிஞன், காதலின் மேல் சாய்கின்றானா, அல்லது பித்தன் போலப் பாய்கின்றானா? உடலழகோடு, மன சௌந்தரியமும், ஆன்ம ஐக்கியமும் நிறைந்த அழகியின் பழக்கம், நெருங்கிய மனத்தொடர்பு எப்படி இருக்கும்? - ஆம், நல்ல நல்ல கேள்விகள்தான்! ஆங்கிலக் கவிஞன் ஷெல்லி, எப்படி இத்தகைய உண்மைகளையும் அனுபவ வாயிலாக அள்ளி வீசுகின்றான், என்று பார்ப்போம்.

1820-இல் கவிஞன் ஒரு இதாலியக் கன்னிப் பெண்ணைப் பற்றி ஆழ்ந்த ஆர்வத்துடன் எழுதிய பாடலில் மேலே கண்ட கருத்துக்கள் மின்னலிடுகின்றன. அந்த அழகியைக் கண்டதும், ஷெல்லி, தனது கவிதா வெறியில், அவளை ஒரு லட்சிய அவதாரமாகவே எண்ணிவிட்டான்; அவளுடைய அழகும், குணமும் ஆன்ம ஜோதியும் அப்படிக் கவிஞனை மயக்கி எழுதத் தூண்டின.

பெண்மையே, ஓர் அபூர்வ சிருஷ்டி; உடல் நலத்திலும், நடிப்பிலும், அழகின் மகோன்னத ஜ்வாலையிலும் நிகரற்றவர்கள் பெண்கள்; அவர்கள் கண்களின் அலைப் புரட்சியில் உலகமே மெய் மறந்து அலைகிறது; முகம் மின்னுகிறது; விழிகள் ஜோடிப் புறாக்கள் போலப் பறந்துவருகின்றன; மின்னும் உதடுகள், உண்மைகளையே காற்றில் வரைகின்றன; பற்கள், மின்னலிடும் வெண்மைக் கடலில் மிதந்து வருகின்றன! ஓர் அழகி தன் கூந்தலை, அலட்சியமாக அள்ளி எறியும்போது, இருளே ஒரு ஓவிய விந்தையாகப் பின்னணி செய்கிறது. பெண்மையின் மூக்கு முனையிலே, உலகம் தொங்கிக் கொண்டிருக்கிறது; பெண்மையில் ஆவியே சிருஷ்டி விசாலம்.

பெண்மையின் உடல் பூரிப்பை, எந்த பாஷையிலும் எழுதிக் காட்ட முடியாது. அழகியின் உடலும், இயற்கையின் கடலும் ஒன்றாகத் தோன்றலாம். பெண்களிடத்தில், இயற்கையே அதிகமான சலுகை காட்டுவதாகத் தெரிகிறது. பெண்ணின் பால் போன்ற மேனி, மிருதுவான 'உடல் - கடல்' - எவ்வளவு அருமையாகவும், ரம்மியமாகவும் காட்சியளிக்கிறது; மனப் பண்பட்ட அழகியின் நாவிலிருந்து காதலும், கலையும் கண் சிமிட்டிக் கொண்டு பவனி வருகின்றன. கண்கள் நட்சத்திர ஜிலு ஜிலுப்போடு, மின்னலிடுகின்றன. அழகியின் கண்ணோவியத்தில், கவிதைப் பொறிகள் ஓய்யாரமாகவே இன்னிசையோடு விளையாடுகின்றன. கனிகளோடு, பெண்ணை ஒப்பிட்டு அனுபவிக்கலாம்; அழகே உண்மை; உண்மையே அழகு.

மார்பின் விசித்திரம் ஒரு அபூர்வ சித்திரம்; குழந்தையும் கொஞ்சி விளையாடும் இடமல்லவா? காதலன் - காதலி, அழகுக் கடலில் குளிக்கும் இடுமல்லவா? மனித வளர்ச்சியை, உறுதிப்படுத்தும் பாற்கடல் அல்லவா? இரண்டு புள்ளிகள், விம்மிப் புரள்கின்ற நிலையில், பால் கதறிப் பதறி வருகின்ற நிலையில், குழந்தையும் காதலனும் புரண்டு விளையாடுகின்ற மகோன்னதக் காதல் கோபுரமல்லவா? சிறந்த காதலின் சிறந்த காதல் மாளிகையென்று கூடச் சொல்லிவிடலாம்! மார்பில் மின்னிப் படர்ந்து அலைகின்ற செந்நிற ரேகை, அலைத்துளி போலவும், ஆகாச ரேகை போலவும் ஆர்ப்பாட்டம் செய்கிறதல்லவா?

உலகத்தையே உறுதியாகப் பற்றி இழுப்பது காதல்; அழகி, ஒரு வால் நட்சத்திரம்; பெண்மையில், எத்தனையோ உண்மைகள் மறைந்து கிடக்கின்றன. படித்த பண்பட்ட அழகி பேசும்போது, பேருண்மைகள் வெளிவருகின்றன. கன்னம் கனியக் கனிய, உதடுகள் அசைய அசைய, கண்கள் மின்னலிட,



படிப்பகம்

www.padippakam.com

உலகமே கோலிக் குண்டுபோலச் சுழல்கிறது. மார்பின் மின்னல் கண்கள், பட்டுறையில் உறங்குகின்றன; அழகியின் கைகள் அலைந்து அலைந்து அலையோவியமாகவே சதிரிடுகின்றன; மன மோகனக் கூந்தல், காற்றில் ஆனந்தமாகக் கும்மாளியிடுகின்றது; உலகத்தையே கட்டியிழுக்கும் இறுமாப்புடன் அழகியின் மார்பில், உலகமே உறங்கிக் குறட்டைவிடுகிறது.

அழகு ராணி சகல பருவங்களும் கடந்தவள்; மாசற்ற இயற்கை களங்கமற்ற ஜோதியாகவே, அழகியின் உடலை மூடிக் கொண்டிருக்கிறது. ஒரு பெண், ஒரு அழகி சிரித்தாலும் அழுதாலும், உலகமே கலங்கிக் கலங்கிக் கபோதியாகிவிடுகிறது. காதல், கவிதையைத் தூண்டி வளர்க்கும் ஆற்றலுடையது. காதலுக்கும் சாதலுக்கும் மத்தியில், உலகம் உடும்பு போல வாழ்க்கைச் சுவரில் தொத்தி ஏறி, கெட்டியாய் கவ்விக் கொண்டு நிற்கிறது; விழுந்தால், விபரீதம்தான். ஆனால், அதை யாரும் கவனித்துக் கவலைப்படுவதில்லை.

பட்டாடையில் பதுங்கி மலர்கின்ற அழகியின் அபூர்வ ஜிலுஜிலுப்பு, பிரமாதமானதுதான்; ஞானிகளும் ரிஷிகளும்கூட இதயம் முறிந்து காதற் கோயிலில் சரணாகதியடைந்திருக்கிறார்களே! இதைவிட, வேறு என்ன காதலின் வெற்றிக்கு அடையாளம் வேண்டும்?

காதலிலே, நம்பிக்கை வளர்கிறது; இயற்கை அழகு வெள்ளத்தில், இறுமாப்படைகிறது. அழகியின் கண்கள், காதலின் அபூர்வ ரஸகுண்டுகள்; காதலன் - காதலி மன ஐக்கியத்தில் இன்ப உச்சியை, ஏன் இலட்சிய சொர்க்கத்தையே எட்டிப் பிடிக்கிறார்கள்; மன ஒருமை மாறினால், இன்பம் மாறித் துன்ப உலகமான நரகத்தையே சேர்வார்கள். அழிவுக்கும், அழியாமைக்கும் மத்தியில், காதல் சுழல்கிறது; மின்னலிடுகிறது.

கவிஞன் ஷெல்லி, காதலிலே எவ்விதக் கட்டுப்பாட்டையும் நிர்ப்பந்தத்தையும் விரும்பவே இல்லை. இயற்கையின் எழிலை, இயற்கையின் விசித்திர லீலைகளை, சட்டமோ சமூகமோ கட்டுப்படுத்தலாகாது. ஆண் - பெண் சந்திப்பில், அழகியின் மர்ம ஐக்கியத்தில், இயற்கையின் முழுமையும் நின்று நில வேண்டும். செயற்கை, செங்குத்தாய் வந்து சாயக் கூடாது. இயற்கை மலர்போன்றது; காதல் இயற்கையும் அப்படித்தான். இதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. பெண்மை மலரும்போது, இயற்கையின் இறுமாப்பை இடர்ப்படுத்தக் கூடாது. காதலன் - காதலி அழகுக் கடலில் குளித்து இன்புறும்போது, 'சட்ட நாய்' குலைக்கக் கூடாது. இயற்கையின் முழுமையைக் கவிஞன் தான், ஆழமாய், மிக மிக ஆழமாய் உணர முடியும். காதலன் - காதலி ஜோடிதான் இயற்கையின் முழு இங்கிதத்தையும் ரசித்து இன்பக் கடலாட முடியும்; பணச் சுமையின் கீழ், காதல் முன்வராது. சட்ட முனையில், காதல் சவம்போல உறங்காது; இயற்கையின் முழு இங்கிதத்தையும் அனுபவிக்கக் காதலன் - காதலி ஜோடிக்குத்தான் அந்த உரிமை, ஒப்பற்ற உரிமை உண்டு.

அழகியின் கண்கள் சுழலும்போது உலகமே உருண்டு திரண்டு பாற்கடலாகவே மாறிவிடுகிறது; பெண்மையே பேருண்மைக் கடல். பெண்களின் கண்கள், தேன் துளிகள், கற்கண்டு அலைகள், கண்ணாடிக் கோலிக் குண்டுகள், என்றும் தித்திக்கும் 'குலாப்ஜான்'; அவர்களின் காதல் - நாவினின்று உதிர்கின்ற சொற்கள், ரஸகுல்லா - ரீங்காரம்!

ஆஹா!

கம்பனின் சீதையும், ஷேக்ஸ்பியரின் ஜூலியட்டும், தாகூரின் சித்ராவும் காதலின் ஆழத்தையும், பூரிப்பையும் நன்கு உணர்ந்தவர்கள் அல்லவா? இயற்கையின் எழிலோவியமான சௌந்தரிய ஜிலுஜிலுப்பை, கவிஞர்கள் உண்மையாகவே வருணிக்க முடியுமா, என்ன? ஊமைச் சொற்களுக்கு உணர்ச்சியூட்டி முலாம் பூசியல்லவா கவிஞர்கள், பெண்மையை பாஷையில் அலங்கரிக்கிறார்கள்; கவிஞன் உள்ளம், கற்பனை யுலகில் நீண்ட நேரம் சஞ்சாரம் செய்து உண்மையின் எல்லையையும் பெண்மையின் எழிலையும் அளவிட்டு, அதன்பின் அனுபவ உலகில் பாய்ந்து இன்ப உச்சியில், ஆனந்தவெறியில் பெண்வடிவங்களையே சிருஷ்டி செய்ய முன் வருகிறது. கவிஞனும் சிருஷ்டி ஜாலத்தில் ஈடுபட்ட ஓவியச் சிற்பிதான். ஷெல்லியும் கற்பனையுலகில், ஒரு நிகரற்ற கவிஞன்தான் - சிந்தனைச் சிற்பி! ■

## ஹைகூ நாடு

விஞ்ஞான நாடாகிய ஜப்பானில் ஏறத்தாழ இரண்டு கோடிக் கவிஞர்கள் இருக்கிறார்கள். அண்மையில் ஒரு ஹைகூப் போட்டி நடத்தினார்கள். அதில் கலந்து கொண்டவர்கள் எழுபதாயிரம் பேர்!



படிப்பகம்

www.padippakam.com

# வேதக் கவிதை

வேதங்கள் கவிதையாகவே மலர்ந்திருக்கின்றன. இந்திய வேதங்கள் நான்கில் அதர்வ வேதம் ஒன்று. எம்.ஆர்.ஜம்புநாதன் 1940 ஆம் ஆண்டு இதைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார். அதிலிருந்து சில பகுதிகள்

உச்சியின் மகனே! (மின்னல்)
உனக்கு வணக்கமாகுக
எரிக்கும் உனது ஆயுதத்துக்கு
இணக்கமாகுக
மர்மத்திலே உள்ள
உனது பரம நிலயத்தை
நாங்கள் அறிகிறோம்
கடலின் உள்ளே
நீ நாபிபோல் வைக்கப்பட்டுள்ளாய்

■

என் நாக்கின் நுனியில் தேன்
நாக்கின் மூலத்தில்
அதி இனிய தேனாகும் நீ
எனது சலனம் தேன்மயம்
என் கமனம் தேன்மயம்
நான் மொழியால் தேன்மயமாய்
மொழிகிறேன்
நான் தேன் தோற்றமாக வேண்டும்
நான் தேனைவிடத் தேனாயுள்ளேன்.

■

சோதி பயப்படுவதில்லை
புவியும் பயப்படுவதில்லை
அதனால் துன்பமாவதில்லை
பிராணனே! நீயும்
அங்ஙனம் பயமாகாதே.
இரவு பயப்படுவதில்லை
பகல் பயப்படுவதில்லை
அதனால் துன்பமாவதில்லை
பிராணனே! நீயும்
அங்ஙனம் பயமாகாதே.
சத்தியம் பயப்படுவதில்லை
அசத்தியம் பயப்படுவதில்லை
அதனால் துன்பமாவதில்லை
பிராணனே! நீயும்
அங்ஙனம் பயமாகாதே.

■

ப்படி காற்று புவியின் மேல்
ப் புல்லை இங்குமங்கும்
அசைக்கின்றதோ, அப்படியே
ன் மனத்தை உன்னிடமிருந்து
ங்காமலிருப்பதற்கும்
ன்னுடன் நீ விருப்பமுள்ளவளாவதற்கும்,
அசைத்துக் கடை கிறேன்.

... அம்புக்கு அம்புத் தண்டைப் போல்
இனி எனது அழைப்புக்கு
அவள் வருக
அகத்திலுள்ளது புறத்திலாகும்
புறத்திலுள்ளது அகத்திலாகும்
ஓஷதியே! விசுவ ரூபங்களான
கன்னிகைகளின் மனத்தை கிரகி

■

**இரவு**

அவள் முதன்மையாய்
உதயமாயுள்ளாள்
அவள் யமனில்
பசுவாகியுள்ளாள்
வரப்போகும் வருஷத்துக்கு
பால்மிகும் அவள்
எங்களுக்குக் கறப்பாளாக
எங்களில் முதன்மையாய்
ஒளி வீசுபவள் இவளே
இவள் அந்நியர்களில்
ஸ்தாபிதமாகி சலனமாகுபவள்
இவளகத்தில்
அதி மேன்மையான மகிமைகளுண்டு
நவமாய்த் தோன்றும்
மணப் பெண்ணான இவள்
ஜனனஞ் செய்பவள்
இவள் ஜயித்துள்ளாள்.

■

தூக்கமே!
நீ சாவதில்லை
நீ சீவிப்பதில்லை
தூக்கமே! நீ
தேவர்களின் அமிருத கருப்பம்
வருணானி உனது தாயாவாள்
யமன் உன் தந்தை
தூக்கமே!
உனது சனனஸ்தானத்தை
நாங்கள் அறிவோம்
நீ தேவ சகோதரிகளின் மகன்
நீ யமனின் காரியம்
நீ அந்தம் செய்பவன்
நீ மிருத்யு
தூக்கமே! எங்களைக்
கெட்ட கனவினின்று கா.




படிப்பகம்

www.padippakam.com



# திருட்டுப் பயல்

**கபிலர்**





**தோழி!** இந்த வேடிக்கையைக் கேள்! உனக்கு நினைவிருக்கிறதா அந்தச் சுட்டிப் பையனை! சிறுவயதில் நாம் மணல் வீடு கட்டி விளையாடும் போது காலால் எற்றிக் கலகம் செய்வானே! நம் கூந்தலில் அணிந்த மாலையை அறுத்தெறிந்து சிரிப்பானே! நாம் விளையாடும் பந்தைப் பறித்துக் கொண்டு ஓடி மனம் நோகச் செய்வானே! அந்தப் போக்கிரியை உனக்கு நினைவிருக்கிறதா?

அவன்! ஒருநாள் நானும் என் தாயும் மட்டும் வீட்டில் இருந்தபோது வந்துவிட்டான்! 'தாகத்திற்கு நீர்' வேண்டும் என்று குரல் கொடுத்தான். ஏதோ வேலையாய் இருந்தாள் என் தாய்! எனவே என்னை அழைத்தாள். பொற்பாத்திரத்தில் நீர் நிரப்பி என்னிடம் கொடுத்தாள். 'அவனுக்குத் தண்ணீர் கொடுத்துவிட்டு வா' என்று கூறி அனுப்பினாள். நானும் வந்திருப்பவன் யார் என்று தெரியாமல் சென்றேன்.

அவன் என்ன செய்தான் தெரியுமா? என் கையைப் பிடித்து இழுத்தான். அந்தக் கணத்தில் என்ன செய்வதென்று அறியாத நான் 'அம்மா! அம்மா! இவன் என்ன செய்கிறான் வந்து பார்" என்று கத்திவிட்டேன்.

என் குரல் கேட்டு என் தாய் பதறியபடி ஓடி வந்தாள். தாயைக் கூவி வரவழைத்த நானோ 'நீர் குடிக்கும்போது அவனுக்கு விக்கல் வந்துவிட்டது' என்று கூறிச் சமாளித்தேன்.

அதைக் கேட்ட தாயும், 'அவசரம் ஏன்? மெல்ல குடிக்கக் கூடாதா?' என்று கூறி அவனது முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

அவனோ கடைக்கண்ணால் பார்த்தான். கொல்வது போல் பார்த்தான். அதோடு விட்டானா அந்தத் திருட்டுப் பயல். என்னைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்தானடி தோழி!

சுடர்த்தொடீஇ! கேளாய்; தெருவில்நாம் ஆடும்
மணல் சிற்றில் காலில் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டோடி,
நோதக்க செய்யும் சிறுபட்டி, மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா, இல்லிலே,
'உண்ணுநீர் வேட்டேன்' எனவந்தாற்கு, அன்னை
'அடர்பொன் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்!
உண்ணுநீர் ஊட்டிவா' என்றாள்; என, யானும்
தன்னை அறியாது சென்றேன்; மற்று என்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு,
'அன்னாய்! இவன் ஒருவன் செய்ததுகாண்!' என்றேனா;
அன்னை அலறிப் படர்தர, தன்னையான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவ, மற்று என்னைக்
கடைக்கணால் கொல்வான்போல் நோக்கி கைக்கூட்டம்
செய்தான்அக் கள்வன் மகன்.

**– குறிஞ்சிக்கலி – 15**

சுடர்த்தொட்டு ஒளி வீசும் வளையலை அணிந்தவளே;
அடைச்சிய கோதை-கூந்தலில் வைத்த மாலை; பரிந்து -
- அறுத்து
சிறுபட்டி - குறும்புக்காரன்;
அடர்பொன்
சிரகம் - பொற்குவளை
தெருமந்திட்டு - மருண்டு;
புறம்பழித்து நீவ - முதுகைத் தடவிக் கொடுக்க;
நகைக்கூட்டம் - திரும்பத் திரும்பச் சிரித்தல்.

**– பொன். செல்வகணபதி**



படிப்பகம்

www.padippakam.com

# கானாப் பாடல்கள்

**கபிலன்**

நகரம் சார்ந்த இலக்கியம் அரசியல், இவைகளை முன்வைத்து, கானா பாட்டுகளின் நிலையை மூன்றாகப்பிரிக்கலாம். அ. சேரி, ஆ. கல்லூரி, இ. சினிமா.

முழுக்கச் சென்னை நகரத்திலேயே தோன்றி வாழ்ந்து கொண்டிருக்கும் கலையாக இந்தக் கானா பாட்டுகள் இயங்குகின்றன. இவை இன்று பரவலாகப் கேட்கப்பட்டும், பாடப்பட்டும் மிக விளம்பர மிக்க கலையாக இருப்பதற்குக் காரணம், சினிமா ஊடகம். இது கானாக்கலையை உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும் கொண்டு சென்றிருக்கிறது.

கானாவின் தொடக்கம் 50 ஆண்டுகள் என்று ஒரு மூத்த கானா பாடகர் கூறுகிறார். இந்திய விடுதலைக்குப் பிறகுதான் இதன் போக்கும் பரிணாமமும் வளர்ச்சி பெற்றன. கானா என்பது இந்தியில் பாட்டு என்று பொருள்படுகிறது. கானா - கல்வாலி என்பது வடநாட்டுக் கலாச்சாரத்தில் ஒரு கச்சேரி வடிவம். ஒலிக்கும். நாட்டியக்காரி ஆடுவாள். நடனம் முடிந்ததும் அவள் மீது பணத்தை வாரி இறைப்பர். இது ஒரு உயர் வர்க்கத்தின் ஆடம்பரக் கலையாகவே இருந்து வருகிறது.

சென்னை நகரச்சேரிகளில் யார் வீட்டிலாவது மரணம் நேர்ந்தால். அந்தச் சவம் இரவு தங்கி மறுநாள் எடுப்பதாக இருந்தால் அந்த வீட்டில் கானா கச்சேரி நிகழ்த்துவர். வீட்டின் வெளிப் புறத்தில் ஒரு மூலையில் பத்துப் பதினைந்துபேர் வட்டமாக உட்கார்ந்துகொண்டு கஞ்சா ஊதிய வாறு ஒரு மயக்க நிலையில் பாடிக் கொண்டிருப்பர். டோலக், தபேலா, தீப்பெட்டி, கையடக்கமான தப்பை, அலுமினிய தேக்சா போன்றவையே இசைக் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந் நிகழ்ச்சியை நடத்துவது அதே பகுதியைச் சேர்ந்த ரிக்ஷா, ஆட்டோ ஓட்டுநர்கள், ரவுடிகள், சாராயம் விற்போர் போன்றவர்கள் ஆவர். இந்நிகழ்ச்சிக் கென்று பக்கத்துச் சேரிகளிலிருந்து பாடகர்களை அழைத்துவருவர். பல்வேறு கலை நிகழ்ச்சிகளில், பாடுவதற்கான வாய்ப்பில் முதலில் நான், நீ என்ற சர்ச்சையில் கை கலப்பு நீண்டு ஒருவரை நடுவர் வெட்டிக் கொள்வதும் உண்டு. இதற்காகவே பாடகர்கள் தற்காப்புக்காக ஆயுதத்தை எடுத்து வருவர். மேலும் ஒரு பாடகரோடு நான்கு ஐந்து பேர்கள் சேர்ந்து வருவர். முரண்பிடித்த ஜல்லிக் கட்டுகளாக ஒரு மூர்க்கத்தோடு ஒவ்வொரு பாடகரும் கச்சேரிக்கு வருவர்.

சாவு வீட்டில் ஒருபுறம் அழுது கொண்டிருக்க இவர்கள் ஒருபுறம் தங்கள் கச்சேரிகளை நிகழ்த்திக் கொண்டிருப்பர். இப்பாடகர்களுக்கு அவ்வீட் டினர் பாலூற்றாத கடுப்புக் காப்பியை வழங்குவர். (சாவு வீடு என்பதால் பாலூற்றாத காப்பியைத்தான் குடிக்க வேண்டும் என்ற நம்பிக்கை வைத்துள்ளனர்.) இவர்களின் பாட்டுகளில் தன்னுணர்வு, சோகம், காதல், அரசியல், சமூக விமர்சனம் ஆகியவை கலந்திருக்கும். இடையிடையே பழைய சினிமாப் பாடல்களையும், விரும்பிப் பாடுவர். பெரும் பாலான பாடகர்கள் எம்.ஜி.ஆர்., ரஜினி ரசிகர் களாக உள்ளனர். இவர்களின் முரண் வாழ்க்கை இவர்களின் கலைகளிலும் வெளிப்படுகிறது.

வட சென்னைப் பாடகர்கள் புளியந்தோப்பு ஆடு, மாடு இறைச்சிக் கூடத்தில் வேலை செய்பவ ராக இருப்பதால் ஆட்டுத் தோலைக்கொண்டு அவர்களே கையடக்கத் தப்பை செய்து வைத்துக் கொள்கின்றனர். தவிர அதே சமூகத்தைச் சேர்ந்த தபேலா, டோலக் கலைஞர்களை முன்னிருத்தி நிகழ்ச்சி நடத்துவர். பெரும்பாலான பாடகர்கள் அவர்களே ஏதாவது ஒரு கருவியை இசைத்துக் கொண்டே பாடுவர்.

இவர்களின் கலையில் இசை/வார்த்தைகள் இரண்டு பக்கங்களாக அமைகின்றன. பெரும் பாலோர் பாட்டுகள் பழைய சினிமா பாட்டுகளின் மெட்டுகளையே ஞாபகப்படுத்துகின்றன.

குணங்குடி மஸ்தான், நாகூர் அனிபா ஆகி யோரின் பாணியை இவர்கள் கையாளுகின்றனர். இந்தப் பாடல்களில் உள்ள கருத்துக்களையும் இந்தப் பாட்டுகளில் காண முடிகிறது.

சென்னை சாதி சார்ந்த ஒரு நகரமாக இருப்பதால் வட இந்தியர், தெலுங்கர், மலையாளி, பார்ப்பனர் போன்றோர் சேர்ந்து வாழும் நிலை உள்ளதால், மொழிக் கலப்பு இந்தப் பாட்டுகளில் அதிகமாகக் காணப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

வெளி மாவட்டங்களிலிருந்து பிழைப்பைத் தேடிச் சென்னைக்கு வந்தவர்கள் கட்டடம், பாலம் கட்டும் ப்ணியில் தம்மை நிலைப்படுத்திக் கொண்டு வாழலாயினர். அவர்களின் கூத்து, நாட்டுப் பாடல் போன்ற கலைக் கூறுகளை சற்று ஒதுக்கி வைத்து, வயிற்றுப் பிழைப்புக்காக உதிரி நகரத் தொழில் களில் மூழ்கலாயினர். தங்குவதற்காக நகரின் ஒதுக்குப்புறத்தில் குடிசைகள் அமைத்து வாழ்ந்தனர். இதுவே பிறகு சேரிகளாக நிலை பெற்றன. இவர்களின் உள்ளுணர்வாய் இருந்த கூத்து, நாட்டுப் பாடல் போன்ற கலைக்கூறுகள் நகரத்தின் நெரிசலில் நசுங்கி, மொழிக் கலப் படைந்து பிறகு கானா பாடல்களாகத் தம்மை தன்னை வடிவம் மாற்றிக் கொண்டன.

அம்பது ஆண்டுகளுக்கு முன் பிழைப்புத் தேடி சென்னைக்கு வந்த கூத்து, நாட்டுப்புறக் கலைஞர்களின் வாரிசுகள், இன்று சென்னை நகரங்களில் புகழ் பெற்ற கானாப் பாடகர்களாக உலவுகின்றனர். இவர்களுள் ஆயிரம் விளக்கு செல்வம், சிந்தாதிரிப்பேட்டை நாதன், குர்சேரி குமார், எக்மோர் அந்தோணி, வியாசர்பாடி உலகநாதன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்.

மூத்த கானா பாடகர்களின் வாரிசுகள் இன்று தொழிற்கல்வி நிறுவனங்களிலும், கலைக் கல்லூரி களிலும் பயின்று கொண்டிருப்பதால் தம் பெற்றோர் கலையைக் கல்லூரியின் பூங்காக் களிலும், கேண்டீன்களிலும், சுவர்களின்மீதும் தம் காதல், சமூக அனுபவங்களைத் தமிழ்/ஆங்கிலம் கலந்து பாடிக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களின் பாட்டுகளில் பாலியல் வக்கிரம், பெண்களைக் கேலி செய்தல் ஆகியவை காணப் படுகின்றன. நவீன சினிமாக்களின் இசைப் பாதிப்பும் இருக்கிறது. இது நம் சமூக ஒழுங்கை எச்சரிக்கும் விதமாக அமைகிறது.

நம் சமூக அழுக்கைச் சலவை செய்யும் சோப்பு, தண்ணீர் இவர்கள் பாட்டுகளில் அதிகம் இல்லத தால் இவர்கள் கலை வெளிப்பாடு, வெடித்துக் காய்ந்த நிலமாகக் கிடக்கிறது.

கானா இன்று சினிமா என்னும் ஒரு முதலாளியின் கைக்கு மாறி இருக்கிறது. கல்லூரி களில் கானா பாடிக் கொண்டும், தூரம் இருந்து கவனித்துக் கொண்டும் இருந்த மாணவர்கள் இன்று சினிமாவில் உதவி இயக்குநராகவும், இசையமைப் பாளராகவும் இருப்பதால் தம் கலையைக் கல்லூரியிலிருந்து சினிமாவுக்கு இடம் மாற்றி இருக்கிறார்கள்.

'அமரன்' தொடங்கி 'கல்லூரி வாசல்', 'காதல் கோட்டை', 'காலமெல்லாம் காதல் வாழ்க' இன்று 'ஏழையின் சிரிப்பில்' வரை இந்தக் கானாப் பாட்டுகள் விளம்பரம் பெற்று இருக்கின்றன.

சாவுக்கு மட்டும் பாடப்பட்டு வந்த இந்த இசைக்கலை இன்று திருமணம், திருவிழா போன்ற எல்லா நிகழ்ச்சிகளிலும் இடம் பெற்று வருகிறது.

சினிமாவைத் தவிர 40-க்கும் மேற்பட்ட ஒலிப் பேழைகள் இன்று கானாப் பாடகர்களாலேயே வெளியிடப்பட்டு இருக்கின்றன.

கானாப் பாட்டுகள் இவ்வாறு விளம்பரம் பெற்றிருந்தும் அப்பாடகர்களின் அக/புற வாழ்க்கை அவ்வளவு வெளிச்சமாக இல்லை. அவர்களிடம் உள்ள தாழ்வு மனப்பான்மை, அணுகுமுறை, கல்வியறிவு இன்மை, போலி நம்பிக்கைகள், அவர்களின் பலம் அவர்களுக்கு தெரியாதிருத்தல் போன்ற மனித முரண்களே அதற்குக் காரணமாக அமைகின்றன.

எதுமை மோனை, அழகியல், கடவுள் போன்ற கூறுகளை உடைய நாட்டுப் பாடல்கள், தம் வெளிப்பாட்டிலிருந்து விலகாமல் வாழ்வதைப் போலக் கானாப் பாட்டுகளும் தம் மையத் தன்மையை மாற்றிக் கொள்ளாமல் கால மாறு தலுக்கேற்ப இயங்குமாயின், நகர்சார் கலையின் புதிய வடிவமாகத் திகழும்.

இவ்வாறு மாறவில்லையெனில் இப்பாட்டு களின் மெய்ப்பாட்டை சரியாகப் பயன்படுத்தத் தவறியதாலும், இந்தக் கலையை சினிமா என்னும் பெருமுதலாளி கைப்பற்றியதாலும், இப்பாடகர்கள் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளத் தவறியதாலும் தமக்குள் ஒரு போராட்டக் குணம் இல்லாததாலும் இந்த மக்கள் கலை நாளடைவில் பிழியப்பட்ட சக்கைகளாக மாறிவிடும் எனக் கருத இட மிருக்கிறது.

இனியேனும் இப்பாடகர்கள் தம் படைப்பு களைக் கைப்பற்றியவர்களிடமிருந்து மீட்டு ஒரு சமூக விடிவுக்காக இக்கலையை எடுத்துச் சென்றால், கலைக்கு இவர்கள் சரியான மரியாதை செய்தவர் ஆவார்கள்.

■


படிப்பகம்

www.padippakam.com

## கொலுசுச் சத்தம்

**பொன்.குமார்**

முறிந்த சிறகு
பறந்து கொண்டிருக்கும்
இறகுப் பந்து

■

விடுதலை பெற்றது
நீண்ட நாள் வழக்கு
நீதி மன்றத் தீர்ப்பு

■

செம்மண் பாதை
புழுதி கிளம்பியது
கிராமத்து நினைவுகள்

■

குயில் பாட்டு
பட்டாம் பூச்சி
கேட்பதா பார்ப்பதா?

■

காதில் ஒலிக்கிறது
இல்லாமையினால் விற்ற
கொலுசுச் சத்தம்

## அழுகின்ற வாக்கியம்

**வசந்தராஜன்**

**இயேசு**

வெளிச்சம் செய்யும்
எல்லாக் குற்றங்களுக்கும்
இருட்டு
சிலுவையில் அறையப்படுகிறது

■

**அழுகின்ற வாக்கியம்**

அழுகின்ற வாக்கியம்தான் நான்.
இருந்தாலும்
என் எல்லா வார்த்தைகளும்
சிரிக்கும் வார்த்தைகள்

■

**மௌனம்**

இருட்டு
வெளிச்சத்தின் மௌனம்.

மலைகளின் மௌனமும்
பூக்களின் மௌனமும்
இந்தப் பூமியி(ன்)
புத்தம்புது அர்த்தங்கள்.

## நடமாடும் கவியகம்

நடமாடும் உணவகம், நடமாடும் நூலகம், நடமாடும் நீதி மன்றம் என்ற வரிசையில் இப்போது புதிதாகச் சேர்ந்திருப்பது நடமாடும் கவியகம். இந்தப் புதுமையான முயற்சியைத் தொடங்கி இருப்பவர், நாவல், நாடக ஆசிரியரான ஜெ.பி.பிரீஸ்ட்லி. இந்த நடமாடும் கவியகத்தில் புகழ்பெற்ற கவிஞர் ஒருவர் இருப்பார். அவர் ஆலோசனைகள் கூறுவார். எழுதுவதில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தாலும் தீர்த்து வைப்பார். இதற்குக் கட்டணம் எதுவும் இல்லை. இந்த நடமாடும் கவியகம் இங்கிலாந்தில் பிராட்போர்ட் நகரத்தில் இயங்குகிறது.



படிப்பகம்

www.padippakam.com



**மின்மினிக் காடு - ஈரோடு தமிழன்பன்.**

*பக்-80. ரூ.35, மருதா, 62/1, முதல் தளம், பீட்டர்ஸ் ரோடு, சென்னை - 600 014.*

இடைவெளி இல்லாமல் தொடர்ந்து எழுதி வரும் ஒரு சிலரில் தமிழன்பனும் ஒருவர். நவீன கவிதை என்று வந்தாலும் அதிலும் தடம் பதிக்க இவர் தவறுவதில்லை. எங்கும் தேங்கிவிடாமல் ஒரு சீராக ஓடும் நதியோட்டம் இவரது கவிப்பயணம். பல்வேறு வடிவச் சோதனைகளிலும் தன்னை இணைத்துக் கொண்டு முயன்று பார்ப்பவர். நறுக்குக் கவிதைகளாகவே ஒரு தொகுதியைக் கொண்டு வந்துள்ளார். அதுதான் மின்மினிக்காடு.

மரத்தை உளியால் இழைக்கும்போது உதிரும் சிராய்கள் போன்றவை இந்த மின்மினிக் கவிதைகள் என்று கூறும் அழகு ரசிக்கத்தக்கது. இழைக்கப் பட்ட மரங்கள் 'நிலை'யாக நிற்கும். கதவாகக் கனக்கும். ஆனால், இந்தச் சிராய்களை எந்த ஆசாரியும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. கனவு களைச் சுமந்த சிறார்கள் இந்தச் சிராய்களில் மனம் பறிகொடுப்பர். ஆனால், இந்தக் கவிதைத் தச்சரோ சிராய்களைச் சேர்த்து வைத்துக் கொடுத்துள்ளார்.

இக்கவிதைச் சிராய்களில் சில சாட்டையாகச் சுழலுகின்றன. துப்பாக்கியாகித் துளைக்கின்றன, மாய விரல்களாகி மனதை வருடுகின்றன. பலவகை அனுபவங்களை அளிக்கின்றன. கவிதை சுருக்கமாக இருக்க வேண்டும். சுருக்கென்று தைக்க வேண்டும் என்று ஓர் இலக்கணம். அதற்கு இது இலக்கியம்.

**தங்கக் கொலுசு**
**போட்டுக் கொண்ட மயிலால்**
**ஆட முடியவில்லை**

■

**வாழ்க்கை அந்நிய மொழியில்**
**மரணம் தாய் மொழியில்**

இந்த மின்மினி வெளிச்சத்தில் வாழ்க்கையைப் படிக்கலாம்.

■■

**புல்லாங்குழலே... - கவிஞர் புவியரசு**

*பக். 192. விலை ரூ.45/- கண்ணதாசன் பதிப்பகம், 12, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 600 017.*

கவிஞர் புவியரசு வானம்பாடிக் கவி. அவரிடமிருந்து புறப்பட்டிருக்கிறது புல்லாங்குழலின் கீதம்.

'இவர் கவிதைகள் அத்தனையும் கதிர்மணிகள்' என்னும் இராம.கண்ணப்பனின் அறிமுகத்தில் அர்த்தமுண்டு.

தன்னைத் தன்னிலிருந்து பிரித்துப் 'போக்கிடம்' தேடும் புதுமையான உணர்வுகளைத் தருகின்றன இக்கவிதைகள்.

சாதி மதச் சந்துபொந்துகளில் புகுந்து வேலிகளை வெட்டி வெளியில் வீசவும் சுதந்திர அருவியில் நீராடவும் கற்றுத் தருகின்றன.

'மூளை குப்பைத் தொட்டியல்ல. எல்லாக் குப்பைக் கூளங்களையும் எரித்து விடுங்கள். கடவுளையும் சேர்த்து' என்பன போன்ற தீவிரம் இக்கவிதைகளின் அடிநாதம். சுருக் சுருக்கென்று சுடும் சில நறுக்குகள் நூல் முழுக்க.

**பாப்பா கையுதறிய பூனைக்குட்டி**
**சாலை கடக்கக் காத்திருக்கும்**
**பசித்த லாரியின் உறுமல்**

மூத்த கவிஞர்களுள் ஒருவரான புவியரசு அவர் களின் கவிதைகளில் அதற்கான அடையாளங்கள் அழுத்தமாகவே பதிந்துகளளன. நீண்ட இடை வெளிக்குப் பின் வந்தாலும் பல இடைவெளிகளை இட்டு நிரப்பும் வல்லமை இக்கவிதைகளுக்கு உண்டு. அவசியம் படிக்க வேண்டிய நூல் பட்டியலில் இக்கவிதை நூலுக்கு இடம் உண்டு.

■■

**தெரு ஓவியம் - கபிலன்**

*பக்.80. விலை.ரூ.-----------/- யாளி பதிவு வெளியீடு, 8, கார்ப்பரேஷன் கா்லனி, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை -24.*

கபிலனின் கவிதை விரல்களுக்கு நீளம் அதிகம். இதயம் வரை சென்று வருடும். கவிதையைப் படிக்கிறபோது அவரே வாசிப்பதான ஒரு பிரமையைத் தருகிற நடை. பேச்சொழுங்கு நிரவலாக பரவியுள்ள ஒரு நடை. கவுண்டியிலிருந்து புறப்படும் கல்போல கவிதைக்குள்ளிருந்து உருண்டு திரண்ட ஒரு சிந்தனை படிப்பவரைச் சட்டென்று தாக்கும். வளையல் உடைவதில்கூடப் பெண்ணியம் பேச முடிகிறது இவரால். இலேசான அங்கதம் இழையோட இவரது கவிதைகள் வலிமையான அதிர்வுகளை ஏற்படுத்தி விடுகின்றன.

**கம்பன்**

**அப்பாவிற்கு**
**அறுபதினாயிரம் மனைவிகள் இருந்தும்**
**சந்தேகம் இல்லை.**
**ராமனுக்கு**
**ஒரு மனைவி**
**ஆயிரம் சந்தேகங்கள்.**

■■



படிப்பகம்

www.padippakam.com

**நூறு நிலா - அமுதபாரதி**

*பக்-80. விலை. ரூ.------/- அமுதாலயம், 2, சிவஞானம் சாலை, தி.நகர், சென்னை - 600 017.*

ஓவியக் கவிஞரான அமுதபாரதியின் கவிதை ஓவியம் இந்நூல். நூறு 'ஐக்கூ' கவிதைகள் நூறு நிலாக்களாகியுள்ளன.

'நிலா' என்ற ஒரு படிமத்தை நூறு வகையாகப் பார்த்திருப்பது நல்ல முயற்சி. வெறும் அழகியலாக மட்டும் இல்லாமல் ஒரு சமுதாய அக்கறை ஊடுசரடாக ஓடுவது இக்கவிதைகளின் சிறப்பு

**சாக்கடை**
**கடிக்கும் கொசுக்கள்**
**நெளியும் நிலா.**

■■

**விழியீர்ப்பு விசை - தபூ சங்கர்**

*பக்-96; ரூ.35/- சாரல், 73, அபிபுல்லா சாலை, தி.நகர், சென்னை - 600 017.*

காதல் வரிசைக் கவிதைநூல் இது. புத்தகத் தயாரிப்பில் புது எல்லைகள் தென்படுகின்றன. ஏதோ ஒன்றைப் பூசனை செய்து பொழுது போக்க வேண்டியுள்ளது. இவருக்குக் காதலி. அதை அழகாகச் செய்துள்ளார்.

**என்னிடம் கொட்டிக் கிடக்கும் காதலை**
**எதைக் கொடுத்தும் வாங்க முடியாது**
**காதலைத் தவிர.**

■■

**கனவின் மீதி - கி.பி.அரவிந்தன்**

*பக். 96; ரூ.40/- பொன்னி, 29, கண்ணகி தெரு, மடிப்பாக்கம், சென்னை - 600 091.*

மற்றுமோர் ஈழத்துக் குரல். கற்பனையாக அல்லாமல் களத்திலிருந்தே களம்பாடும் கவிஞர்கள் தமிழீழக் கவிஞர்கள். அவர்களுக்கான களம் இன்று உலகளாவியதாகப் பரவியுள்ளது. அகதிகளாக அறியப்பட்ட அவர்களது கடந்த கால நிகழ்காலக் காயங்கள் அவ்வப்போது வாய்திறப்பது கவிதையில். அப்படிப்பட்ட அழுத்தமான பதிவுகள் நிறைந்த ஒரு கவிதை நூல் 'கனவின் மீதி.' புயலுக்குண்டா திசை? என்று கேட்கும் இக்கவிதைகளில் கனத்த இதயமொன்றின் கசிவு தென்படுகிறது. இந்நூலில் உள்ளவை கவிதைகள் அல்ல காயங்கள்.

**தாயகம் நாம் துறந்தவரில்லை**
**எம் தேசம்தான் தொலைந்து போனது.**

■■

**பூட்டிய அறை - ஹெச்.ஜி.ரசூல்**

*பக். 88; ரூ.30/- திணை வெளியீட்டகம், 30, பகவதி லாட்ஜ், நாகர்கோவில்.*

பூட்டிய அறைக்குள் என்னென்ன இருக்கும்? இக்கவிதைகள் பதில் சொல்கின்றன. பூட்டிய அறையின் சாவியும், உள்நுழையும் ஆற்றலும் இக்கவிஞரிடம் உள்ளன. இவர் உள்ளிருந்து அள்ளி வந்து வழங்கும் அனுபவங்கள் ஏராளம்.

**தீராத ஆசை தீரவில்லை**
**முதுகிலும்**
**ஒரு தலையைப் பொருத்தி**
**முன்னும் பின்னும் பார்க்க வேண்டும்.**

இப்படி அதிர்வுகளை ஏற்படுத்தும் அனுபவங்களின் தொகுப்பே இது. இடித்துக் கொண்டு ஏற முடியாமல் பேருந்துகளைத் தவற விடும் அனுபவம் இவருக்குமட்டுமல்ல இன்னும் பலருக்கும் பொருந்தும். சுவையான, சிந்திக்கத்தக்க கவிதைகள் உள்ள நல்லதொகுதி.

■■

**கவிதைப் பொருள் - சிவம் சிவராசன்**

*பக்.108; ரூ.25/- 2/82-09, காந்தி நகர், வேலூர் - 632 002.*

கவிதை பற்றிய நூல். கவிஞர்களைப் பற்றாமல் கவிதைகளைப் பற்றி எழுதியுள்ளதாகக் கூறுகிறார். பிரபலங்கள் கவிஞர்களாகக் காட்டப்படுவதை விட கவிதைகள் பிரபலப்படுத்திக் காட்டப்பட வேண்டும் என்ற வரையறையை இவர் ஏற்றுள்ளதாகத் தெரிகிறது. அதனால், இதழ்களில் வெளியான நல்ல கவிதைகளைப் பிரபலப்படுத்தும் முயற்சியாக இந்நூலைப் படைத்துள்ளார். தமிழில் முறையான கல்வியுடையோர் படைப்பாளிகளாக வரும்போது படைப்பிலக்கியம் இடைவெளிகளைக் கடந்துவிடுகிறது என்றும், மொழிப் பயிற்சியும் படைப்பிலக்கியப் பயிற்சியும் இணையும்போதுதான் வளமான இலக்கியத்திற்கான வலிமை மிகுந்த வேர்ப்பிடிப்பு கால் கொள்ளும் என்றும் கூறுகிறார். அகத்தாக்கம், புறத்தாக்கம், பெண்ணியம் முதலான தலைப்புகளில் இன்றைய புதுக்கவிதைகளின் ஆடுகளங்களை எடுத்துக் காட்டுகளோடு வரைகோடிட்டுள்ளார். வரவேற்க வேண்டிய திறனாய்வு நூல். ■



படிப்பகம்

www.padippakam.com



# நந்திக் கலம்பகம்

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று கலம்பகம். கலம்பகங்களுள் சிறந்ததாக மதிக்கப்படுவது 'நந்திக் கலம்பகம்.' இது கலம்பகங்களுள் காலத்தால் முற்பட்டது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடையில் பாடப்பட்டது. நந்தி பல்லவர் குல மன்னன். அவன் உடன் பிறந்தோர் அவனைக் கொல்லச் சதி செய்து தோற்றனர். புலவனாகிய ஒரு தம்பி நச்செழுத்து வைத்து அறம்பாடி அவனைக் கொல்வதாகக் கூறி இந்நூலைப் பாடியதாகக் கூறப்படுகிறது. தன்னைக் கொல்லப் பாடிய நூல் எனத் தெரிந்த பின்னும் இதன் கவிதைச் சுவையை நுகர்வதற்காக இந்நூலைப் பாடச் சொல்லிக் கேட்டு நந்தி உயிர் துறந்தான் என்பது கதை. அந்நூலிலிருந்து...

■

**கைக்குடம் இரண்டும் கனகக்கும் பக்குடமும்**
**முக்குடமும் கொண்டால் முறியாதோ - மிக்க புகழ்**
**வேய்க்காற்றினால் விளங்கும் வீரநந்தி மாகிரியில்**
**ஈக்காற்றுக்கு ஆற்றா இடை**

(கைக்குடம் - மார்பகங்கள்; வேய் - மூங்கில்; கிரி - மலை; ஈக்காற்றுக்கு ஆற்றா இடை - ஈ பறக்கும்போது உண்டாகும் காற்றைக் கூட பொறுக்காத இடை.)

■

**நம் ஆவி நம்கொழுநர் பாலதாம், நம்கொழுநர்**
**தம் ஆவி நம்பாலது ஆகும் தகைமையினால்**
**செம்மாலை நந்தி சிறுகுடிநாட்டு அன்னமே!**
**தம் ஆவி தாம்உடையர் அல்லரே சாகாமே.**

(கொழுநர் - கணவர்; தம் ஆவி... சாகாமே - என் உயிர் அவரிடம்; அவர் உயிர் என்னிடம். எனவே பிரிவினால் இருவரும் இறக்க மாட்டோம்.)

■

**செந்தணலின் சாற்றைப் பிழிந்து, செழுஞ்சீத**
**சந்தனம் என்று ஆரோ தடவினார் - பைந்தமிழை**
**ஆய்கின்ற கோன்நந்தி ஆகம் தழுவாமல்**
**வேகின்ற பாவியேன் மேல்.**

(சீதம் - குளிர்ந்த; ஆகம் - உடல்.)

■

**மங்கையர்கண் புனல்பொழிய**
**மழைபொழியும் காலம்**
**மாரவேள் சிலை குனிக்க**
**மயில் குனிக்கும் காலம்**
**கொங்கைகளும் கொன்றைகளும்**
**பொன்சொரியும் காலம்**
**கோகனக நகைமுல்லை**
**முகைநகைக்கும் காலம்**
**செங்கைமுகில் அனையகொடைச்**
**செம்பொன்பெய் மேகத்**
**தியாகியெனும் நந்திஅருள்**
**சேராத காலம்**
**அங்குயிரும் இங்குடலும்**
**ஆனமழைக் காலம்**
**அவரொருவர் நாமொருவர்**
**ஆன கொடுங் காலம்**

(சிலை - வில்; குனிக்க - வளைக்க; மயில் குனிக்கும் - மயில் ஆடும்; கோகனகம் - தாமரை; முகை - மொட்டு.)

■

**மண்ணெலாம் உய்ய மழைபோல் வழங்குகரத்**
**தண்ணுலாம் மாலைத் தமிழ்நந்தி தன்னாட்டில்**
**பெண்ணிலா ஊரில் பிறந்தாரைப் போலவரும்**
**வெண்ணிலாவே! இந்த வேகம் உனக்கு ஆகாதே.**

(தண்உலாம் மாலை - குளிர்ந்த மலர் மாலை; வேகம்... ஆகாதே - பிரிவால் வருந்தும் என்னை இப்படிக் கொடுமை செய்கிறாயே, நியாயமா?)

■



படிப்பகம்

www.padippakam.com

## கவிதை என்றால்...

ஒளிவிடும் மின்மினிப் பூச்சிகளை உண்டு வானம்படி உயிர்வாழ்வது போல, ஒளிவிடும் இயற்கை, அழகு ஆகியவற்றால் கவிஞன் உயிர் வாழ்கிறான்.

**- பெய்லி**

■

மனித குலம் அனைத்தினாலும் பொன்முடி சூட்டப் பெற்றாலும் சரி, அல்லது, தன் மந்திரக் குடிலில் தனியே இருக்குமாறு ஒதுக்கப்பட்டாலும் சரி, கவிதை, தன்னளவில் வலிமையும், வனப்பும் மிக்கதுதான்.

**- ஸ்டெர்லிங்**

■

நீ கவிதையின் மூலமாக
வாய்மையை வந்தடைந்தாய்
நான், வாய்மையின் மூலம்
கவிதையை வந்தடைந்தேன்.

**- ஜோபெர்ட்**

■

ஒவ்வொரு கவிஞனிடமும் ஒரு சொந்த வலை இருக்கின்றது. அதில் அகப்படுவன அவனுக்கான மீன்கள் மட்டுமே.

**- ராபர்ட் லிண்ட்**

■

பாஸ்வல்: கவிதை என்றால் என்ன அய்யா?

ஜான்சன்: எது கவிதை அல்ல என்று சொல்வது எளிது. நமக்கெல்லாம் ஒளியைத் தெரியும். ஆனால், அது என்னவென்று விளக்கிச் சொல்ல முடியாதே!

■

கவியமுதைக் கவிஞன் தன் அனுபவச் சாற்றிலிருந்தே வடித்தெடுக்கிறான். ஒப்பற்ற தத்துவ ஞானியாக இல்லாத ஒருவன், என்றுமே சிறந்த கவிஞனாக இருந்தில்லை.

**– கோலரிட்ஜ்**

தத்துவமே! உனைவளர்த்த கவிதைச் செல்வி
அன்புமுகம் பார்த்தேநீ குலைக்கின்றாயா?

**- ஒரு கிரேக்கக் கவிஞன்.**

**தொகுப்பு புவியரசு**

## பழசும், புதுசும்

இது
என் புதுக் கவிதை.
எது புதுசு?
நானா?
இல்லை. நான் கொஞ்சம் பழசு.
சொல்ல வந்ததா?
இல்லை. அது என்னை விடப் பழசு.
சொல்லும் மொழியா?
இல்லை. அது சொல்ல வந்தததை விடப் பழசு.

பின்னே என்ன புதுசு?
இன்றைக்குத்தானே எழுதுகிறேன்,
புதுசு, இன்றைக்கு மட்டும்.
நாளைக்கு இது நேற்றையதாகி விடும்.

கவிதை
முடியவில்லை.
கலைக்கு இன்று விலையுண்டு.
விலை சுமந்தவற்றுக்கு
விதி ஒன்று உண்டு.
அங்காடியில் அடுக்கியதை
வாங்குபவன் தொடும் வரை
பண்டமெல்லாம் புதுசுதான்.
அவன் சோதிப்பது
அந்திம நாளை
மட்டுமே,
(பண்டம்தான், படைப்பாளியல்ல.)

கவிதைக்கு
முடிவில்லை.
கலை என்றால்
பழசுக்கும் மவுசு.
கவிதையும் அப்படியே
காலம் காலமாகக்
காத்திருக்கும் கள்ளைப் போல.

பின்னே என்ன புதுசு?
படிக்கப் படிக்க,
அவனவன்
அநுபவமா?
இப்போதைக்கு
இப்படி வைத்துக் கொள்ளலாம்
கேட்கப் புதுசாக இருக்கிறதே,
இன்றைக்கு மட்டுமாவது.

**- வீ விஜயராகவன்**



படிப்பகம்

www.padippakam.com

(விருது பெற்ற 22 பேரில் 11 பேர், அதாவது 50 விழுக்காடு கவிஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது)

## சாகித்திய அகாதெமி

## 1999 விருது பெற்ற கவிஞர்கள்



டோக்ரி மொழிக்காகப் விருது பெற்றவர் குல்திப் சிங் ஜிந்த்ராஹியா நூல்: மாங்வி பஷாகடி. இந்நூலில் 'கஜல்' 'ஷம்கான்' எனப்படும் உடனடிக் கவிதை போன்ற பல்வேறு வடிவங்களில் அமைந்த கவிதைகள் தொகுக்கப் பட்டுள்ளன. கவிதைகள் சமகாலத்தைச் சித்திரிப் பவை. எளிய மக்களாலும், விமர்சகர்களாலும் ஒரு சேரப் பாராட்டப்பட்டவை. கவிஞர் உயிருடன் இல்லை.



ஆங்கில மொழிக்காக விருது பெற்ற வர் ஏ.கே. ராமானுஜன். விருது பெற்ற கவிதைத் தொகுதி கவிஞரின் தொழில் நுணுக்கத்தையும், வெளிப் பாட்டுச் சிக்கனத்தையும், பரந்த அறிவு, உணர்வு நிலைகளையும் புலப்படுத்துகிறது. கவிஞர் உயிருடன் இல்லை.



கஷ்மீரி மொழிக்காக் விருது பெற்ற வர் அப்துல் ரஷீதி நாஸ்கி. நூல்: வஹ்ராத். இது கஜலும், மற்ற வகைக் கவிதைகளும் உள்ள தொகுப்பு. கஷ்மீரிக் கவிதையின் செவ்வியல் மரபும் புதிய வகை வெளிப்பாடும் இவருடைய கவிதையின் குணங்கள்.



கொங்கணி மொழிக்காக விருது பெற்றவர் ஷரத்சந்தர ஷெனாய், நூல்: அந்தர்நாத். கவிதைகள் சுயம், சமூகம், இயற்கை பற்றிய ஆழமான கேள்விகள், சிந்தனைகளைப் பிரதி பலிக்கின்றன. இந்திய இதிகாசப் புராண மரபில் காலூன்றி நிற்கின்றன.



மணிபூரி மொழிக்காக விருது பெற்ற வர் சகோல்ஸேம் லன்சேன்பா மிதாய். நூல்: ஹி நங்பூ ஹோரந்தேதா. கவிதைகள் மணிபூரி வாழ்க்கையை எளிய நடையில் சித்திரிப்பவை மரபுக்கும், பின் நவீனத்துவத்துக்கும் இடையில் உள்ள போராட்டத்தைப் புலப்படுத்துபவை.



ஒரிய மொழிக்காக விருது பெற்றவர் ஹர்ப்ரசாத் தாஸ். நூல்: கர்பகிரஹ. ஆழ்ந்த தத்துவப் பார்வை, அசாதாரணமான உருவகங்கள், சந்தநய நடை இவருடைய கவிதை களின் அடையாளங்கள்.



ராஜஸ்தானி மொழிக்காக விருது பெற்றவர் வாசு ஆசார்ய. நூல்: ஸீர் ரோ கர். கவிதைகள் சமகாலத்தைப் பிரதிபலிப்பதோடு, அழகின் நயத்தையும் காதல், பரஸ்பர உறவு, சமூக மாற்றங்கள் ஆகியவற்றை எளிய நடையில் பாடுகின்றன.



சம்ஸ்கிருத மொழிக்காக விருது பெற்றவர் ஷிரினிவாஸ் ரத். நூல்: ததேவ ககனம் சைவதரா. உணர்வு களின் அசாதாரண வெளிப்பாடு, உயர்தர மொழி நடை கவிதைகளின் சிறப்பு அம்சங்கள்.



சிந்தி மொழிக்காக விருது பெற்றவர் வாசுதேவ் மோஹி. நூல்: பர்ஃப் ஜோ டஹேயலு. கவிதைகளில் புதிய அணுகுமுறை, வெளிப்பாட்டில் அசாதாரண உயரங்களைத் தொடு கின்றன.



உருது மொழிக்காக விருது பெற்ற வர் பஷீர் பத்ர். நூல்: ஆஸ். கஜல்களின் தொகுப்பு. அறியப் பட்டவை, அறியப்படாதவை, இவற் றின் கலாபூர்வக் கலவையாகக் கவிதைகள் அமைந்திருக்கின்றன. கஜல் வடிவத்தில் நல்ல ஆளுமை, அழகிய வெளிப்பாடு கவிஞரின் திறமை.



படிப்பகம்

www.padippakam.com

## கவிதைப் போட்டி — 2

இதழ் 2 - கவிதைப் போட்டியில்
ரூ.100 பரிசு பெற்ற கவிதை

அகலம் ஆழம் அதிகம் கடல்
பசியைப் போலவே...!
வீசும் வலைக்குள் கிடைப்பது சொற்பம்
சின்ன சோற்று மூட்டையாய்... மீன்களும்
என் வாழ்க்கையும்... நட்புடன்
நிழலாய்க் கூடவே... வறுமையும்...!

**அனலேந்தி**
எண். 9, 7 ஆவது தெரு,
டாடா பாத், கோவை - 641 012.

## பாராட்டுப் பெறுபவை

கண்ணீரில் மிதக்கும் சவப்பெட்டியில்
வறுமைபிடித்த மனிதனின்
தொலைந்த வாழ்வை தேடப் புறப்பட்ட பயணம்

**- பி.கே.சுப்பிரமணி, சென்னை-35.**

உடம்பே படகு
உயிரின் பயணம்
கண்ணில் கடல்
கண்ணீர்க் கரிப்பு.

**- ச.விசயலட்சுமி, சென்னை-2.**

யுகப் பிரளயம்.
அவிழ்ந்து தொங்கும்
உயிர் முடிச்சு.
இன்னும் பிழைத்துத்தான்
கிடக்கிறது
மனித நேயம்...

**- எம்.பி.கமருதீன், தஞ்சாவூர்.**

துடுப்புகளின்
துடிப்பை வைத்தே
வாழ்க்கை உயிர் நமக்கு

ஓய்ந்தன என்
கைத்துடுப்புகள்
இப்போது
நீ பயணப்படு...

**- தே.கருணாகரன், வேலூர்.**

கரையிலிருந்து
கட்டுச் சோறு
கரையுடன்
எனக்குள்ள
கள்ள உறவு.
ஊரில் என்னவோ
சொல்லிக் கொள்வார்கள்
எனக்குக்
கடல்தான்
சோறு
போடுகிறதென்று.

**- விஜயராகவன்**

தவறி விழுந்தாலும்
வீணாகாது பருக்கைகள்
தண்ணீரில் மீன்கள்.

**- பழ.புகழேந்தி, சேலம்.**

தோணி விளிம்பில் ஒற்றைக்கால் ஊன்றி
எம்பினால் கிட்டலாம்.
தோணி கவிழத் தலைகுப்புற விழுந்து
மோட்சமும் கிட்டலாம்.
ஆனாலும், எட்டிப் படிக்கச் சொல்கிறாதே
ஒட்டிய வயிறு.

**- மயூரா ரத்தினசாமி, கோவை.**

எட்டாத உயரத்தில்
ஏழைக்குச் சோறு

**- க.சி.குறள்வேல், காந்திப்பேட்டை.**

■

## கவிதைப் போட்டி — 3

**பரிசு ரூ.100**

*இந்த இதழின் அட்டைப்படம் ஏற்படுத்தும் உணர்வுகளை எழுதி அனுப்புங்கள். மரபுக் கவிதை, புதுக்கவிதை எதுவாகவும் இருக்கலாம். கவிதைகள் வந்து சேர வேண்டிய இறுதித் தேதி: 31-5-2000.*



படிப்பகம்

www.padippakam.com

சாகித்ய அகாதெமி விருது பெற்ற

# அப்துல் ரகுமானுக்குப் பாராட்டு விழாக்கள்

ஆலாபனை' கவிதைத் தொகுதிக்காக 1999ஆம். ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது பெற்ற அப்துல் ரகுமானுக்கு நாடெங்கும் பாராட்டு விழாக்கள் நடந்தன. 'கவிக்கோ' அறிமுக விழாவும் இணைந்து நடத்தப்பட்டது.

## சேலம்

15.1.2000 அன்று சேலம் தமிழ்ச் சங்கம் நடத்திய விழாவிற்கு அரிமா. ம. சியாமளநாதன் தலைமை வகித்தார். முன்னாள் அமைச்சர் க. இராசாரம் பாராட்டுரை வழங்கினார். சு.சுகதேவன் வரவேற்புரை ஆற்றினார். க.வை, பழனிசாமி நன்றி உரைத்தார்.

## கோவை

23.1.2000 அன்று கோவையில் விஜயா பதிப்பகம் திரு மு. வேலாயுதம் ஏற்பாடு செய்த விழா கவிஞர் சிற்பி தலைமையில் நிகழ்ந்தது. கோவை ஞானி, டாக்டர் பூவண்ணன், கவிஞர் பெ.சிதம்பரநாதன், க. அறிவன் கோவை வானொலி இயக்குநர் ஜே. கமலநாதன் ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

## வாணியம்பாடி

29.1.2000 அன்று வாணியம்பாடி முத்தமிழ் மன்ற முத்தமிழ் விழாவில் நிகழ்ந்த பாராட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு நீண்டதொரு பாராட்டுரை வழங்கினார். கவிஞர் வாலி வாழ்த்துக் கவிதை வாசித்தார். விழாவுக்கு இரா. வெங்கட்ட ரமணன் தலைமை தாங்கினார். ப. முகமது யூசுப், கவிக்கோ அறக் கட்டளைப் பொருளாளர் வெ. சோலைநாதன், செயலாளர் அயாஸ்பாஷா முன்னிலை வகித்தனர்.

## தஞ்சாவூர்

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பண்பாட்டியல் ஆராய்ச்சி அரங்கம் 3.2.2000 அன்று முனைவர் கி. அரங்கன் தலைமையில் விழா நடத்தியது. கவிஞர் அறிவுமதி, இரா. பெ.வெற்றிச் செல்வி, முனைவர் மு. இராமசுவாமி ஆகியோர் பாராட்டிப் பேசினர். முனைவர் த. ஈஸ்வரபிள்ளை வரவேற்புரை ஆற்ற, முனைவர் சா. உதயசூரியன் நன்றி உரைத்தார்.

## சென்னை

18.2.2000 அன்று சென்னை பிலிம் சேம்பர், அரங்கில் நிகழ்ந்த முக்தா சீனிவாசனின் 'இலக்கியத்தில் இணையும் இந்தியா' நூல் வெளியீட்டு விழாவில் மக்கள் தலைவர் திரு ஜி.கே. மூப்பனார் அவர்கள் கவிஞருக்குச் சால்வை அணிவித்துப் பாராட்டினார்.

## வேலூர்

வேலூர் 'அகர முதல' இலக்கிய மன்றம் 12.2.2000 அன்று நடத்திய விழாவில், பத்திரிக்கையாளர் மதன், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ரா. சிவக்குமார், இ.ஆ.ப.கவிஞர் அப்துல் காதர், வழக்கறிஞர் தெ. சமரசம், எழுத்தாளர் ஜே.வி.நாதன் ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

## சென்னை

சென்னை புதுக் கல்லூரி உமறுப் புலவர் தமிழ்ப் பேரவை 17.2.2000 அன்று நிகழ்த்திய விழாவில் ஞானபாரதி வலம்புரிஜான் பாராட்டுரை வழங்கினார் முதல்வர் மு. ஜெய்லானி வரவேற்புரை ஆற்றப் பேராசிரியர் மு.அப்துல் ரசாக் நன்றியுரைத்தார்.

## தில்லி

தில்லித் தமிழ்ச் சங்கத்தில் 20.2.2000 அன்று நிகழ்த்திய பாராட்டு விழாவில் ஜி. பாலச்சந்திரன் இ. ஆ.ப. பாராட்டுரை வழங்கினார். தமிழ்ச் சங்கப் பொதுச் செயலர் எம்.என்.எஸ். மணியன் வரவேற்புரை ஆற்றினார்.

## பாளையங்கோட்டை

நெல்லை புதிய வானம் 26.2.2000 அன்று நிகழ்த்திய பாராட்டு விழாவில் கவிஞர் பாலா வரவேற்புரை ஆற்றினார். நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் கி. தனவேல் இ.ஆ.ப., கவிஞர் சிற்பி, பா.செயப்பிரகாசம், ஆகியோர் சிறப்புரை ஆற்றினார். தி.க. சிவசங்கரன், தோப்பில் முகம்மது மீரான்வாழ்த்துரை வழங்கினர். சதக்கத்துல்லா அப்பா கல்லூரி முதல்வர் பேராசிரியர் பீர் முகம்மது, பேராசிரியர்கள் ராமையா, ஜெயராம பாண்டியன், கவிஞர் இளமதி,



படிப்பகம்

www.padippakam.com

எம். ஹெச். முகம்மது இலியாஸ் பாராட்டிப் பேசினர். கவிஞர் காஜா முகைதீன் வாழ்த்துக் கவிதை வழங்கினார். பேராசிரியர் சிவசு, கிருஷ், கவிஞர் தனஞ்செயன் 'கவிக்கோ' இதழ்களை விமர்சித்துப் பேசினர். திரு.கே. நீலகண்டன் நன்றியுரை ஆற்றினார்.

## மதுரை

27.2.2000 அன்று மதுரை விக்டோரியா எட்வர்டு மன்றத்தில் பாராட்டு விழாவும், 'கவிக்கோ' அறிமுக விழாவும் நிகழ்ந்தன. காலையில் நடந்த கருத்தரங்கிற்கு முனைவர் இரா. மோகன் தலைமை ஏற்க, பேராசிரியர் சே. அரி இராமநாதன் வரவேற்றார். 'மனிதத் தேனீ' ஆர். சொக்கலிங்கம் தொடக்கவுரை ஆற்றினார்.

அப்துல் ரகுமான் நூல்களில் 'சொற்சித்திரங்கள்' என்ற தலைப்பில் புலவர் மு.ஜாபர், 'புதிய பார்வைகள்' என்ற தலைப்பில் முனைவர் நிர்மலா மோகன் 'சுயப் பிரசவம்' என்ற தலைப்பில் கவிஞர் கே.ஜி. இராஜேந்திர பாபு, 'சிந்தனைக் கோலங்கள்' என்ற தலைப்பில் முனைவர் இரா. வேல் முருகன், 'வாழ்க்கைத் தரிசனங்கள்' என்ற தலைப்பில் முனைவர் வீ.காந்திமதி, 'சமுதாயப் பதிவுகள்' என்ற தலைப்பில் புலவர் வை. சங்கரலிங்கம் ஆகியோர் உரையாற்றினர். மு. முருகேசன் நன்றியுரைத்தார்.

மாலையில் நிகழ்ந்த பாராட்டு விழாவிற்கு 'தமிழ்ச் செம்மல்' முனைவர் தமிழண்ணல் தலைமை ஏற்றார். தமிழக சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு பி.டி.ஆர். பழனிவேல் ராஜன், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மு. சாலிகு, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் கதிர் மகாதேவன், மதுரை வானொலி நிலைய இயக்குநர் இரா. பாலசுப்பிர மணியன், 'திருக்குறள் மணி' மணிமொழியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கவிஞர் சிற்பி 'கவிக்கோ' இதழை அறிமுகப்படுத்தி உரையாற்றி னார். முனைவர் இரா. மோகன் வரவேற்புரை நல்க முனைவர் ஐ. இசுமாயில் முன்னிலை வகித்தார். புலவர் வை. சங்கரலிங்கம் நன்றியுரை ஆற்றினார். முனைவர் நிர்மலா மோகன் நிகழ்ச்சித் தொகுப் பாளராகப் பணியாற்றினார்.

## நாகர்கோவில்

கன்னியாகுமரிக் கலை அறிவியல் ஆய்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் 28.2.2000 அன்று அறிவர். வே. பால்ராஜ் தலைமையில் ஸ்காட் கிறிஸ்துவக் கல்லூரியிலும், 29.2.2000 அன்று அறிவர் தே. வேலப்பன் தலைமையில் மகளிர் கிறிஸ்தவக் கல்லூரியிலும் பாராட்டு விழாக்கள் நடந்தன. கலை அறிவியல் ஆய்வுக் கழகப் பொதுச் செயலர் இ. ஜேம்ஸ் ஆர் டானியல் 'கவிக்கோ' இதழை அறிமுகப் படுத்தி உரையாற்றினார்.

29.2.2000 அன்று தெ.தி. இந்துக் கல்லூரியில் கல்லூரி முதல்வர் முனைவர் வீ.கிருஷ்ணன் தலைமையில் விழா நிகழ்ந்தது. தெ.தி.க. ஆட்சிக் குழுத் தலைவர் வீ. திரவியம், செயலர் பி. ஆறுமுகம் பிள்ளை, முனைவர் எஸ். செல்லையா பிள்ளை வாழ்த்துரை நல்கினர். முனைவர் தா. நீலகண்ட பிள்ளை வரவேற்புரை ஆற்றினார். முனைவர் எஸ். ஸ்ரீகுமார் அறிமுக உரை ஆற்றினார் முனைவர் வி. வேணுகுமார் நன்றி யுரைத்தார்.

## தக்கலை

திருவிதாங்கூர் டெலிவிஷன் நெட்வொர்க் 28.2.2000 அன்று தக்கலை லலிதமஹாலில் பாராட்டு விழா நடத்தியது. நாவலாசிரியர் பொன்னீலன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. முகமது இஸ்மாயில், முனைவர் ஜேம்ஸ், ஆர் டேனியல், ச. அனந்த சுப்பிரமணியம் பாராட்டிப் பேசினர். செந்தாமரை கே.பி.எஸ். ஹமீது சால்வை அணிவித்தார். ஹெச். ஷாஜஹான் நினைவுப் பரிசு வழங்கினார். தக்கலை ஹலீமா, ஹெச்.ஜி.ரசூல் விழா ஏற்பாடுகள் செய்தனர்.

## மதுரை

மதுரை மாநகர் மாவட்டத் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர், சங்கம் 2.3.2000 அன்று பாராட்டு விழா நடத்தியது. ப. நடராஜன் தலைமை வகித்தார். பாராளுமன்ற உறுப்பினர் மோகன், மேலாண்மை பொன்னுச்சாமி, பேராசிரியர். கதிரேசன் பாராட்டிப் பேசினர். ந. ஸ்ரீதர் வரவேற்றார். பால் டேவிட் பொற்செல்வன் நன்றியுரைத்தார்.

கவிஞர் படித்த மதுரை தியாகராசர் கல்லூரியில் 3.3.2000 அன்று முதல்வர் நாராயணசாமி தலைமையில் பாராட்டு விழா நடந்தது. பேராசிரி யர்கள் கதி. சுந்தரம், கு. ஞானசம்பந்தன், நா. மாணிக்கம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். இரா. இராஜாகோவிந்தசாமி நன்றியுரைத்தார்.

## சென்னை

7.3.2000 அன்று சென்னை காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி முத்தமிழ் விழாவில் கவிஞருக்குப் பாராட்டு வழங்கப்பட்டது. கல்லூரி முதல்வர் சா.



படிப்பகம்

www.padippakam.com

அன்புக்கொடி தலைமையில் கலைமாமணி அரசு மணிமேகலை பாராட்டுக் கவிதை படித்தார். தமிழ்த்துறைத் தலைவர் இரா. வேலம்மாள் வரவேற்றார்.

### மயிலாடுதுறை

ஏ.வி.சி. கல்லூரியில் 13.3.2000 அன்று முதல்வர் வீ. இராதாகிருஷ்ணன் தலைமையில் விழா நடந்தது. 'ராணி' 'ஆசிரியர் அ.மா.சாமி தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கி. செம்பியன், 'நம்ம ஊரு செய்தி' ஆசிரியர் முனைவர் அ.அய்யூப், ஆகியோர் பாராட்டிப் பேசினர். பேராசிரியர் ஜி. வாசுதேவன் வரவேற்புரை ஆற்றினார். இளந்தூது' ஆசிரியர் கோமல் ஆர்.கே. அன்பரசன் நன்றியுரை ஆற்றினார்.

அன்று மாலை மயிலாடுதுறை ரோட்டரி சங்கம் சார்பாகப் பாராட்டு விழா நிகழ்ந்தது.

### பேர்ணாம்பட்டு

பேர்ணாம்பட்டு ரோட்டரி சங்கம் நடத்திய பாராட்டு விழாவில் இஸ்லாமியா மேனிலைப் பள்ளியின் தாளாளர் ஜனாப் பஸ்லுர் ரஹ்மான், ரோட்டரி சங்கத் தலைவர், புலவர் கோதண்டபாணி பாராட்டிப் பேசினர்.

### குடியேற்றம்

19.3.2000 அன்று குடியேற்றத்தில் நடந்த பாராட்டு விழாவுக்குக் கு.மா. கோவிந்தராசனார் தலைமை தாங்கினார். சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத் துணை வேந்தர் மரு.வே.ப. நாராயணன், கவிஞர் இக்பால், புலவர் வே.பதும னார் வழக்கறிஞர் தெ. சமரசம், சீனி சம்பத்து, த. அன்பு ஆகியோர் பாராட்டிப் பேசினர். எஸ். கார்த்திகேயன் வரவேற்றார். எல்.சி.குப்புசாமி நன்றி உரைத்தார்.

### சென்னை

சென்னை எழுத்தாளர் வட்டத்தின் சார்பில் 15.4.2000 அன்று நிகழ்ந்த பாராட்டு விழாவுக்கு இந்திரா பார்த்தசாரதி தலைமை தாங்கினார். சுப. வீரபாண்டியன், ஓவியர் கு. புகழேந்தி பாராட்டுரை வழங்கினர். பா. செயப்பிரகாசம் வரவேற்கக் கவிஞர் பொன். செல்வ கணபதி நன்றியுரைத்தார்.

அனைத்து விழாக்களிலும் அப்துல் ரகுமான் கலந்து கொண்டு ஏற்புரை வழங்கினார்.

## பிரான்சில் தமிழ்க் கவிதை

பிரான்சு தேசிய நூல் நிலையத்தில்
ஏறக்குறைய ஆயிரம் பழந்தமிழ்
ஏடுகளும் கையெழுத்துப் பிரதிகளும்
உள்ளன. இவற்றுள் சில தமிழகத்திலேயே
இல்லாதவை. அச்சு வடிவம் பெறாத
மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ்,
புதுச்சேரி அம்மன் பிள்ளைத்தமிழ்
போன்ற நூல்களும் அங்கு உள்ளன.
மாமன்னர் நெப்போலியனுடைய நூல்
நிலையத்தில் கம்பராமாயண ஏடு ஒன்று
இருந்தது. அது இப்போது
'பொன்ரையின் புளோ' நூல்
நிலையத்தில் இருப்பதாகக்
கருதப்படுகிறது.

## அருள்வாக்கு

கவிஞர்களுடைய சிந்தனை ஆற்றலையும் தங்கள் படைப்புகளில் அவர்கள் வெளிப் படுத்தியுள்ள கருத்துக்களையும் கண்டு நான் மிகவும் வியப்படைந்தேன். அவர்களைக் கண்டு உரையாடியபோது, அவர்களுள் பலர் ஒன்றும் அறியாதவர்களாகவும், முட்டாள்களாக வும் இருந்ததை அறிந்து கொண்டேன்.

அப்படிப்பட்டவர்களால் மிகவும் உன்னதமான கவிதைகளை எப்படி எழுத முடிந்தது என்பதைப் பற்றிச் சிந்தித்துக் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தேன்.

கவிஞர்கள் சாமியாடி போன்றவர்கள். சாமியாடி எப்படிச் சில நேரங்களில் 'அருள்வாக்கு'ச் சொல்கிறானோ, அதைப்போல் இவர்களும் சில நேரங்களில் மிக உயர்ந்த கருத்துக்களைத் தம்மையும் மீறி வெளிப்படுத்துகிறார்கள்.

**- சாக்ரட்டீஸ்**



படிப்பகம்

www.padippakam.com



## இளங்கவிஞர் பக்கம்

**ஹரணி**

கடகடக்கிறது பேருந்து
படபடக்கிறது பட்டாம்பூச்சி
இரண்டும் கவிதைதான்.

■

இறந்த ஏழை
துண்டு விரிக்கும் ஏழை
காசுபோடும் ஏழை

■

விசிறியை நிறுத்தலாம்
அலைந்த காற்று
உறங்கட்டும்

■

மழை பெய்கிறது
எதற்குப் போர்த்துவாள் சாக்கை
காய்கறிப் பாட்டி?

■■

**ம.திருவள்ளுவர்**

கலையாத நிழற்படம்
தரையில் வரைய முயலும்
ஓயாத சூரியன்

■

வெறிச்சோடும்
நடுநிசிப் பேருந்து நிலையம்
விதவைக் கூந்தல்

■

உதடொன்றைச் சொல்ல
வேறொன்றைச் சொல்லிக் கொண்டிருக்கிறது
உன் வெட்கம்

■

இருட்டைத் துடைக்க
அலைபாயும் ஒட்டடைக்குச்சி
மெழுகுச் சுடர்.

■■

**பூ.முரளி**

வேட்டி நெய்து கொடுத்தோம்
கூலியாகக் கிடைத்தது
கோவணம்.

■■

**அ.சையத் அலி**

வீட்டிற்கொரு மரம் வளர்ப்போம்
வீடின்றித் தவிக்கின்றன
"சிட்டுக்குருவிகள்."

■

குப்பைத் தொட்டியுள்
குழந்தை
"உப்பில்லாப் பண்டமா?!..."

■■

**ச.விசயலட்சுமி**

மிதக்கும் பிணம்
ஊழல் மீனுக்குப் பொரியாய்
ஒரிசா...

■■

**திருவைக்குமரன்**

ஒலி எழுப்பியபடியே
ஏந்திக் கொண்டு நிற்கிறான் திருவோட்டை
எழுப்பிய ஒலிகளால்
அவசர அவசரமாய் அருகேவரும் இதயங்கள்
சாத்திக் கிடக்கும் கதவுகளைத்
திறந்து வைக்கவும்
திறந்து கிடக்கும் கதவுகளைச்
சாத்தி வைக்கவும்.

■■

**முத்தைய்யதாசன்**

**சூரியன்**

இரவுநேர...
நட்சத்திரக் குப்பையைக்
காலையிலே
கதிரொளியால் கூட்டும்
துப்புரவுத் தொழிலாளி!

■

வானக்கோயிலில்...
நிலவு தீபத்தைச் சுற்றி
நட்சத்திர விட்டில்கள்!

■■

**கல் குமா**

**மது**

மரணத்தை
எழுதும்
மை.

■■



படிப்பகம்

www.padippakam.com

**கோம்பை வீ.சக்திவேல்**

**கவிதை**

கனவுகளின் தாலாட்டு
வாசல் தெரியாத பூஜ்ஜியம்.

■■

**பி.கே.சுப்பிரமணி**

**கடிகாரம்**

முள்களின் மிதியில்
நாட்களின் சாவு...

யுகங்களைப் பெருக்கும்
இயந்திரத் துடைப்பம்.

அதெப்படி!
காலம் இறப்பாகவே
பிறப்பெடுக்கிறது.

■■

**எல்.ரவி**

**எதுவும் நடக்கவில்லை**

எதுவும் நடக்கவில்லை...!
எதுவும் நடக்குமென நினைக்கிறேன்
எதுவுமே நடப்பதில்லை....

எப்போதாவது
ஏதாவது நடக்கிறது - அப்போதுகூட
எதுவும் நடக்குமென நினைக்கிறேன்
எதுவுமே நடப்பதில்லை...!

எதுவும் நடந்தால்
எல்லோர்க்கும்
ஏதாவது நடக்கும்...!

எது நடக்கணுமோ -
அது நடப்பதில்லை!
எது நடக்கக் கூடாதோ -
அது நடக்கும்...!

எதுவுமே நடக்காமல் இருப்பதால்
என்றாவது ஒரு நாள்
எதாவது ஒன்று நடக்கும்...!

■■

**பொடியன் இசாக், துபை**

**அறிமுகம்**

மனசாட்சிக்கு
மண்டியிடுகிற நேரம்
"விலங்கினின்று வித்தியாசப்படுத்தும்"
அந்த அறிமுகம் நிகழ்கிறது.

இவனுக்கு
"மொட்டு வெடித்து மலராகும் ஓசை"
இடையூறென்பதால் - உணர முடிகிறது.

பாம்பு
வாயில் மாட்டிய
தவளையின் ஓலம் மட்டுமல்ல;
தவளை
நாக்கில் சிக்கிய
பூச்சிகளின் ஒப்பாரியையும்.

ஆதிக்க வெறியில்
எரிந்து சாம்பலான
கீழ்ச்சாதிகாரனின் உணர்வாகி,
கரசேவைக் கடப்பாறையால்
கொலையுண்ட
சிறுபான்மையின் உரிமைகளாகி,
பழிவாங்களுக்குப் பலியாகி
வெடித்துச் சிதறிய
பாமரனின் உயிர்களாகி,
அறிமுகமானேன்

■■

**நா.சுப்புலட்சுமி**

**சுமைதாங்கி**

மெல்ல நடக்கும்
அவளை ரசிக்கும்
அவனுக்குத் தெரியுமோ?
அவள் யாரென்று?

உரித்து,
விற்றுவிட்ட தண்டுக்காய்
ஏங்கிக் கிடக்கும்
வாழைப் பட்டை,

மெல்ல,
வீசும் தென்றலில்
பதறி உதிரும்
மாம் பிஞ்சு.

அதைக்
குனிந்து, வளைந்து
அடை காக்கும்
செம் மாவிலை,

அடுத்த,
மழையில் ஊனமாவதை
உணராத
தார்ச்சாலை,

நெஞ்சினில்
விழுந்த பாறையை
நகர்த்த மாட்டாமல்...

மெல்ல நடக்கும்
அவளை ரசிக்கும்
அவனுக்குத் தெரியுமோ?
அவள் யாரென்று...

■■



படிப்பகம்

www.padippakam.com

## வண்ணமும் வார்த்தையும்

'ஓவியம் ஊமைக் கவிதை. கவிதை பேசும் ஓவியம்' என்பார்கள். ஓவியர் கு.புகழேந்தி அண்மையில். நடத்திய 'உறங்கா நிறங்கள்' என்ற ஓவியக் கண்காட்சியில் இவை இரண்டும் திருமணம் செய்து கொண்டன.

இருபதாம் நூற்றாண்டில் மனித வரலாற்றில் ஆறாத ரணங்களாகவும். ஆபரணங்களாகவும் அமைந்த நிகழ்வுகளையும். மாமனிதர்களையும் புகழேந்தி வண்ணங்களில் வார்த்திருந்தார். அவருடைய 'உறங்கா நிறங்கள்' பார்ப்பவர் உறக்கத்தையும் கலைப்பவை. ஓவியங்கள் ஊமை அல்ல; அவையும் பேசும் என்பதை நிரூபிப்பவை.

புகழேந்தியின் ஓவியங்களுக்குக் கவிஞர்கள் இன்குலாப். காசி.ஆனந்தன் இணைந்து எரிமலை வார்த்தைகளால் குரல் கொடுத்திருக்கிறார்கள்.


பார்க்க பின் அட்டை

### ஒரிசா புயல்

இனி
எத்தனை
தென்றலாய்
வீசினாலும்
நீ
பெயர் வாங்க முடியாது
காற்றே
போ...!

– காசி ஆனந்தன்





### ஹிரோஷிமா

இன்னும் ஆறாத காயங்களோடு
இன்னும் பிறந்து கொண்டிருப்பது
நான்தான்...

– இன்குலாப்



படிப்பகம்

www.padippakam.com

# வானவில்லின் மொழிபெயர்ப்பு

**இந்தியன் சமஸ்**

நீ வருவது
உறுதியெனில்
காத்திருத்தலிலேயே
என் வாழ்வு முடியட்டும்

■

மரபுக்குள்
சிக்கியிருக்கும்
புதுக்கவிதை நீ

■

ஒரே படகில்
ஒரே நேரத்தில்
பயணம் செய்கிறோம்
இக்கரையை நோக்கி
நானும்
அக்கரையை நோக்கி
நீயும்

■

நீ கொடுத்த
காயங்களிலிருந்து
உதிர்கின்ற உதிரம்தான்
என் கவிதைகள்

■

நான் உன்னை மறந்தது
இன்னமும்
என் கனவுகளுக்குத்
தெரியவில்லை

■

வானுக்கும் மண்ணுக்கும்
இடையேயுள்ள
தூரம்தான்
உனக்கும் எனக்கும்
ஆனாலும்
என் கண்ணீர்
என்றென்றும்
மழையாய்
உன்னுள்
விழுந்து கொண்டேயிருக்கும்.

■

# கல்லும் சொல்லாதோ கவி



பிரிஜேந்திர சிங் 'சியால்' ஒரு வித்தியாசமான சிற்பி. உருதுக் கவிஞர் மிர்ஸா காலிப்பின் கவிதைகளைக் கல்லில் சிற்பங்களாக வடிப்பதையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டிருக்கிறார் அவர்.

ஒவ்வொரு கல்லும் உள்ளே
ஒரு முத்தை வைத்திருக்கும் சிப்பி
இயற்கையை நேசிப்பவன்
அதைக் கண்டுக் கொள்வான்

என்று காலிப் பாடியிருக்கிறார். சியால் காலிப், இயற்கை இரண்டையும் நேசிப்பவர். ஆகையால் கல்லிலிருந்து கவிதை முத்துக்களை எடுத்து விடுகிறார்.

சியால் அந்தந்தக் கவிதைகளுக்குப் பொருத்தமான 'சரி'யான கற்களைத் தேடுகிறார். 'இயற்கை எனக்கு உதவுகிறது. இயற்கை மிகப் பெரிய கலைஞன். நான் மிகச் சிறிய மாற்றங்களைச் செய்கிறேன்' என்கிறார் அவர்.

சியால் கல்லில் வடித்த கவிதைகளைப் புகைப்படம் எடுத்து, தகவல், ஒலிபரப்பு அமைச்சகத்தின் பதிப்புத் துறை, 'காலிப் - நூறு மனோபாவங்கள்' என்ற பெயரில் அண்மையில் ஒரு நூல் வெளியிட்டிருக்கிறது.

தம்முடைய கற்கவிதைகளைப் பற்றி சியால் கூறிய இந்த வார்த்தைகள் கல்வெட்டாகப் பொறித்து வைக்கப்பட வேண்டியவை:

மனிதர்கள் ஒருவரை ஒருவர்
காயப்படுத்துவதற்குக் கற்களை
எடுக்கின்றனர். நானோ அவற்றில்
ஜீவித்தைப் பார்க்கிறேன்.


படிப்பகம்

www.padippakam.com



**நெல்லை பாராட்டு விழா**
நெல்லை புதிய வானம் 26.2.2000
அன்று நடத்திய பாராட்டு விழாவில்
கவிஞர் பாலா,
தோப்பில் முகம்மது மீரான்,
தி.க. சிவசங்கரன், சிற்பி.



**சென்னை எழுத்தாளர் வட்டப் பாராட்டு**
சென்னை எழுத்தாளர் வட்டம் 15.4.2000
அன்று நடத்திய பாராட்டு விழாவில்
(இடமிருந்து) ஓவியர் கு. புகழேந்தி,
பொன். செல்வகணபதி,
இந்திரா பார்த்தசாரதி,
சுபவீ, பா. செயப்பிரகாசம்.



**மதுரை கருத்தரங்கு**
மதுரை கருத்தரங்கில் கலந்து
கொண்டவர்கள் (இடமிருந்து)
புலவர் வை. சங்கரலிங்கம்,
புலவர் மு. ஜாபர், கவிஞர் சொக்கலிங்கம்,
முனைவர் இரா. மோகன்,
கவிஞர், முனைவர் நிர்மலா மோகன்,
முனைவர் வீ. காந்திமதி.


படிப்பகம்

www.padippakam.com

# சாவில் தமிழ் படித்துச் சாக வேண்டும்

எழுத்திலும் பேச்சிலும் மிகுதியாக மேற்கோள் காட்டப்பட்ட வரி, 'சாவில் தமிழ் படித்துச் சாக வேண்டும் என்றன் சாம்பல் தமிழ் மணந்து வேக வேண்டும்' என்பது. இந்த வரியின் கனற் கொதிப்பைப் பார்த்த பலர் இதை எழுதியவர் பாரதிதாசன் என்றே நினைத்துக் கொண்டிருக்கின்றனர். உண்மையில் இதை எழுதியவர் ஈழத்துக் கவிஞர் பண்டித க.சச்சிதானந்தன் அவர்கள். இவர் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பருத்தித் துறைப் பகுதியில் பிறந்தவர். மகாவித்துவான் நவநீத கிருஷ்ண பாரதியிடம் முறையாகத் தமிழ் கற்றவர். ஆங்கிலம், சமஸ்கிருத மொழிகளிலும் புலமை பெற்றவர். இலண்டனில் படித்து பி.ஏ. ஆனர்ஸ் பட்டமும், குழந்தைகள் உளவியலில் முனைவர் பட்டமும் பெற்றவர். பள்ளி ஆசிரியராக, கல்லூரி விரிவுரையாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவருடைய 'ஆனந்தத் தேன்' என்ற கவிதைத் தொகுதி 1954-இல் வெளிவந்துள்ளது. இவருடைய 'யாழ்ப்பாணக் காவியம்' போன்ற பல கவிதைகள் அச்சேறாமல் இருக்கின்றன. இவர் கவிதைகள் மட்டுமன்றி 'அன்னபூரணி' என்ற புதினத்தையும், உரைநடையில் பழைய அரசியல் தலைவர் வன்னிய சிங்கத்தின் வரலாற்றையும் எழுதியுள்ளார். அதிர்ச்சி தரும் செய்தி இவர் இப்போது மனநிலை திரிந்து வவுனியாவில் அலைந்து கொண்டிருக்கிறார் என்பது. இவருடைய புகழ் பெற்ற அந்த வரியைக் கொண்டிருக்கும் முழுக் கவிதையும் இங்கே தரப்பட்டிருக்கிறது.

■

## தமிழ்க் கவிப்பித்து

பொன்னின் குவையெனக்கு வேண்டியதில்லை - என்னைப்
போற்றும் புகழெனக்கு வேண்டியதில்லை
மன்னன் முடியெனக்கு வேண்டியதில்லை - அந்த
மாரன் அழகெனக்கு வேண்டியதில்லை

கன்னித் தமிழெனக்கு வேணுமேயடா - உயிர்க்
கம்பன் கவியெனக்கு வேணுமேயடா
தின்னத் தமிழெனக்கு வேணுமேயடா - தின்று
செத்துக் கிடக்கத் தமிழ் வேணுமேயடா

உண்ண உணவெனக்கு வேண்டியதில்லை - ஒரு
உற்றார் உறவினரும் வேண்டியதில்லை
மண்ணில் ஒரு பிடியும் வேண்டியதில்லை - இள
மாதர் இதழமுதும் வேண்டியதில்லை

பாட்டில் ஒருவரியைத் தின்றுகளிப்பேன் - உயிர்
பாயும் இடங்களிலே தன்னை மறப்பேன்
காட்டில் இலக்குவனைக் கண்டு மகிழ்வேன் - அங்குக்
காயும் கிழங்குகளும் தின்றுமகிழ்வேன்.

மாட மிதிலைநகர் வீதிவருவேன் - இள
மாதர் குறுநகையில் காதலுறுவேன்
பாடி யவர்அணைக்கக் கூடி மகிழ்வேன் - இளம்
பச்சைக் கிளிகளுடன் பேசிமகிழ்வேன்

கங்கை நதிக்கரையில் மூழ்கியெழுவேன் - பின்பு
காணும் மதுரைநகர்க் கோடி வருவேன்
சங்கப் புலவர்களைக் கண்டு மகிழ்வேன் - அவர்
தம்மைத் தலைவணங்கி மீண்டு வருவேன்

செம்பொற் சிலம்புடைத்த செய்தியறிந்து - அங்குச்
சென்று கசிந்தழுது நொந்து விழுவேன்
அம்பொன் உலகமிர்து கண்டனேயடா - என்ன
ஆனந்தம் ஆனந்தம் கண்டனேயடா

கால்கள் குதித்துநட மாடுதேயடா - கவிக்
கள்ளைக் குடித்தவெறி ஏறுதேயடா
நூல்கள் கனித்தமிழில் அள்ளிட வேண்டும் - அதை
நோக்கித் தமிழ்ப்பசியும் ஆறிடவேண்டும்

தேவர்க் கரசுநிலை வேண்டியதில்லை - அவர்
தின்னும் சுவையமுது வேண்டியதில்லை
சாவில் தமிழ்படித்துச் சாகவேண்டும் - என்றன்
சாம்பல் தமிழ்மணந்து வேகவேண்டும்.

■

**நன்றி: டாக்டர் சிலோன் விஜயேந்திரன்**
**'ஈழத்துக் கவிதைக் கனிகள்'**



படிப்பகம்

www.padippakam.com

# நான் சாவுக்காகத் தயங்கிய நிற்க முடியாததால்

எமிலி டிக்கின்ஸன்



நான் சாவுக்காகத் தயங்கி நிற்க முடியாததால் -
அது அன்புடன் எனக்காகத் தயங்கி நின்றது -
அந்த ரதம் எங்களை மட்டுமே கொண்டிருந்தது -
கூட அழியாமையும்.

நாங்கள் மெதுவாகவே சென்றோம் - தூர
நான் எடுத்துவைத்துவிட்டேன்
எனது உழைப்போடு ஓய்வையும்கூட,
அவனின் நவநாகரிகத்துக்காக-

நாங்கள் பள்ளியைக் கடந்தோம், அங்கே குழந்தைகள்
இடைவேளையில்... வளையத்தினுள்ளே நுழைய
வருந்தி முயன்றனர்
நாங்கள் தலைநிமிர்ந்து பார்க்கும் தானிய
வயல்களைக் கடந்தோம்...
அஸ்தமித்துக்கொண்டிருக்கிற
ஆதவனைக் கடந்தோம்...

அல்லது ஒருவகையில் அதுதான் எங்களைக்
கடந்தது...
கொட்டுகிற பனி கொணர்ந்தது குளிரையும்
நடுக்கத்தையும்...
ஏனெனில் மெல்லியது என் மேலங்கி...
என் கழுத்துப் பட்டியும்.

பூமியின் வீக்கமெனத் தோன்றும்
வீட்டொன்றின் முன்னே தயங்கி நின்றோம்...
கண்ணுக்குச் சரியாகத் தெரியாதகூரை...
சுவர் விளிம்பில் சுதை வேலைப்பாடு... பூமிக்குள்

அன்று முதல் இன்று வரை பன்னூற்றாண்டுகள்...
இருப்பினும்
குதிரைகளின் சிரங்கள் முடிவில்லாக் காலத்தைச்
சுட்டிக்காட்டும் பாங்கை நான் ஊகித்துணர்ந்த
நாளை விடச் சிறியனவே...

மொழி பெயர்ப்பு என். முருகையன்



படிப்பகம்

www.padippakam.com



# காடாலிங்கனக் குறிகள்



உன் வாக்கின் கிளைகளில்
தேவதைகள் வசிக்கின்றன

இருளின் கர்ப்பத்தில் ஒளி
ஒளியின் கர்ப்பத்தில் இருள்
எல்லாவற்றிலும்
உன் சௌந்தர்யத்தின் கர்ப்பம்

உன் இருளில்
மின்மினிகளாய் அலைகின்றன
என் வார்த்தைகள்

என் விரக தாபம்
அழகானது

உன் வருகைக்காக
என் வீட்டைச்
சாந்தியால் அலங்கரிக்கிறேன்

கற்கள்
நீரில் மிதக்கின்றன
மேகங்களுக்குக் கீழேதான்
சூரிய ஒளி
மறைக்கப்படுகிறது

என் இருளை
மையாக்கி
உன் புதையல்களைக்
கண்டுபிடிக்கிறேன்

உன் அம்புகளிலிருந்து
தப்பிக்க
உன் கருணையையே
கேடயமாக வைத்திருக்கிறேன்

ஒளியை
முதற் படியாகக் கொண்ட
வழியில்
கண்ணீர்
என்னை அழைத்துச் செல்கிறது

இந்தக்
கவிதைகள்
உன் காடாலிங்கனக்
குறிகள்

உன் நிர்வாணத்தை
அனுபவிக்கும்
பரவசத்தை விடவா
உன் சொர்க்கம்
இன்பமானது?

உன் தரிசனம் இல்லாத
என் விரக தாபத்தை விடவா
உன் நரகம் துயரமானது?

உன் ஸ்பரிசத்துக்காக
நான் எதுவுமாவேன்

அருளாளனே!
என்னைக் காப்பாற்றி
உன் பெயரைக்
காப்பாற்றிக் கொள்வாயாக!



படிப்பகம்

www.padippakam.com



# கறுப்பும் வெள்ளையும்

■

அண்மையில் வெள்ளைக்கார நாட்டிலிருந்து ஒரு கறுப்புக் கவிஞரும், கறுப்பு நாட்டிலிருந்து ஒரு வெள்ளைக்காரக் கவிஞரும் சென்னைக்கு வந்திருந்தனர்.

பெஞ்சமின் ஸெஃபனியா இங்கிலாந்திலிருந்து வந்திருந்தார். மியூசியம் அரங்கில் அவருடைய கவிதா நிகழ்வுக்கு பிரிட்டிஷ் கவுன்ஸில் ஏற்பாடு செய்திருந்தது.

'ரஸ்தா' இயக்கத்தைச் சேர்ந்த பெஞ்சமின் உலகெங்கும் கவிதா நிகழ்வை நடத்தி வருகிறார்.

பல ஒலித் தட்டுகளை வெளியிட்டிருக்கிறார். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் ஏராளம். குழந்தைக் கவிதைகள் உட்படப் பல கவிதைத் தொகுதிகளும் வெளிவந்திருக்கின்றன.

பெஞ்சமின் பர்மிங்ஹாமில் பிறந்து ஜமைகாவிலும் ஹாண்ட்ஸ்வொர்த்திலும் வளர்ந்தவர்.

ஹாண்ட்ஸ்வொர்த்தில் இருந்தபோது திருட்டுக் குற்றத்திற்காகச் சிறையில் அடைக்கப்பட்டவர்.

பட்டுப் புழு கூட்டுக்குள்ளிருந்து சிறகு வளர்த்துக் கொண்டு வெளியே வருவது போலச் சிறையிலிருந்து வெளியே வந்தபோது கவிஞனாக வந்தார்.

ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் 1989 இல் இவரைக் கவிதைத் துறைக்குப் பேராசிரியராக நியமித்தது.

பெஞ்சமின் கவிதை படிப்பதை அபிநயங்களோடு ஒரு நிகழ் கலையாகவே செய்கிறார். கனத்த குரல். அர்த்தபாவம் நிறைந்த உச்சரிப்பு.

பல்லவி போல் சில வரிகளைத் திருப்பிச் சொல்லும்படி செய்து கேட்பவர்களையும் தன் கவிதா நிகழ்வின் அங்கமாக்கிக் கொள்கிறார்.

கவிதைகள் வெள்ளையர் ஆதிக்கத்தின் கீழ் கறுப்பு இனத்தவரின் அவலங்களைக் கிண்டலும் நகைச்சுவையுமாகச் சொல்லுகின்றன. நவீன காலப் பிரச்சினைகளையும் விமர்சிக்கின்றன.

நிகழ்வில் அவர் இந்தியாவைப் பற்றிப் படித்த கவிதை இது:

ஒரு சாது
இந்தியாவின் மீது அமர்கிறார்
ஒரு தாமரையைப் போல்;
தன்னை வீட்டுக்கு அழைத்துச் செல்லும்
உண்மைக்காகக் காத்திருக்கிறார்;
இந்தியாவோ
தீவிரமாக
வேலையில் ஈடுபட்டிருக்கிறது.
உலக வங்கிக் கடனைத்
திருப்பித் தரும் முயற்சியில்
தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது.

சாது கஞ்சா அடிக்கிறார்;
அதை ஆசீர்வதிக்கிறார்.
எரிக்கிறார்
நாட்டுக்காக;
புகை
மத்திய பாகிஸ்தானை
அடையும்போது
சாது தியானத்தில்
கடவுளோடு பேசுகிறார்.

தெய்வங்கள் ஒருநாள்
இந்தியாவுக்குத்
திரும்பி வரும் என்று
சொல்லுகிறார்கள்.
குழம்பிப் போய்க் கிடக்கும்
நம் வாழ்க்கை
ஒழுங்குக்கு வந்துவிடும்
என்கிறார்கள்.

ஆனால், தெய்வங்களோ
முதலில் மும்பாய் 'மா.ஃ.பி'யாவோடு
மோத வேண்டியிருக்கும்.
'மா.ஃ.பி'யாவோ
நிறைய இடங்களைத்
தங்கள் கட்டுப்பாட்டில்
வைத்திருக்கின்றனர்.

ஒரு சாது
இந்தியாவின் மீது
அமர்கிறார்
ஒரு தாமரையைப் போல;



படிப்பகம்

www.padippakam.com

தன்னை வீட்டுக்கு
அழைத்துச் செல்லும்
உண்மைக்காகக் காத்திருக்கிறார்;
அவர் சுத்தமான
ஈடுபாடுடைய தியானி;
அவர் இப்போது,
'மொபைல் ஃபோ'னில்
தியானம் செய்து கொண்டிருக்கிறார்.

■

தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்திருந்தவர் பெண் கவிஞர், கரென் பிரஸ். கேப் டவுனில் பிறந்தவர். ஏழு கவிதைத் தொகுதிகள் வெளி வந்துள்ளன.

தாரா பதிப்பகத்தார் அவரோடு ஒரு கலந் துரையாடலை ஏற்பாடு செய்திருந்தனர். (இது பற்றிய விரிவான கட்டுரை அடுத்த இதழில் இடம் பெறும்.)

*அவருடைய கவிதைகளில் ஒன்று:*

## நள்ளிரவில் ஒவ்வொன்றும்

ஒவ்வொன்றும் முக்கியம்தான்
கடற் பறவைகள்
தங்கள் சுவையான
பூச்சி விருந்துக்காகத்
தெரு விளக்குகளை
மீன் வலையாகப்
பயன்படுத்துகின்றன.

நள்ளிரவில்
போதை மருந்துண்ட
குழந்தைகளுக்குப்
பாவு கற்கள்
மரணக் குளிராக
இருக்கின்றன.
பசித்த சாலைகளின் வழியே
கண் கூசும் ஒளியோடு
கார்கள் செல்கின்றன
தூங்கும் நகரத்தின் -
சந்துகளில் தடுமாறி விழுந்த
பாலிஸ்ட்ரீன் முட்டைப் பெட்டிகளில்
பனிமுட்டம் மூழ்குகிறது.

ஒவ்வொன்றும்
முக்கியம்தான்.

விட்டுச் சென்றவர்கள்
திரும்பி வரப் போவதில்லை.


**அப்துல் ரகுமான் நூல்கள்**

**கிடைக்கும் இடங்கள்**

**திருமகள் நிலையம்**
55, வேங்கட நாராயணா ரோடு,
தி.நகர்,
சென்னை - 600 017.

**நர்மதா பதிப்பகம்**
16/2, ராஜாபாதர் தெரு,
தி.நகர்,
சென்னை - 600 017.

**நியூ புக் லேண்ட்ஸ்**
52-சி, வடக்கு உஸ்மான் சாலை,
தி.நகர்,
சென்னை - 600 017.

**விஜயா பதிப்பகம்**
20, இராஜவீதி,
கோவை.

**சென்னையில்**

**கவிக்கோ**

**கிடைக்கும் இடங்கள்**

**நியூ புக் லேண்ட்ஸ்**
52-சி, வடக்கு உஸ்மான் சாலை,
தி.நகர்,
சென்னை - 600 017.

**திலீப் குமார்**
216/10, ராமகிருஷ்ண மடம் சாலை
மயிலாப்பூர்
சென்னை - 600 004.

**கீழைக் காற்று வெளியீட்டகம்**
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீஸ் சாலை
சென்னை - 600 002.




படிப்பகம்

www.padippakam.com

# கவிதை கடவுளின் மொழி

சாகித்திய அகாதெமி விருது வழங்கிய விழாவில் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்

சிறு வயதிலிருந்தே மேகங்கள் மூடிய உயர்ந்த மலைச் சிகரத்திலிருந்து ஒரு மர்மமான புல்லாங்குழல் இசை என்னை அழைப்பதை உணர்ந்தேன். அன்றிலிருந்து மலையில் ஏறத் தொடங்கினேன். என் ஒவ்வொரு கவிதையும் மேலே ஏறும் படியாக இருந்தது.

கவிதா தேவியின் முகம் பார்த்தறியாத சிறு பருவத்திலேயே அவள் சலங்கை ஒலியில் இதயத்தைப் பறிகொடுத்தேன். என் இளம் பருவத்துக் கவிதைகள் சந்தச் சாராயம் நிரம்பி வழியும் கிண்ணங்களாக இருந்தன.

கவிதை என் ரத்தத்தில் இருந்தது. என் தந்தை உருதுக் கவிஞர். என் தாத்தா உருது, பாரசீகம் இரண்டிலும் கவிதை புனையக் கூடியவர்.

உருது என் தாய்மொழி. ஆயினும் நான் தமிழைக் காதலியாக நேசித்தேன். உருதுவின் 'கஜல்' 'நஸ்ம்' வடிவங்க்ளை நான் தமிழுக்கு அறிமுகப்படுத்தினேன். தமிழ்க் கவியரங்க வடிவத்தையும் 'முஷாயிரா' பாணியில் மாற்றி அமைத்தேன்.

இந்தியத் தொன்மங்களின் அழகையும், ஆழத்தையும் அறிந்தபின் என் கவிதைகளில் அவற்றை மிகுதியாகக் கையாண்டேன்.

பிற மொழிக் கவிதையின் பாதிப்பு தமிழில் என்னை வித்தியாசமான கவிஞனாக உருவாக்கியது. 'ஹைகூ' வடிவத்தை நான் பிரபலமாக்கினேன்.

என் கல்லூரி நாட்களில் 'மீமெய்ம்மையியம்' **(Surrealism)** எனக்கு அறிமுகமானது. அன்றிலிருந்து ஆழமான நனவிலி மனச் சமுத்திரத்திலிருந்து மர்ம அழகுடைய படிமங்களைக் கொண்டு வருவது என் பழக்கமாகிவிட்டது. அதில் நான் பல்வேறு பரிசோதனைகளைச் செய்தேன். என் 'பால்வீதி' தமிழில் முதல் 'மீமெய்ம்மை'க் கவிதைத் தொகுதியாக வெளிவந்தது.

கவிஞன், அழகையும் பரிபூரணத்தையும் விரும்புகிறவன். அதனால்தான் அவனால் சமூகத்தின் அழுக்குகளையும் அசிங்கங்களையும் சகித்துக் கொள்ள முடிவதில்லை. என் மையும், சில நேரங்களில் இந்த அழுக்குகளையும் அசிங்கங்களையும் அழிக்கும் நோவாவின் பிரளயமாகிறது. ஆனால், அதே நேரத்தில், என் பேனா ஒலிவ இலையைக் கொண்டு வரும் புறாவாகவும் இருக்கிறது.

எனக்குள் இருவர் இருக்கின்றனர். ஒருவன் பாடகன். மற்றொருவன் பித்தன்.

பாடகன் ஏதாவது ஒரு ராகத்தை ஆலாபனை செய்துகொண்டிருப்பான். அவன் ஸ்வரங்கள் சப்தங்களால் ஆனவை அல்ல.

பித்தன் ஏதாவது ஒரு நதியில் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டிருப்பான். அந்த நதிகள் நீரால் ஆனவை அல்ல.

பாடகன் 'நேர்'களின் ரஸிகன். பித்தன் 'எதிர்'களின் உபாஸகன்.

இருவருக்கும் ஒத்துப்போவதில்லை. இருவரும் இரு துருவங்கள்.

பாடகன் உண்மையின் ஒளிப் பக்கத்தைப் பார்ப்பவன். அதை ஊடுருவிச் செல்பவன். அவன் மேனியில் நட்சத்திரப் புழுதி.

பித்தன் உண்மையின் இருண்ட பக்கத்தைப் பார்ப்பவன். அதன் மர்ம மலர்களை முகர்பவன். அவன் சிறகுகளில் இருளின் மகரந்தம்.

சாகித்ய அகாதெமி விருது பெற்ற 'ஆலாபனை' என் பாடகனின் பாடல் தொகுதிதான்.

நான் ஒரு கவிதையில் சொன்னேன்: என் ஆறாவது விரல் வழியே, சிலுவையிலிருந்து வடிகிறது ரத்தம். ஆம்-என் மாம்சம் வார்த்தை ஆகிறது. இதை என் முகவரிச் சீட்டாகக் கருதலாம்.

கவிதை கடவுளின் மொழி. அதனால்தான் வேதங்கள் எல்லாம் கவிதையாக இருக்கின்றன. இப்போதெல்லாம் நான் வேதங்களின் நடையை உத்திகளைப் பயின்று வருகிறேன்.

இரவின் இருளில் புல்லின் மீது ரகசியமாய்த் திரளும் பனித் துளியைப் போல் கவிதை கவிஞனிடம் உதிக்கிறது. கவிதைக்கு வடிவம் தரும் முயற்சி இயற்கையான பனித் துளிகளின் அழகைக் குலைத்துவிடுகிறது. கவிதைக்கு வடிவமும் ஒரு சிறைதான் என்பதை உணர்ந்ததிலிருந்து என் மீது திரளும் பனித் துளிகளை அப்படியே தந்துவிடுகிறேன்.

இப்போதெல்லாம் நான் சொற்களை வலைகளாகப் பின்னுகிறேன். இருத்தல் என்ற மர்ம சமுத்திரத்தில் வீசுகிறேன்; குறிப்பிட்ட எதையும் எதிர்பார்த்தல்ல. அதனால் அந்த வலையில் சிக்கும் ஒவ்வொன்றும் எனக்கு வியப்பைத் தருகிறது. இருத்தலைப் பற்றிய தரிசனமாக இருக்கிறது. ■



படிப்பகம்

www.padippakam.com

## கவிதைக்கு விருது



தில்லி கமானி அரங்கில் 22.2.2000 அன்று 1999 ஆம் ஆண்டுக்கான
சாகித்திய அகாதெமி விருதுகள் வழங்கும் விழாவில் அகாதெமியின் தலைவர் ரமாகாந்த் ரத்
அப்துல் ரகுமானுக்குத் தமிழுக்கான விருதை வழங்குகிறார்

## கவிஞருக்கு வேந்தர்கள் பாராட்டு



மாண்புமிகு தமிழக சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அப்துல் ரகுமானுக்குச் சால்வை அணிவித்து நினைவுப் பரிசு வழங்குகிறார். (இடமிருந்து) முனைவர் இரா. மோகன், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், முனைவர் கதிர். மகாதேவன், முனைவர் தமிழண்ணல், பேரவைத் தலைவர் பி.டி.ஆர்., கவிஞர் சிற்பி, மதுரை காமராஜ் பல்கலைக் கழக துணைவேந்தர் முனைவர் மு. சாலிகு.

படிப்பகம்

www.padippakam.com

செம்மணி



புதைக்கப்பட்ட கடைசிச் சொற்களை
வேர்களாய் நீளும்
எம் தூரிகை கேட்கும்
மவுனம் காக்கும் மனசாட்சிக்கு முன்பு
எரியும் வண்ணங்களில்
முழங்கிக் காட்டும்.

-இன்குலாப்

யாழ் வெளியேற்றம்



சிறகு விரித்து
விதையொன்று அலையும்
முளைக்க ஒருபிடி
மண் தேடி

-இன்குலாப்

பஞ்சம்



ஒரு துளிப் பாலுமின்றி
ஒட்டிய மார்பு...
இது சோமாலியாவின்
தேசப்படம்

-காசி ஆனந்தன்

ஓவியர் புகழேந்தி



நூற்றாண்டின்
தூரிகையிலிருந்து

படிப்பகம்